


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள், 25ம் நாள் (10-09-2022) நிறைமதி வெளியீடு +94 21 221 2739

## திதி கணிக்கும் இணையம்



தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் இறந்தவர்களின் திதி கணிக்கும் இணையம் (www.Pithir.Com) பேரொடுக்க மறைமதி நாள் (செப் 25 2022) அன்று வெளியிடப்படும்

# நீத்தார் கடன் செய்ய சிறந்த திதி நாள் பேரொடுக்க மறைமதி (மகாலயம்)

## இம்முறை புரட்டாசி 8 (செப் 25 2022) ஞாயிற்றுக்கிழமை அன்று நோற்கப்படும்



இராமேச்சரத் தீர்த்தம்

### மானிடப்பிறப்பின் சிறப்பு

**உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்**
**நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்**
**வரைசேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட**
**விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலையாமே**

என்ற திருஞானசம்பந்தர் சுவாமி அவர்களின் பாடலின் படி , எண்பத்து நான்கு நூறாயிரத்தில் ஒன்று (1/8,400,000) நிகழ்தகவில் தான் மனிதராக பிறக்கிறோம். இந்த மனிதப்பிறப்பென்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் கூடிய அருமையான இறைவனின் படைப்பாகும். இந்த ஆறாம் அறிவினை பயன்படுத்தி நிலையான இன்பம் (பேரின்பம்) , நிலையில்லாத இன்பம் (சிற்றின்பம்) போன்றவற்றினை பிரித்தறிந்து பேரின்பப்பெருவாழ்வினை அடையும் வழியினை கடைபிடித்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வினை அடைவதே பிறவிப்பயனாகும்.

இதனையே வள்ளுவரும்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

ஒருவர் இல்லறத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் பொழுது அவரால் தெய்வீக நிலையை அடைய முடியுமா என்ற கேள்விக்கு வள்ளுவர் அழகாகப் பதிலளித்துள்ளார் இந்தக்குறளில். ஒருவர் இல்லற வாழ்க்கையில் வாழ்வதற்கான அடிப்படை நெறிகளை கடைப்பற்றி நெறி தவறாது வாழ்ந்தால் , அதாவது தமிழ் வேதங்களாகிய அறம் , பொருள் , இன்பம், வீடு என்ற அடிப்படையில் அறவழி நின்று பொருளீட்டி இன்பமாக வாழ்ந்து வீடுபெறுதல் என்ற வாழ்க்கை முறையினை கடைப்பிடித்து வாழ்ந்தால் அவர் வானுறையும் தெய்வத்துக்கு நிகராக வைக்கப்படுவர் என்பது பொருள்.

அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்த வர்களுக்கு அவர்களின் திதியில் அல்லது பொதுத் திதியாகிய புரட்டாசி மறைமதியில் விரதமிருந்து படையலிட்டு மற்றவர்களுக்கும் தானம் மற்றும் உணவளித்து எங்கள் வாழ்வினை வளப்படுத்திக் கொள்வோம்.

### மறைமதி (அமாவாசை) தினத்தில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மகாலய அமாவாசை)

வருடத்தில் தைத் திங்கள் மறைமதிப் பிறைநாள் (தை அமாவாசை) மற்றும் ஆடித் திங்கள் மறைமதிப் பிறைநாள் ( ஆடி அமாவாசை) முக்கியமான நாட் களாகும். இத்தினத்தில் விரதமிருந்து , நீர் நிலைகளில் அல்லது கிணற்றில் நீராடி இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அத்துடன் எள்ளுடன் தர்ப்பை புல் சேர்த்து, நீர் இறைத்து , பிண்டம் வைக்கக்கூடியவர்கள் பிண்டம் வைத்து வழிபாடு செய்யலாம். (அண்டத்தில் இருப்பது பிண்டத்தில் இருக்கும் என்பார்கள்).

அத்துடன் ஆண்டுபிறைநாளாக அல்லது ஆண்டுத் திதியாக மற்றும் திங்கள் (மாத) பிறைநாளில் அல்லது திதியில் தென்புலத்தார் வழிபாடு செய்ய முடியாத வர்கள் , பலவருடங்களாக செய்யாமல் விட்டவர்க ளுக்கு ஒரு சிறப்பான செய்தி. கவலையைவிட்டு கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் வருகின்ற மறைமதிப் பிறைநாள் (புரட்டாசி அமாவாசை) தினத்தன்று இந்த வழிபாட்டினை செய்யலாம். முன்னர் குறிப்பிட்டது போல கதிரவனின் தென்புலப்பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது (ஒடுக்க காலம்), ஆகவே இந்த மறைமதிப் பிறைநாள் மேலும் சிறப்பு பெறுகிறது. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் எம்முன்னோர்கள் பூமிக்கு வந்து எமது வழிபாட்டினை மற்றும் படையலை ஏற்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக அவர்களுக்கு அருளூட்டும் வகையில் நாங்கள் வழிபாடுகள், சிவபூசை, சிவமங்கல நீராட்டு, சிவப்பெருவேள்வி, அடியாருக்கு அமுது, மற்றைய உயிரினங்களுக்கு உணவு, பசுவுக்கு உணவு, காக்கைக்கு உணவு படைத்தல் போன்றவற்றினை செய்து பலன்களை பெறலாம்.

இந்நாளில் அனைவரும் விரதமிருந்து சிவனை வழிபட்டு, எங்கள் முன்னோர்களையும் வணங்கி அவர்களின் அருளாசிகளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ வழியமைப்போம். பெற்றோரின் அல்லது உறவினர்களின் திதி தெரியாதவர்களும் இந்நாளில் விரதமிருந்து பிதிர்க் குற்றங்களில் (பித்துரு தோஷம்) இருந்து விடுதலை பெறலாம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**



பாலாவித் தீர்த்தம்



## இரண்டாம் ஆண்டில் தென்னாடு தெய்வத்தமிழ் இதழ்

சைவத் தமிழர்களுக்கு ஒரு திங்கள் இதழ் வேண்டும் என்ற அடிப்படையிலும், குறிப்பாக மாணவர்களுக்கு சைவத்தினை எடுத்துச் செல்லும் நோக்குடனும், சைவ நிகழ்வுகளின் ஒரு பதிவேடாகவும் தொடங்கப்பட்ட தென்னாடு திங்கள் இதழ் இம்முறை இருபத்து நான்காவது இதழாக வெளிவருவதுடன் மூன்றாவது வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கிறது.

ஒவ்வொரு திங்களும் நிறைமதி நாளில் வெளியிடப்படும் தென்னாடு பலவகையான ஆக்கங்களை தாங்கி வருகிறது. குறிப்பாக ஈசனைத் தேடி, சிவபூமியில் சிவனைத் தேடி, ஈழத்து சித்தர்கள் வரலாறு, நாயன்மார்கள், ஆசிரியர் தலைப்பு குறிப் பாக சிறுவர்களை ஊக்குவிக்கும் முகமாக அடுத்த தலைமுறை ஆசிரியர் தலைப்பு, என்று பலவற்றை தாங்கி நிற்கிறது.

மின்னிதழாக மட்டுமல்ல, அச்சுப்பிரதியாகவும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஒரேயொரு சைவ திங்கள் இதழ் தென்னாடு. கொரோனாப் பெருந்தொற்று மற்றும் தொடர் கடும் பொருளாதார நெருக்கடியிலும் தொடர்ச்சியாக அச்சிட்டு வெளியிடப்படுகிறது. தென்னாடு வெளியீடு மென் மேலும் தொடர எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானின் திருவருள் துணைநிற்கட்டும்.

இந்த இதழுக்கு ஆக்கங்கள் மற்றும் ஆதரவை நல்கும் அனைவருக்கும் தென்னாட்டின் நன்றிகள். பிரதம ஆசிரியர் தென்னவன் பார்த்தீபன் மற்றும் ஆசிரியர்களான தென்னாடு நிலவன், சிவத்திரு. சிவ.செந்தமிழாதன் மற்றும் சிவத்திரு. சிவ. யாழவன் சிவவேதன் அவர்களுக்கும் நன்றிகள். அத்துடன் இரண்டு வருடங்களாக எங்களின் இதழை வடிவமைக்கும் சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் மற்றும் தயா, மதி கலர்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். கலப்படம் இல்லாத தமிழ் தமிழர்களிடையே மீண்டும் பரவ தென்னாடு துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**



# எந்நிதியும் தந்திடும் செல்வச் சந்நிதி வேலனுக்குப் பெருந்திருவிழா

தொண்டமணாறு தீர்த்தக்கரையில் ஒற்றை மணிக்கோபுரத்துடன் ஓங்காரமாய், அடியார்களிற்கு அளவிலா அருளை திருநீற்றுடன் கலந்து அன்னமாக அருளிடும், செல்வச் சந்நிதியில் உறைகொள்ளும் தென்கயில் வேலனின் பெருந்திருவிழாவானது, கடந்த ஆவணித்திங்கள் 11ம் நாள், வளர்பிறை ஒருமைப் பிறைநன்னாளில் (ஆகஸ்ட் 27) அன்று, கந்தவடிவேலனின் திருவருள் கூட, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 14ம் திருவிழாவாகிய, வருகின்ற ஆவணித் திங்கள் 24ம் நாள்(செப்டெம்பர் 09) செல்வச் சந்நிதி வேலன் திருத்தேரில் காட்சி தர இருக்கின்றார். ஆற்றிலே அடித்து வரப்பட்ட கந்தனின் அற்புதத் தேர் வடத்தை பிடிக்க, தொண்டமணாற்றங்கரையில் அலை அலையாய் மக்கள் திரள்வார்கள்.

அடுத்தநாளாகிய, ஆவணித் திங்கள் 25ம் நாள், பழம்பெரும் பெருமைமிக்க தொண்டமணாற்றங்கரையில், அடியார்களில் அருள் வெள்ளத்துடன், கந்தவேலனுக்கு தீர்த்தத் திருவிழாவானது இடம்பெறவுள்ளது. அன்று மாலை கொடியிறக்கப்பட்டு, 15 நாள் பெருந்திருவிழாவானது நிறைவுபெறும்.

சித்தர்களும், யோகிகளும் வாழ்ந்த இந்த, செல்வச் சந்நிதி சூழலானது இறைமணம் கமழும் பூமியாகும். இங்கு இன்றும் பல யோகிகள் தங்களது, முத்தி வேண்டி, நிலைகொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஆதரவற்றவர்களை அரணவணைக்கின்ற செல்வச் சந்நிதியான் பதியேலே, இன்றும் பலர் சந்நிதியானை நாடி வாழ்ந்து வருகின்றனர்.

வருடம் முழுவதும் அடியார்களிற்கு அமுது செய்விக்கும் சிவப்பணியானது, சந்நிதியில் இடம்பெறுகின்றது. இதனால் **“அன்னதானக் கந்தன்”** என்றும் அழைக்கப்படுவார். கதிர்காமத்துடன் மரபுவழித் தொடர்புகளை கொண்டிருப்பதால், “செல்லக் கதிர்காமம்” என்று சிறப்பு பெறும் கோயிலாக செல்வச் சந்நிதியார்த் திருக்கோயில் திகழ்கின்றது. இவ்வாறு அரும்பெரும் பெருமைகள் கொண்ட, செல்வச் சந்நிதிப் பெருமானின், பெருந்திருவிழாவில் கலந்து, முருகப்பனின் திருவருள் உய்வோமாக!

**ஏறுமயிலேறி விளையாடும் முகமொன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசும் முகமொன்றே**
**கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகமொன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே**
**மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே**
**வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே**
**ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்**
**ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.**

**திருச்சிற்றம்பலம்**



**செய்தித் தொகுப்பு**
**சிவத்திரு. தென்னாடு நிலவன்,**
**தென்னாடு செய்தி ஆசிரியர்.**
nilavan@thennadu.org | +94 70 770 1111

## தென்னாடு ஐம்பூதநாதர் திருவருளால் இங்கிலாந்தில் உள்ள உச்சிமுருகன் திருக்கோயிலுக்கு அர்ச்சகராக செல்லும் உயிரொளிசிவம் பிரதாபனார்



கிழக்கே நன்னீர் குளமும், தெற்கு,மேற்கே சகோதரத்துவமும், வடக்கே இருபெரும் ஆறுகளும் அதற்கிடையே பச்சைப்போர்வையால் போர்த்திய நெல்மணிவயல்களும் நிரம்பிய ஓர் அழகிய கிராமான, அம்பாறை இறக்கமத்தில், மாணிக்க மடுவைச் சேர்த்தவரே, சிவத்திரு. உயிரொளிசிவம் பிரதாபனார் அவர்கள். அவர் தமிழின் மீதும் தமிழ் வழிபாட்டின் மீதும் கொண்ட காதலால் தமிழ் வழிபாட்டில் அவரது பயணத்தை தொடங்கினார்.

இறைதிருவருளின் விளைவாக, தமிழ் வழிபாட்டிற்காக ஓர் பாட நெறியினை வகுத்த, செந்தமிழ் வேள்விச்சதுரர் மு.பெ.சத்தியவேல்முருகனார் (தெய்வத் தமிழ் அறக்கட்டளை), அகில இலங்கை சைவ மகாசபை, சைவநெறிக்கூடம் ஆகிய அமைப்புகளும் மற்றும் மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயா எனும் பெருந்தகையினர், இணைந்து, 08.04.2014 அன்று, நாடாத்திய தமிழ் வழிபாட்டுப் பயிற்சியில் பயிலும் வாய்ப்பு கிட்டியதால், யாழ் கொக்குவில் தங்கி பயின்று முடித்தார்.

தமிழ்மறை ஞானம் பெற்ற இவர், “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற நோக்கோடு பலருக்கும் தமிழ் வழிபாட்டை அறிமுகம் செய்து, தமிழில் வழிபாட்டை பயில்வித்தார். இவரிடம் 1000 இற்கும் மேற்பட்டோர் சைவத்தமிழ் தீக்கைகள் பெற்று பேறடைந்துள்ளனர். இவ்வாறான தமிழ் வழிபாட்டை கற்பிக்கும் நோக்குடன், தென்னாட்டோடு இணைந்த இவர், தென்னாட்டிலும் பல மாணவர்களுக்கு தமிழில் பூசைக் கிரியைகளை கற்பித்து, தீக்கைகள் வழங்கியுள்ளார். மேலும் தென்னாட்டினுடைய குடமுழுக்குகள், கிரியைகளை முன்னின்று தெய்வத்தமிழில் நாடத்தி வழங்கியுள்ளார்.

இவ்வாறு இரண்டு வருடங்களாக தென்னாட்டுடன் பயணித்த இவர், இங்கிலாந்து செல்லவுள்ளமை தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானின் திருப்பெருங்கருணை ஆகும். அவர் இங்கிலாந்து மாநகரம் சென்று, சைவத்தமிழ் பணிகளுக்காய் தன்னை அர்ப்பணித்து செயலாற்ற எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருள் கைகூடட்டும்.

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!**

**திருச்சிற்றம்பலம்**

## சைவத்தமிழ் வளர்க்கும் முயற்சியில், உதித்துள்ள ‘சைவ முரசு’




இரட்டைத் திங்கள் சைவத்தமிழ் ஏடாக வெளிவந்துள்ள “சைவ முரசு“ இதழானது, நல்லூர் சப்பரத் திருவிழாவன்று, (24.08.2022 ) மாலை 3 மணியளவில் நல்லூர் தேரடியில், அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் வைத்து வெளியிடப்பட்டது. சிவயோக சுவாமிகள் தவம் இயற்றிய, இறை சிவனுக்கு மிக உவந்த தலவிருட்சமான நல்லூர் தேரடி வில்வ மரத்தடியில் இதழினை வைத்து வழிபாடு இயற்றி வெளியிட்டனர். தொடர்ந்து அறுபத்து மூவர் மடத்தில் பிரதிகள் வழங்கலும், சிவசங்கம ஒன்றுகூடலும் எளிமையாக இடம் பெற்றது.

இறை ஆகமமாகிய திருமந்திரம், இறைவேதமாகிய தேவார திருவாசகங்கள், உள்ளிட்ட சைவத்தமிழ் நூல்களில் மிக ஆழமான மெய்யியல் கருத்துக்களும் அதனைக் கடந்து வாழ்வியல் அம்சங்களையும் மிகவும் அழகாக கூறப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து தமிழ்ச் சைவத்தைப் பற்றிய ஆழமான புரிதலை இலகுலான முறையில் எம் நாயன்மார் வாழ்ந்து காட்டிய வழி முறைகளோடு இளையோருக்கு கொண்டு சேர்க்கும் நோக்கோடு இந்த சைவத்தமிழ் இரு திங்கள் ஏடு மலர்ந்துள்ளது.

எழுதுவதற்காகத் தேடும் போது புத்தகங்கள் புரட்டப்படும், உறங்கிக் கிடக்கும் சைவத்தின் உண்மைகள் வெளியே வரும். பட்டங்களுக்காகப் படிப்பது என்பதை தாண்டி, படைப்பதற்காகப் படிப்பது என்ற நிலையே ஆழமானதும் அகலமானதும் தேவையானதுமாகும். அத்தகையதாக, தவத்திரு. யோகர் சுவாமிகள் தவமிருந்த இடத்தில் வைத்து வெளியாகியுள்ள, இந்த “சைவ முரசு“ எனும் ஏடு பல திங்கள் தொடர்ந்து, பலவாறு அடியார்கள் பயன்பெற்று உய்திட, எம்பெருமான் திருவருள் கைகூடட்டும்.

## பரம்பொருளை அடையும் வழிகாட்டியாக அமையும் “சுத்த சைவம்” நூல் வெளியீடு

1300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் சமூக கட்டுப்பாடுகளின் தாக்கம் பெரும்பான்மையாக இருந்தது என வரலாறெழுதும் போக்கு இன்று நிலவி வருகிறது. இஃது உண்மையெனில் ஆதிசைவ அந்தணர் குலத்திலே பிறந்து, வேறு குலத்தில் திருமணம் செய்த மகான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையே! ஆகவே சிவத்தத்துவத்தை ஏற்றுக்கொண்ட அனைவரும் அன்றிலிருந்தே சாதி ஃ வர்ணம் நீங்கியவர்கள் என்பதும் சிவபெருமானின் முன்பு அனைவரும் சமம் என்பதும் ஆரூரர் தொகுத்து செய்த திருத்தொண்டர் தொகை உரைக்கும் தகவல்.

இதுவரைகாலம் “மரபாக“ இருந்து வரும் சைவப் பாரம்பரியம் இனி வருங்காலங்களிலும் “மரபுச் சைவமாகவே' தொடர வேண்டும் எனும் கருத்தினை மிக விரிவாக விளக்கி




செய்த “சுத்த சைவம்“ எனும் நூலானது, நம்பியாரூரர் அவர்களது குருபூசை திருநாளில் (ஆகஸ்ட் 5ம் திகதி 2022), அவர் பிறந்த திருநாவலூரில் உள்ள திருத்தொண்டீச்சரமான இராஜாதித்தீச்சரமுடைய இறைவன் திருவடிகளிலும், எம்பிரான் ஆளுடைய நம்பிகள் திருவடிகளிலும், அவரை ஆட்கொண்ட திருவெண்ணைநல்லூர் தடுத்தாட்கொண்ட நாயகர் திருவடிகளிலும், சைவ சித்தாந்த மரபின் பிரதம பரமாசாரியாரான மெய்கண்ட சிவனாரின் திருவடிகளிலும், துவிதீய பரமாச்சாரியரான அருணந்தி சிவனார் திருவடிகளிலும் வைத்து வழிபாடாற்றப்பட்டு, புனிதர் பேரவையினால் வெளியிடப்பட்டது.

பரம்பொருளை அடையும் வழிகாட்டியாக அமையும், இந்த ‘சுத்த சைவம்’ நூலினை, இலங்கையில் இலங்கை சைவநெறிக் கழகம் வெளியீடு செய்ய இருப்பதும் குறிப்பித்தக்கதாகும்.

இப்புத்தகத்தினை பெற விரும்புவோர் +91 9442271042 என்ற தொடர்பிலக்கத்தின் புலனச் செயலி (WhatsApp) ஊடாக தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# வாசகர்களுக்கு ஒரு மடல்!

**தென்னாடு இதழின் வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்தத் தென்னாடு இதழ் தனது இரண்டாவது வருட பயணத்தை இனிதே ஆரம்பித்துள்ளது என்பதை பேருவகையுடன் உங்களுக்கு அறிவிக் கின்றோம். ஈழவளத் திருநாட்டில் தனித் தமிழில் ஒரு சைவ இதழ் திங்கள்தோறும் இலவசமாக வெளியிடப்படுகின்றது என்றால், அது **'தென்னாடு'** திங்கள் இதழாக மட்டுமே இருக்க முடியும்.

இது புகழ்ச்சி அன்று, மாறாக சைவத்தமிழ் மக்கள் எல்லோருக்குமான அறிவித்தலே ஆகும். மின்னியல், இணைய, சமூக வலைத்தளப் பாவனை செறிந்து போன இக்காலத்தில், அச்சுப்பணி என்பதும், எழுத்துப்பணி என்பதும் அருகிவிட்டது என்ற கவலையைப் போக்கவும், இளைய சைவப் பிள்ளைகளிடம் வாசிப்பையும் சமய நாட்டத்தையும் இன்னும் அதிகரிக்கவும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் இப்பெரும் முயற்சி, சிவமடத்தின் நிறுவுனர், சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் அவர்களின் அயராத முனைப்பினால், இரண்டு ஆண்டுகளை எட்டிப் பிடித்திருக்கின்றது.

சீர் வளர் சீர் ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் போன்றவர்கள் கட்டி வளர்த்த சைவப் பாரம்பரியத்தின், அச்சுப்பணியையும், எழுத்துப்பணியும், தொடர்ச்சியாக இந்த மண்ணிலே வேரோடச் செய்ய வேண்டியது, சிவபூமியில் பிறந்த எம் எல்லோருடைய தலையாய கடமை ஆகும். அவ்வப்போது தொகுப்புகளும், நூல்களும் வெளிவந்தாலும் திங்கள்தோறும் இதழ்கள் இன்னும் வெளிவரவேண்டும். எழுதுவதற்காகத் தேடும் போது புத்தகங்கள் புரட்டப்படும், உறங்கிக் கிடக்கும் சைவத்தின் உண்மைகள் வெளியே வரும். பட்டங்களுக்காகப் படிப்பது என்பதை தாண்டி, படைப்பதற்காகப் படிப்பது என்ற நிலையே ஆழமானதும் அகலமானதும் தேவையானதுமாகும்.

அன்பான சைவத்தமிழ் உறவுகளே, தனித்தமிழ் வழிபாடும், சித்தாந்த சைவத்தின் ஒழுக்கலாறுகளும் தான், திசைமாறிப் பயணிக்கும் இளைய பிள்ளைகளின் பாதைகளை மாற்றி, நன்னடத்தையும், நற்பண்புகளையும், உயர்ந்த அறிவையும், தெளிந்த ஞானத்தையும் அவர்களுக்கு விளங்கும் படி உண்டாக்கும் என்பதை நாம் உணரவேண்டும். அந்த உன்னத நோக்கத்தை அடைய இறைவன் திருவுளத்தினாலே உருவாகி, அருள்நெறி பரப்பும் தென்னாடு சிவமடத்தின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். தனித் தமிழில் சித்தாந்த எல்லைகளை மீறாது எழுதும் எழுத்தாளர்களுக்கு, களம் அமைத்துக் தருவதற்கு 'தென்னாடு' திங்கள் இதழும் என்றும் முன்னிற்கும்.

ஏட்டுக் கல்வியில் உயர்ந்து, பெரும் பொருள் சேர்த்து, வாழ்வதிலும், ஞானக் கல்வியில் சிறந்து பெரும் அருள் சேர்த்து வாழ்வதென்பது அரிதானது. ஆனந்தமயமானது. பதிஞானம் நோக்கிய பயணமே வாழ்வை செம்மைப்படுத்தும், அதற்கு ஞானநூல்கள் வழிகாட்டும். அத்தகு ஞான நூல்களில் நாட்டம் கொண்ட இளையவர்களையும் 'தென்னாடு' திங்கள் இதழ் அன்புரிமையுடன், இந்த இரண்டாவது ஆண்டிலே அழைக்கின்றது.

ஒரு பெரும் பயணத்தின் சாதனைப்படிகளை, 'தென்னாடு' தன் ஆழமான தடங்களைப் பதித்துக் கடக்கின்றது. ஈழமணித் திருநாட்டில் இதுவரை காலமும் இல்லாத, பதிப்பு முயற்சியாகவும், இலவச வழங்கல் ஆகவும், இறைப் பணி செய்வதென்பது எளிய காரியமன்று. நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியால் எழுந்துள்ள காகிதாதிகள் விலையேற்றம், அச்சுப் பதிப்பிப்பதற்கான கருவி, கூலி என்பவற்றின் உயர்வு எங்கள் மீதும் அழுத்தாமலில்லை. அவற்றுக்கு மேலாகவுமும், ஐம்பூதநாதனின் அருளும் இப்பணியை காக்க வேண்டும் என்ற திருவுளமுமே எம்மைக் கருவிகளாக வைத்து, உந்துகின்றன எனலாம்.

எனவே இப்பெரும் பணிக்கு என்றும் ஆதரவு நல்கி, சைவத்தமிழ் சொத்தாக வெளிவரும் 'தென்னாடு' இதழைப் பாதுகாத்து, இளைய தலைமுறையினருக்கும் இனிவரும் தலைமுறையினருக்கும் இனியது செய்வோமாக!

**திங்கள் உலாவும் செஞ்சடையான்**
**திருவுளத்தால் நிலைபெற்று**
**எங்கள் கைகளில் 'தென்னாடு'**
**அருமருந்தாய் ஞானம் நல்க**
**பொங்கு தமிழ் சிறந்திடவே**
**மருள் நீங்கி இளையோரேல்லாம்**
**சங்கமென இங்கு சார்ந்து இன்புறுகவே!**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# இனி எதிர் காலத்தின் சிறப்பும்

ஈழத்துத் தில்லையாம் நல்லை நகர் பெருந்திருவிழாக் கண்டு ஓய்ந்திருக்கின்றது. கிட்டத்தட்ட இரண்டு வருடங்களின் பின்னர் இடம்பெற்ற இத்திருவிழா, வரலாற்று அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தது. அவற்றுள் முதலாவது விடயம் குமார வாயில் கோபுரம் குடமுழுக்குச் செய்யப்பட்டமை. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் திருக்கார்த்திகைத் திருவிழாவின் போது, கோயிலின் குமார வெளிப்பகுதியில் அமைக்கப்பட்ட குமார வாயில் கோபுரம் குடமுழுக்குச் செய்து வைக்கப்பட்டது.

நல்லைக் கந்தனின் திருக்கோயிலைச் சூழ அறுபடை வீட்டின் அமைப்பில் கோபுரம் எழுப்ப வேண்டும் என்பது நல்லூரின், முன்னாள் அறங்காவலரும் நிர்வாகத் தலைவரும் ஆன இராகுநாத குமாரதாச மாப்பாண முதலியாரின் பெரு விருப்பு. அந்த விருப்பைப் பிரதி பலிக்கும் நோக்கில் எம்பெருமானின் குமார வாயில் கோபுரம் கார்த்திகைத் திருவிழாவின் போது குடமுழுக்குக் கண்டது மிகமுக்கியமான நிகழ்வு. ஆறுமுகப்பெருமான் பேரொலி முழங்க எழுந்தருளி அடியவர்கட்கு அருள் பாலித்து வீதியுலா வந்த அழகு தேவரும் காண முடியாப் பேரழகு.

இரண்டாவதாக நல்லைக்கந்தனின் இம்முறைத் திருவிழாவில் தீந்தமிழ்ப்பாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியிருந்தமை மிகப்பெரிய சிறப்பம்சம் ஆகும். கோயிலின் தெய்வீகச் சூழலை மேலும் மெருகேற்றி அடியவர்களை எம்பெருமானுடன் ஒன்றச் செய்த அற்புதமான இச்செயல் வரவேற்கத்தக்கது.

போர்த்துக்கேயரால் நல்லைக்கந்த சுவாமி கோயில் அழிக்கப்பட்ட பின்னர், இப்போது உள்ள கோயில் மடாலயமாகவே எழுந்தது. ஆரம்பத்தில் கந்தபுராணப் படிப்பு இடம்பெறும் மண்டபமாகவே இது காணப்பட்டதாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. அந்த வகையில் அதன் தோற்றத்தின் காரணமும் இம்முறை செம்மைப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

மூன்றாவது விடயம் எம்பெருமானின் சித்திரத் திருத்தேர் வெள்ளோட்டம் கண்டமை மிக முக்கியமான நிகழ்வாகும். எம்பெருமானின் தேர் வரலாற்றில் மிகமுக்கியமான ஊர்தியாகும். தேரைச் சூழ்ந்துள்ள தேரடிப் பகுதியானது, செல்லப்பா சுவாமிகளின் நினைவலைகளை இன்றும் தாங்கி இருக்கும் புனித இடமாகும். நல்லைக்கந்தனின் தேர்த்திருவிழா ஏனைய திருவிழாக்களின் தலைமை விழாவாகும்.

இலங்கை மாத்திரமின்றி புலம்பெயர் தேசங்களிலும் இருந்து வரும் தமிழர் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொள்வர். சரியாக காலை எழு மணியளவில் எம்பெருமான் வெளியே எழுந்தருளி தேரை நோக்கிப் புறப்படுவார். இத் திருக்காட்சியைக் காணுவதற்காக மொத்தத் திருக்கூட்டமும் தவங்கிடக்கும். அத்துணை சிறப்பு வாய்ந்த நல்லைக்கந்தனின் சித்திரத்தேர் சில திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு, தேர்த்திருவிழாவின் முதல் நாள் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டது. இதுவும் வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும்.

அத்தோடு இம்முறை இடம்பெற்ற வைரவர் திருவிழாவின் போது உருவத் திருமேனி தாங்கிய வைரவப் பெருமான் உலா வந்ததோடு, புதிய ஞமலி வாகனத்தின் (வைரவ வாகனத்தின் ஒரு வகை) மீது எழுந்தருளினார். வழமையாக சூலப்பெருமானே எழுந்தருளி அருள்பாலிப்பார், ஆனால் இம்முறை திருவுருவத் திருமேனியுடன் ஆனந்தக் கோலத்தில் காட்சி கொடுத்தமை இன்னோர் சிறப்பம்சமாகும்.

இதை விட மிகப்பெரும் மாற்றம் குமாரதாச மாப்பாண முதலியார் காட்சியளிக்கும் இடத்தில் அதே சைவப்பற்றுடன் சயந்தன் மாப்பாண முதலியார் இம்முறை காட்சியளித்தார். அதே வெண்மை ஆடையுடன், வெண்ணீற்றுடன், தந்தையின் இடத்தில் மைந்தன் காட்சியளித்ததும் மாபெரும் மாற்றமாகும். காலங்கள் கடந்தொடுவதும் மாற்றங்கள் நிகழ்ந்தேறுவதும் இயற்கையின் விதி தானே. நம் தெய்வச் சேக்கிழார் கூட திருஞானசம்பந்தர் புராணத்தில்,

**"கடந்த காலத்தின் பழுதிலாத் திறமும்**
**இனி எதிர் காலத்தின் சிறப்பும்"**

என்று கால ஓட்டத்தின் அழகைக் காண்பியப் படுத்துகின்றார்.

சிவபூமியாம் ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்திலே கொக்குவிலில் இருந்து வெளிவரும் தென்னாடு திங்கள் இதழ் தன்னுடைய இரண்டு வருட பூர்த்தியை எட்டியிருக்கின்றது. மாற்றங்கள் நிகழ வேண்டியது காலத்தின் கட்டாயம். அவை செம்மைப்படுத்தப்பட்ட முறையில் நிகழும் போது, வெற்றி கனிந்து வீழும். சேக்கிழார் சொன்னது போல இனி எதிர்காலத்தின் சிறப்பே, வெற்றியின் வீழ்படிவு ஆகும். தன்னுடைய பயணத்தில் பல பல மாற்றங்களுக்கு உட்பட்டு, செம்மையான ஆக்கபூர்வமான சைவச் செய்திகளைத் தாங்கி, சிவசிந்தனையுடன் பயணித்த, 'தென்னாடு' திங்கள் இதழ் கடந்த காலத்தின் பழுத்திலாத் திறம் போல் இனி எதிர் காலத்திலும் சிறந்து விளங்க, எல்லாம் வல்ல ஐம்பூதநாதப்பெருமானும், நல்லைக் கந்தனும் துணை நிற்க வேண்டி இறைஞ்சுகின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாடு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில் மற்றும் செந்தமிழ் ஆகம சிவமடம்

திருச்சிற்றம்பலம்

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை**

**தென்னாடு:**

தென்னாடு என்பது கடல்கொண்ட தென்னாடு என்று அறியப்படும் நாற்பத்து ஒன்பது நாடுகளைக் கொண்ட தமிழரின் பண்பாடு, மொழி,வாழ்வியல் ஆகமம்,அறிவியல், தொழில்நுட்பம், வானியல், உலகியல் என்று உலக நாகரிகத்திற்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்த ஆதித் தமிழர் நிலப்பரப்பின் அடையாளம்.

**அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி**
**வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு**
**தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி**
*- (சிலப். 11:17-22)*

**மன்னு மாமலை மகேந்திரம் அதனில்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்**
*- (கீர்த்தித் திருஅகவல் வரி 10)*

மகேந்திரமலை என்பது கபாடபுரத்தருகே இருந்ததாக வான்மீகி முனிவர் தான் எழுதிய இராமாயணத்தில் குறிப்பிடுகிறார். இந்த கபாடபுரமும் தென்னாட்டின் ஒரு பகுதியே.

**பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல்**
**உலகினில் உயிர் வாழ்க்கை**
- திருக்கேதீச்சரத் திருப்பதிகம்

**அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு**
**மொழிந்த வாயான் முக்கண் ஆதிமேயது முதுகுன்றே**
- சம்பந்தர் தேவாரம்

**அரித்தானை ஆலதன் கீழ் இருந்து நால்வர்க்கு**
**அறம் பொருள் இன்பம் வீடு ஆறங்கம் வேதம்**
**தெரித்தானைத் திருநாகேச்சரத்து உளானைச்**
**சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே**
- திருநாவுக்கரசர் தேவாரம்

**அன்றாலின் நிழல்கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து**
- சுந்தரர் தேவாரம்

**நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை**
**அன்றாலின் கீழ் இருந்தங்கு அறம் உரைத்தான் காணேடீ**
**அன்றாலின் கீழ் இருந்தங்கு அறம் உரைத்தான் ஆயிடினும்**
**கொன்றான் காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ**
- திருவாசகம்

**போர்த்த நீள்செவியாளர் அந்தணர்க்குப் பொழில்**
**கொள் ஆல்நிழல் கீழ் அறம் புரிந்து**
- சுந்தரர் தேவாரம் (7.55.7)

**அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே**
- அருணகிரிநாதர் திருப்புகழ்

இப்படிபட்ட எங்கள் பண்பாட்டின் ஆதியினையும் அடையாளத்தினையும் ஒரு சிற்றுருவாக்கப்பட்ட வடிவமாக காட்டும் நோக்குடன், கடல்கொண்ட தென்னாட்டின் கடலுக்கருகில் உள்ள சிவபூமியாம் இலங்கைத் தீவினில் உருவாக்கப்பட்டதே இந்தத் "தென்னாடு" அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில் மற்றும் செந்தமிழ் ஆகம சிவமடமும் ஆகும்.

**தென்னாட்டிலே,**

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் பரந்தவனும்,**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தவனும்,**
**தீயிடை மூன்றாய் திகழ்ந்தவனும்,**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தவனும்,**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தவனும்,**
**அருக்கனில் சோதி அமைத்தவனும்,**
**வெண்மதி தண்ணொளி தந்தவனும்,**
**உயிருக்குள் உயிராய் நிற்கின்றவனும்,**
**ஆதியும் அந்தமும் இல்லாதவனும்,**
**அரும்பெரும் சோதியாக திகழ்கின்றவானுமாகிய,**

தென்னாடுடைய சிவனை, ஐம்பூதநாதாராக கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளச் செய்து, மேலே குறிப்பிட்டது போல் நால் வேதங்களும் அவற்றுக்குத் துணையாக நிற்கும் ஆகமங்களும் எங்கே தோன்றினவோ, அந்த சிற்றுருமாதிரி இடமாகிய இந்தத் தென்னாட்டில் அந்த செந்தமிழ் வேதங்கள் மற்றும் செந்தமிழ் ஆகம முறைப்படி இறைவனின் திருச்செவிகள் குளிரும் வண்ணம் வழிபாடு நடைபெற வேண்டும் என்ற திருவருளின் எண்ணப்பாட்டிற்கு வடிவம் கொடுத்து எழுப்பப்படுகின்ற திருக்கோயிலே தென்னாடு. தென்னாட்டில் தலமரமாக கல்லாலமரமும், தீர்த்தமாக பஃறுளித் தீர்த்தமும் விளங்கும். அத்துடன் ஆலமர் செல்வரும் அவரிடம் அறம் பயின்ற முனிவர்களின் சிலைகளும் நிறுவப்படும்.


அப்பர் பெருமான், **"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்"** என்று சிவபெருமானைப் புகழ்ந்துள்ளார். மாணிக்கவாசகப் பெருமான் திருக்கோவையாரில், **"சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீண்தமிழ்"** என்று பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் திருப்பாசுரத்தில் **"அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்"** என்று கூறியுள்ளார். அதனை தெய்வசேக்கிழார் அவர்கள் **"கூடல் மாநகரத்துச் சங்கம் வைத்தவன்"** என்று பாடியுள்ளார். பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடல் புராணத்தில், **'கண்ணுதல் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்'** என்று பாடியுள்ளார். இவை எல்லாவற்றையும் உற்றுநோக்கினால் எம்பெருமானே முன்னின்று சங்கம் வளர்த்து தமிழ் ஆய்ந்தார் என்பது கண்கூடாகிறது.

அதன் அடிப்படையில், கண்ணுதற்பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பசுந்தமிழின் முதற் சங்கமாகிய தென்மதுரை மற்றும் இடைச் சங்கமாகிய கபாடபுரம் நினைவாக கற்றளிச் சங்கக் கூடங்களும் அமைக்கப்படும். தமிழரின் வரலாற்று நீட்சியைப் பிரதிபலிக்கும் ஒரு அடையாளக் கோயிலாக தென்னாடு திகழும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் நாயன்மார்கள், சந்தானக் குரவர்கள், சித்தர்கள் மற்றும் ஈழத்துச் சித்தர்கள் சிலைகளும் வைக்கப்படும். மேலும் திருமுறைக் கோயிலும் உருவாக்கப்பட்டுத் திருமுறைகள் பூசையில் வைத்து வணங்கப்படும்.

**திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகாகும்**
**திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்**
**திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்**
**திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்.**


திருச்சிற்றம்பலம்



**தென்னவன் பார்த்தீபன்**
**நிறுவுனர் - தென்னாடு செந்தமிழாகம சிவமடம்**

# தமிழர் வழிபாடும் தமிழில் வழிபாடும்!





சிவ.செந்தமிழாதன்
(ஜீவா.ஷஜீவன்)

தமிழினத்தின் வரலாறு நீண்டது. புதிய ஆய்வுகள் மூலம் இதுவரைகாலமும் அறிந்த தமிழர் வரலாற்றின் தொன்மை இன்னும் பன்னெடுங்காலங்களுக்கு முற்பட்டதாக துணியப்படுகின்றது. குறிப்பாக, கி.மு 3ம் நூற்றாண்டில் தொடங்கும் தமிழர் வரலாற்றுக் காலமானது, கீழடி அகழ்வாராய்ச்சியினால், கி.மு 6ம் நூற்றாண்டு வரை முன்சென்றுள்ளமையைக் காணலாம். எனவே வைகைச் சமவெளி நாகரிகமானது, கங்கைச் சமவெளி நாகரிகத்துக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்து. இங்ஙனம் உலகின் தொன்மையான நாகரிகம் பெற்ற, அறிவில் உயர்ந்த ஒரு பேரினமாக, அழிந்து போன குமரிக் கண்டம் முதல், இந்தியாவின் வட கோடி வரை பரவி வாழ்ந்த தமிழர்களே உலக நாகரிகத்தின் உற்பத்திப் புள்ளிகள் ஆகின்றனர். எமது தமிழ் மொழியே உலக மொழிகளுக் கெல்லாம் தாயான மொழியாகி முன்நிற்கின்றது.

பழமையான ஒரு இனம், பண்பட்ட ஒரு இனம், தனக்கான தத்துவங்களையும், ஒழுக்கங்களையும் தன்ன கத்தே கொண்டிருக்கும். அவை சட்டங்களாக நடைமுறை களாகப் பரிணமித்து வரும். அவை ஒவ்வொரு தனிமனிதர் களுடைய வாழ்விலும் ஏதோ ஓர் விதத்தில் பின்னிப் பிணைந்திருக்கும். அத்தத்துவங்களை மீற நினைத்தாலும், அந்த ஒழுக்க வரம்பில் இருந்து விலக நினைத்தாலும், புரையோடிப்போன அவை ஏதோ ஓர்வடிவில் குறித்த விடத்தில் உள் நின்றே வெளிப்படும். இத்தகு சிறப்பு வாய்ந்த உயிரோடு கலந்த நடைமுறைகளாக தமிழரின் வழிபாட்டை நாம் காண்கின்றோம். எதுவும் தோன்றும் போதே செம்மைப்பட்டு தோன்றியவை அல்ல. உலக அனுபவங் களாலும், மெய்யியலுக்கான ஞானத் தேடலாலும் தோன்றியவை சிறக்கும். அனுபவப்பட்டு ஆன்மா தன்னிலை உணர, பதியாகிய இறைவன் தன் பெருங்கருணையால் அறிவு கொடுத்து அருள்வான். இதனை தமிழர் வழிபாட்டுடன் ஒப்பிடலாம். இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, கிராமியத் தெய்வ வழிபாடு, பண்பட்ட கோயில் வரலாறு என்ற ஒழுங்கில் தமிழர் வழிபாடு தன்னைத் தானே செம்மைப்படுத்திக் கொள்ள இறைவன் அருளாளர்களையும், ஆற்றலாளர்களையும் உவந்தளித்தான். வேத ஆகமங்களைத் தானே தலைவனாய் நின்று இறைவன் போதித்து அருளினான்.

கண்ணுதற் பெருங்கடவுளாகிய இறைவன் கழகமாகிய தமிழ் சங்கத்தில் இருந்து அனைத்தையும் வகுத்துக் கொடுத்தான் என்பது வரலாறு. அச்சங்ககாலம் தமிழர் வாழ்வில் பொற்காலம் என்கின்றனர் ஆய்வாளர்கள். அங்கு நல் ஒழுக்கமும், சிறந்த வாழ்வியலும், வழிபாடும் இருந்ததாக இலக்கியங்கள் எமக்குச் சொல்கின்றன.

முதற்சங்க காலத்தில் 4449 புலவர்கள் இருந்ததாக அறிகின்றோம். அக்காலப் பாண்டிய மன்னன் ஒருவனின் பெயர் "பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி" என்பதாகும். எனவே முதற்சங்க காலத்திலேயே தமிழ் வேள்வி வழிபாடு இருந்திருக்கிறது. இதனைத் 'தமிழ் வேள்வி' என்று விழிப்பதற்கு ஒரு காரணம் உண்டு. கி.மு. 7000 ஆண்டளவே முதற்சங்க காலம் எனில், ஆரியரின் இந்திய வருகை கி.மு. 2000 ஆண்டளவிலேயே ஆகும். எனவே வடமொழி நுழைவதற்கு முன்னமே இந்த மண்ணில் வேதம் இருந்திருக் கிறது. ஆகமம் இருந்திருக்கிறது. அவை அருந்தமிழில் சிறந்திருக்கிறது.

**"மன்னு மாமலை மகேந்திர மதனிற்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்"** என்று திருவாசகமும்,
**"பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளி"** என்றும்
**"ஏரிசையும் வடவாலின் கீழிருந்தாங்கு**
**ஈரிருவருக்கு இரங்கி நின்று**
**நேரிய நான்மறைப் பொருளை உரைத்து"**

என்றும். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் பாடியருளிய மகேந்திர மலை எது? என்ற கேள்வி ஒரு புறம் இருக்க புறநானூற்றில் பதினைந்தாவது பாடல் **"பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி"** மன்னன் செய்த யாகத்தை,

**"நற் பனுவல் நால் வேதத்து,**
**அருஞ் சீர்திப் பெருங் கண்ணுறை**
**நெய்ம் மலி ஆவுதி பொங்கப் பன்மாண்**
**வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி**
**யூபம் நட்டவியன் களம் பலகொல்"** என்று விழிக்கின்றது.

எனவே நால் வேதம் தமிழிலே தோன்றியது என்ற துணிவை நாம் கொள்ளலாம். கடல் கொண்ட போது, குமரிக் கண்டத்தோடு மூல ஏடுகள் அழிய மொழி பெயர்ப்புக்கள் வடமொழியிலே எமக்குக் கிடைத்திருக்கலாம். எது மூலம் எது மொழிபெயர்ப்பு என்ற ஐயத்தை கால ஆய்வினாலும், கள ஆய்வினாலும் இலக்கியச் சான்று களாலும் அறிவுக் கண் கொண்டு ஆய்ந்து தெளிதல் நன்று.

உயிர்களை ஆகுதியாக்கும். ஆரிய வேள்வியில் நின்று புறமானதாய், நெய்யினை வார்த்து, அன்புவழிச் சைவத்தின் செந்தமிழ் வேள்வியே, சங்ககாலத் தமிழர் வழிபாடாக இருந்திருக்கின்றது. மேற்குறித்த புறநானூற்று பாடல் நால் வேதம் என்கின்றது. எனினும் வடமொழியில் **"அமரகோச நிகண்டின் படி வேதம் தர்யே"** என்பதிலிருந்து, மூன்று வேதங்களே முன்னிருந்தன என்பதும், **"அதர்வ வேதம்"** மிகப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டே வடமொழி வேதங்கள் நால் வேதமாக்கப்பட்டது. என்பதும் ஆன்றோர் ஏற்ற முடிவாகும். எனவே மேற்போந்த காரணங்களால் தமிழ் வேதங்களின் இருப்பையும், அவை மூலம் மேற்கொள்ளப்பட்ட தமிழ் வழிபாட்டையும் நாம் உணரலாம்.

முதற்சங்க காலத்தின் பின்னர், கபாடபுரத்தில் நிறுவப்பட்ட இடைச்சங்க காலத்திலே தொல்காப்பியர் உட்பட்ட பன்னிரு புலவர்கள், அகத்தியரின் சீடர்களாயிருந்து தமிழுக்கு இலக்கணம் யாத்தனர். உலக மெய்யியல் கொள்கைகள் பலவாறு எழுந்தன. அவற்றுக்குத் தலையாய இந்திய மெய்யியலில் பல சமயங்களையும், அவற்றின் தத்துவங்களையும் காணலாம். தெய்வத்தை ஏற்ற, மறுத்த தத்துவங்களும் சமயங்களும் அதில் உள்ளடங்கும். ஆனால் கடவுள் என்கின்ற பொருள் உண்டென்றும், கடவுளே எல்லா உயிர்க்கும் தலைவன் என்றும் ஏற்றுக்கொண்ட பதில் தெளிவானது. சித்தாந்த சைவமும் தமிழர் மெய்யியலுமேயாகும். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில்,

**"தெய்வம் உணாவே மா மரம்புள் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகை,**
**அவ்வகை பிறவும் கரு என மொழிப"**

என்று கடவுள் கொள்கையை முன்னிலைப்படுத்தி மொழிகின்றது. இங்ஙனம் தொல்காப்பியம் எங்கும் இக்கொள்கை பரவலாகப் பேசப்படுவதையும் காணலாம். எனினும் கட்டுரையின் விரிவு அஞ்சி அவற்றைத் தவிர்க்கிறேன். கடவுள் கொள்கையை ஏற்காத சமணமும், பௌத்தமும் தமிழகத்தில் நிதானமாக வளர்ந்த போதும் நிலை பெற முடியாமைக்குத் தமிழர்களின் சைவ சித்தாந்தமும் அன்புவழிச் சைவமும், வாழ்வியலோடு இணைந்து, பின் துறவு கொண்டு பதிஞானத்தை அடையும் பக்குவ நிலையும் பத்தி இயக்கமும், நாயன்மார்களும், சந்தான குரவர்களும், அவர்கள் கட்டியெழுப்பிய சித்தாந்த சாத்திரங்களுமே காரணமாயின எனலாம்.

இவ்வாறு இறை ஏற்பையும், ஏற்றத் தாழ்வு காட்டாத ஆகமங்களைக் கொண்ட சித்தாந்த சைவமும், தமிழர் வழிபாடும் தமிழ் மொழியிலேயே இருந்தமையை நாம் உறுதி செய்து கொள்ளலாம். இடைவந்த ஆரியமும் வடமொழியும், தமிழைப் புறத்து ஒதுக்கி, வடமொழியில் மட்டுமே வழிபாடு இயற்ற முற்பட்டதாலும், ஆட்சியாளர்கள் வரை ஆரியம் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியதும் தான் இன்றைய இந்த நிலைக்கு வித்திட்டது எனலாம்.

**"கச்சங் கொண்டு நடுந்தொழில் முடியாக்**
**கொச்சைத் தேவரை தேவரென் றெண்ணிப்**
**பிச்சரைப் போல ஓர் - ஆரியப் புத்தகப்**
**பேய் கொண்டு புலம் புற்று"** என்கின்றார் நக்கீர தேவநாயனார்.

பல தெய்வ வழிபாட்டை ஏற்று உயிர்ப்பலி வேள்வி செய்வதை கூறும் வடமொழி வேதத்தை **"ஆரியப் புத்தகம்"** என்றும், அது நிலையற்று ஒரு பொருளை ஏற்காது அலைவதனால் **"பேய்"** என்றும் விழிக்கின்றார். எனவே, வடமொழி வேத சுலோகங்களை விஞ்சிய, ஏகமாய், நித்தமாய் அனாதியாய் நிற்கும் இறைவனை வழுத்தவும், பாடவும் அர்ச்சுனை செய்யவும், தமிழில் மந்திரங்கள் அலையாமல் நிலை பெற்ற பதி ஞானத் தெளிவுடன் இருந்தன என்பதே உண்மை ஆகிறது.

இறைவன் விரும்பித் தானே இலக்கணம் செய்வித்த மொழியாகவும், அழைத்ததும் இறைவனை வரவைக்கும் ஆற்றல் பெற்ற மொழியாகவும் திகழும் தமிழே வழிபாட்டுக்கு உகந்த மொழி என்பதை உணர்வோம். வடமொழியும் இறை மொழியாகவே இருக்கட்டும். வடமொழி நன்கறிந்த மக்கள் உள்ள இடத்தில் அம்மொழி வழிபாடு இயற்றப் பயன்படுத்தப்படட்டும் ஆனால் செந்தமிழ் மாந்தர் சிறந்து வாழும், இன் தமிழ் நிலத்தில் ஒப்பற்ற தமிழில், வழிவழி வந்த மரபின் படியே வழிபாடு இயற்றுவதை கேள்விக்கு உட்படுத்தும் எந்தர்களை இனங்கண்டு ஒதுக்குதல் நன்று.

**"கண்ணுதற் பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்துப்**
**பண்றுறத் தெரிந்து ஆய்ந்த இப் பசுந்தமிழ் ஏனை**
**மண்ணிடைப் பல இலக்கண வரம்பிலா மொழிபோல்**
**எண்ணிடைப் படக் கிடந்ததாய் எண்ணவும் படுமே"**

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு இதழின் இரண்டாம் ஆண்டு நிறைவும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சிவப்பணிகளும்



பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற் சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, ஆதித்தமிழர்கள் வாழ்ந்த தென்னாட்டில், உலகில் வேறெங்கும் காணாத வகையில், ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில், சிவபூமி என்றழைக்கப்பெறும் இலங்கை யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் **'தென்னாடு செந்தமிழாகம சிவமடம்'** அமைகிறது. அங்கே ஐம்பூதநாதர் அருட்கோலம் கொண்டு எழுந்தருளுகிறார், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவன், இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழாகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற்கேற்றால் போல் செந்தமிழாகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (3-6-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி - மூன்றாம் வளர்பிறை) அமுத ஒகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்று, தென்னாட்டின் சிவப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு தொடங்கி இன்று வரை தன்னிலைமாறாது செந்தமிழில், நிறைமதி, மறைமதி வழிபாடுகள், கழுவாய் வழிபாடுகள், குருபூசைகள், சிவமங்கல நீராட்டுகள், குடமுழுக்குகள், வாழ்வியல் சடங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. அந்தவகையில், நிறைமதிப் பூசைகளில் தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், தவத்திரு. வேலன் சுவாமிகள் மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா போன்றோரும் ஆரம்ப காலங்களில் வருகை தந்து, பூசை வழிபாடுகளில் கலந்து, அருளுரைகளை ஆற்றியுள்ளனர்.

தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் ஐம்பூதக் கலவையாக எழுந்தருளியுள்ள ஐம்பூதநாதருடன், ஈழத்து சித்தர்கள், பதினெண்சித்தர்கள், நாயன்மார்கள், இராசராச சோழன் என சைவசமயத்தின் அடையாள நாயகர்களும் தவக்கோலமாக எழுந்தருளியுள்ளனர். உலகிலே ஈழத்து சித்தர்கள் அனைவரிற்கும் ஓரிடமாக கருங்கல் சிற்பங்களாக செதுக்கி எழுந்தருள வைத்திருப்பது இதுவே முதலாவதாகும். இங்கு வந்து அவர்களின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அமைகிறது.

### தென்னாட்டு நிகழ்வுகள்:

### 2020ம் ஆண்டிற்கான நிகழ்வுகள்

#### ஆனித் திங்கள் - 2020:

*03.06.2020* - நன்னாளில் ஐம்பூதநாதரின் திருக்குடமுழுக்கு இடம்பெற்றது.

*05.06.2020* - வைகாசித்த் திங்கள் 23ம் நாளாகிய நிறைமதி நன்னாளில், ஐம்பூதநாதப் பெருமானுக்கு முதலாவது நிறைமதி பூசை இடம்பெற்றது.

#### ஆடித் திங்கள் - 2020:

*04.07.2020* - ஆனித் திங்கள் 20ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றது.

*31.07.2020* - திருமகள் வழிபாட்டில் முக்கிய விரதமான, வரலக்குமி விரத வழிபாடுகள் இடம்பெற்றது. இவ்வழிபாட்டில் பலரும் கலந்து வணங்கினர்.

#### ஆவணித் திங்கள் - 2020:

*03.08.2020* - ஆடித் திங்கள் 19ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றன. இந்நிறைமதி பூசையில், சுப்பிரமணிய கோட்டத்தை சேர்ந்த தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் ஐயா அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு அருளுரையும் வழங்கிச் அருளியிருந்தார்.

*22.08.2020* - விநாயகர் சதுர்த்தி நன்னாளில் விநாகயப்பெருமானுக்கு திருமஞ்சனம் இடம்பெற்று, சிறப்புப் பூசை வழிபாடுகளும் ஆற்றப்பட்டது.

#### புரட்டாசித் திங்கள் - 2020:

*01.09.2020* - ஆவணித் திங்கள் 16ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றன. இந்நிறைமதி பூசையில், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு அருளுரையும் வழங்கி அருளியிருந்தார்.

*13.09.2020* - தென்னாட்டில் அருச்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார் அவர்களினால், 11 மாணவர்களுக்கு செந்தமிழ் பூசைப் பயிற்சிகள் கற்பித்து, சமய தீக்கையும் வழங்கி வைக்கப்பட்டது.

*17.09.2020* - புரட்டாசித் திங்கள் 1ம் நாளாகிய, பேரொடுக்க மறைமதியில் (மகாலய அமாவாசை) 'தென்புலத்தார் வழிபாடு' முக்கியத்துவப்படுத்தப்பட்டு, பேரொடுக்க மறைமதி சிறப்புப் பூசைகள், செந்தமிழ் வேள்விகள் என்பன இடம்பெற்றன.

#### ஐப்பசித் திங்கள் - 2020:

*01.10.2020* - புரட்டாசித் திங்கள் 15ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றது. இந்நிறைமதி பூசையில், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்கள் முதன்முதலாக கலந்து சிறப்பித்ததோடு அருளுரையும் வழங்கி அருளியிருந்தார்.

*17.10.2020* - ஐப்பசித் திங்கள் 1ம் நாள் ஒன்பானிரவு (நவராத்திரி) விரதமானது ஆரம்பமாகி, ஒன்பது நாட்கள் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று, பத்தாம் பிறைநாளில் (26.09.2020), ஏடு தொடக்குதலும் இடம்பெற்று நிறைவடைந்தது.

*31.10.2020* - ஐப்பசித் திங்கள் 15ம் நாள், எம்பெருமானுக்கு அன்னத் திருமஞ்சனத்துடன் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றது. இந்நிறைமதி நாளில், எங்களுடைய 'தென்னாடு திங்கள் முதலாவது இதழ்' எட்டு பக்கங்களுடன் வெளியிடப்பட்டது.

#### கார்த்திகைத் திங்கள் - 2020:

*15.11.2020* - கந்தன் கவின் அறுமைப் பெருநாள் (கந்த சஷ்டி) விரதமானது ஆரம்பமாகி, ஆறு நாட்களும் முருகப்பெருமானுக்கு திருமஞ்சன வழிபாடுகளும், சிறப்பு பூசைவழிபாடுகளும் இடம்பெற்றது.

*29.11.2020* - கார்த்திகைத் தீபத் திருநாள் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

*30. 11.2020* - கார்த்திகைத் திங்கள் 15ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, இரண்டாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

#### மார்கழித் திங்கள் - 2020:

*07.12.2020* - ஆடல் வல்லானின் உற்சவத் திருமேனி நிலைப்படுத்தப்பட்டு, கூத்தப்பெருமானுக்கு செந்தமிழில் நன்னீராட்டு இடம்பெற்றது.

*21.12.2020* - திருவெம்பாவை பெருவிரதம் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் அதிகாலையில் திருமஞ்சனம் இடம்பெற்று, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடி சிறப்பு பூசைகள் இடம்பெற்றன.

*25.12.2020* - சாவகச்சேரி வாரிவனேசுவரருக்கு தென்னாடு அர்ச்சகர்களால் திருக்குட நன்னீராட்டு இடம்பெற்றது.

*29.12.2020* - மார்கழித் திங்கள் 14ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, மூன்றாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

*30.12.2020* - திருவாதிரை திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்று, ஆதிரை அருட்காட்சி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

### 2021ம் ஆண்டிற்கான நிகழ்வுகள்

#### தைத் திங்கள் - 2021:

*06.01.2021* - தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் ஐம்பூதநாதருடன், தவக்கோலமாக எழுந்தருளியுள்ள சித்தர் பெருமகனார்களை பார்வையிட, யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறையினர் வருகை தந்திருந்தனர்.

*08.01.2021* - வாரிவனேசுவரருக்கு தென்னாடு அர்ச்சகர் களால் சங்கு நீராட்டு இடம்பெற்றது.

*11.01.2021* - வைத்தியர். சி.யமுனாநந்தா அவர்களினுடைய "ஏங்குறள்" புத்தக வெளியீடு இடம்பெற்றது.

*18.01.2021* - "தமிழி" அமைப்பினருடைய காணும் பொங்கல் கொண்டாட்டம் இடம்பெற்றது.

*28.01.2021* - தைத் திங்கள் 15ம் நாள் நிறைமதி வழிபாடுகளும், தைப்பூச பூசைகளும் இடம்பெற்று,

அதுவரைகாலம் எட்டு பக்கங்களுடன் வெளியாகி வந்த இதழ், பன்னிரண்டு பக்க இதழாக நீடித்து, நான்காவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

#### மாசித் திங்கள் - 2021:

*19.02.2021* - குடைச் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்பட்டது.

*27.02.2021* - மாசித் திங்கள் 15ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, ஐந்தாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

#### பங்குனித் திங்கள் - 2021

*12.03.2021* - ஐம்பூதநாதரின் முதலாவது பெருஞ்சிவனிரவு பெருவிழா

ஐம்பூதநாதப் பெருமானுக்கு முதலாவது பெருஞ்சிவனிரவு பெருவிழா வெகு சிறப்பாக நான்கு கால திருமஞ்சனப் பூசைகளுடன் சிறப்பாக அடியார்கள் பலரும் சூழ இடம் பெற்றது.

பெருஞ்சிவனிராவை முன்னிட்டு, சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ஐயா அவர்களின் நினைவாக நடாத்தப்பட்ட, **"திருவாசகச் செல்வர்"** விருதுக்கான கட்டுரைப்போட்டியின் பரிசு வழங்கும் விழா காலை இடம்பெற்றது. மேலும் பல விருதுகளும் வழங்கப்பட்ட்டது.

**திருவாசகச் செல்வர் விருது**: செல்வன். தவேஸ்வரன் அபிநாத், செல்வன். ஜெயபாலன் தவேதன், செல்வி. நிரஞ்சன் அக்சயா

**திருமுறைச் செல்வர் விருது** - சிவத்திரு. விஷ்வகுமார் விஷ்ணுஜன்

**சிவத்தமிழ்ச் செல்வர் விருது** - சிவத்திரு. ஜீவரட்ணராஜா சஜீவன்

**சிவத்தமிழ்ச் செல்வர் விருது** - சிவத்திரு. பாலன் சுதாகரன் (தாயார் வந்து பெற்றுக்கொண்டார்.)

**சிவஞானச் செல்வர் விருது** - சிவத்திரு. ஈசான பிரதாபன் தேசிகர்

மேலும் சிவநெறிச் செல்வர் விருதுக்கான சிவத்திரு. பரராசசிங்கம் நந்தகுமார் மற்றும் திருமுறைச் செல்வர் விருதுக்கான சிவத்திரு. கொண்ட பாலுசாமி மாதவன் (சிவமாதவன்) அவர்கள் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், யாழ் போதனா வைத்தியசாலை, வைத்தியர். ம. அரவிந்தன், சைவநெறிக் கழகத்தினுடைய தலைவர் சிவத்திரு. ஈசான பிரதாபன் தேசிகர் மற்றும் சைவ மாணவர் சபையினர் ஆகியோர்



கலந்து சிறப்பித்திருந்தனர். இத்தினத்தில், சைவநெறிக் கழகத்தினுடைய தலைவர் சிவத்திரு. ஈசான பிரதாபன் தேசிகர் அவர்களினுடைய சிறப்புரைகளும் இடம்பெற்றன.

*16.03.2021* - செல்லப்பா சுவாமிகள் குருபூசை கொண்டாடப்பட்டது.

*25.03.2021* - யோகர் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்பபட்டது.

*28.03.2021* - பங்குனித் திங்கள் 15ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, ஆறாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

#### சித்திரைத் திங்கள் - 2021:

*14.04.2021* - சித்திரை வருடப்பிறப்பு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றது.

*26.04.2021* - சித்திரைத் திங்கள் 13ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, ஏழாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

#### வைகாசித் திங்கள் - 2021:

*06.05.2021* - அப்பர் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்பட்டது.

*25.05.2021* - சம்பந்தர் பெருமான் குருபூசை கொண் டாடப்பட்டது.

*26.05.2021* - வைகாசித் திங்கள் 12ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, எட்டாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

#### ஆனித் திங்கள் - 2021:

*12.06.2021* - நம்பியாண்டார் நம்பி குருபூசை கொண்டாடப்பட்டது.

*14.06.2021* - சேக்கிழார் பெருமான் குருபூசை வழிபாடுகள் நடைபெற்று, இணையவெளியிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(07ஆம் பக்கம் பார்க்க)

**தென்னாடு இதழின் இரண்டாம் ஆண்டு நிறைவும்...**

**(06ஆம் பக்கத் தொடர்ச்சி)**

22.06.2021 - தங்கம்மா அப்புக்குட்டியின் நினைவுநாள் வழிபாடுகள் இடம்பெற்றது.

24.06.2021 - ஆனித் திங்கள் 10ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, ஒன்பதாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடும், ஐம்பூதநாதர் குடமுழுக்கு நாளை முன்னிட்டு, முதலாவது சங்கு நீராட்டும் இடம்பெற்றன.

**ஆடித் திங்கள் - 2021:**

13.07.2021 - மாணிக்கவாசகர் குருபூசை நாள், திருவாசக முற்றோதல் மற்றும் சிறப்பு பூசைகளுடன் சிறப்பாக இடம்பெற்றது.

16.07.2021 - தவத்திரு. அருளம்பலம் சுவாமிகளினுடைய குருபூசை கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் அருளம்பலம் சுவாமிகளினுடைய பூட்டி அவர்களும் கலந்து கொண்டு உபயம் செய்திருந்தார்.

17.07.2021 - ஆடிப்பிறப்பு நன்னாளில் "தமிழி" அமைப்பினர் கலந்து கூழ் படைத்து, வழிபட்டனர்.

15.07.2021 - ஆனி உத்தர நன்னாளில் ஆடல் வல்லான் பெருமானுக்கு சிறப்புத் திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றது.

23.07.2021 - ஆடித் திங்கள் 8ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பத்தாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

**ஆவணித் திங்கள் - 2021:**

14.08.2021 - சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை தென்னாட்டில் கொண்டாப்பட்டது.

08.08.2021 - ஆடிமறைமதி நாள் வழிபாடு திருமஞ்சனம், வேள்விகள் என பலரும் கலந்து தங்களுடைய முன்னவர்களின் பிதிர் கடன்களை நிவர்த்தி செய்யும் வண்ணம் சிறப்பாக இடம்பெற்றது.

12.08.2021 - ஆடிக் கணை நாண்மீன் (ஆடிப்பூரம்) வழிபாடு பல மங்கையர் கூடி திருவிளக்கு வழிபாடு இயற்றிட, அம்மனுக்கு சிறப்பு திருமஞ்சனங்களுடன் சடங்குகளும் இடம்பெற்றன.

19.08.2021 - சிவத்திரு. நிகரிலரசு, சிவத்திரு. சிவநாதன் ஆகியோருக்கு தென்னாட்டில் வைத்து, முன்முதலாக இரண்டாம் தீக்கை ஆகிய விசேட தீக்கை (சிவ தீக்கை) வழங்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்று காரணமாக



தெய்வத்தமிழ் ஆச்சாரியர்கள் வருகைதர முடியாத காரணத்தினால் இலங்கை கிளிநொச்சி அமிர்தலிங்கம் லக்சுமிகாந்தன் சிவாச்சாரியாரினால், மடத்தினை சார்ந்த அர்ச்சகர்கள் தமிழில் கிரிகைகள் செய்ய இந்நிகழ்வு நடைபெற்றது. முடிவில் தமிழ்நாடு அருட்குருநாதர் ஒளியரசு ஐயவினால் வாழ்த்துரையும் பெயர்சூட்டு நிகழ்வும் இடம்பெற்றது.

21.08.2021 - தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் தெய்வத்தமிழ் முறையில் முதலாவது மங்கள நாண் அணிவிக்கும் நிகழ்வு நடாத்தப்பட்டது.

22.08.2021 - ஆவணித் திங்கள் 6ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பதினோராவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

**புரட்டாசித் திங்கள் - 2021:**

10.09.2021 - ஆவணிச் சதுர்த்தி திருமஞ்சனங்கள் பூசைகள் என்பன சிறப்பாக நடைபெற்றது.

20.09.2021 - புரட்டாசித் திங்கள் 4ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பன்னிரெண்டாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

**ஐப்பசித் திங்கள் - 2021:**

06.10.2021 - புரட்டாசித் திங்கள் 20ம் நாளாகிய, பேரொடுக்க மறைமதியில் (மகாலய அமாவாசை) 'தென்புலத்தார் வழிபாடு' முக்கியத்துவப்படுத்தப்பட்டு, பேரொடுக்க மறைமதி சிறப்புப் பூசைகள், செந்தமிழ் வேள்விகள் என்பன இடம்பெற்றன. இதில் பலரும் கலந்து கொண்டு எள்ளுநீர் இறைத்து வழிபாடு ஆற்றினார்.

07.10.2021 - புரட்டாசித் திங்கள் 21ம் நாள் ஒன்பானிரவு (நவராத்திரி) விரதமானது ஆரம்பமாகி, ஒன்பது நாட்கள் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று, பத்தாம் பிறைநாளில் (15.10.2020), ஏடு தொடக்குதலும் இடம்பெற்று நிறைவடைந்தது.

10.10.2021 - திருமூலர் குருபூசை கொண்டாடப்பட்டது.

15.10.2020 - சைவமாணவர் சபை செயலாளர், தென்னாடு மேலாளர் உட்பட்ட 11 பேருக்கு தென்னாடு மடத்தில் வைத்து சமய தீக்கை வழங்கப்பட்டது.

17.10.2021 - வதிவிட செந்தமிழ் அர்ச்சகர் பயிற்சிநெறி வழங்கப்பட்டு, சிவத்திரு. தமிழாகரன், சிவத்திரு. உமைகாந்தன் ஆகியோருக்கு 2ம் கட்டமாக விசேட தீக்கை வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

20. 10.2021 - ஐப்பசித் திங்கள் 3ம் நாள் எம்பெருமானுக்கு அன்னத் திருமஞ்சனத்துடன் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பதின்மூன்றாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

25.10.2021 - ஐம்பூதநாதருக்கு விசேட சங்கு நீராட்டும் சமய தீக்கையும் வழங்கப்பட்டது.

**கார்த்திகைத் திங்கள் - 2021:**

14.11.2021 - யாழ் இந்துக் கல்லூரி ஞானலிங்கேச்சரர் 3ம் ஆண்டு நிறைவு சங்கு நீராட்டு இடம்பெற்றது.

14.11.2021 - தென்னாட்டில் சிவத்திரு. நிகரிலரசு அவர்களிற்கு ஆசிரிய திருமுழுக்கு வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. கொரோனா பெருந்தொற்று காரணமாக தெய்வத்தமிழ் ஆச்சாரியர்கள் வருகைதர முடியாத காரணத்தினால் இலங்கை சிவ.உருத்திரபுரீசுவரர் சிவாச்சாரியாரினால், மடத்தினை சார்ந்த அர்ச்சகர்கள் தமிழில் கிரிகைகள் செய்ய இந்நிகழ்வு நடைபெற்றது. ஆசிரிய குடமுழுக்கு பெற சில காலம் இருப்பினும், செந்தமிழ் முறையில் இலங்கையில் குரு ஒருவர் இல்லை என்பதை கருத்தில் கொண்டு, மாணவர்களுக்கு நுழைவு தீக்கை கொடுப்பதற்கு ஆசிரியர் தேவை என்பதனையும் கருத்தில் கொண்டும், பல குடமுழுக்குகளை மடத்தினூடு செய்த பயிற்சியின் அடிப்படையிலும், இந்த தீக்கை வழங்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்று கருதி இந்த முடிவு மடத்தினால் எடுக்கப்பட்டது. பின்னர் போதியளவு காலம் மடத்தில் பயிற்சி மற்றும் சேவைகள் செய்து முடிக்க முன்னர் ஐயா அவர்கள் குடும்பத்துடன் சேர்வதற்காக இலண்டன் சென்றுவிட்டார். இந்நிகழ்வு ஒரு தேவை கருதிய விதிவிலக்காக செய்யப்பட்டது.

18.11.2021 - கார்த்திகைத் திங்கள் 2ம் நாள் நிறைமதி மற்றும் தீபத் திருநாள் வழிபாடுகள் இடம்பெற்று, பதினான்காவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

28.11.2021 - ஐஊஉடிவு தனியார் பல்கலைக்கழகத்தில் புதுவிடப் புகுவிழா கிரியைகள் தென்னாடு அர்ச்சகர்களினால் ஆற்றப்பட்டது.

**மார்கழித் திங்கள் - 2021:**

09.12.2021 - சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் தென்னாடு அர்ச்சகர்களினால் மூத்த பிள்ளையார் முதனிலை வேள்வி இடம்பெற்றது.

11.12.2021 - திருவெம்பாவை பெருவிரதம் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் அதிகாலையில் திருமஞ்சனம் இடம்பெற்று, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடி சிறப்பு பூசைகள் இடம்பெற்றது.

18.12.2021 - மார்கழித் திங்கள் 3ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பதினைந்தாவது தென்னாடு திங்கள் இதழ் **"மார்கழிப் பெருவிழா சிறப்பிதழ்"** ஆக வெளியிடப்பட்டது.

20.12.2021 - திருவாதிரை திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்று, ஆதிரை அருட்காட்சி வழிபாடுகளுடன் எம்பெருமான் திருவீதிஉலாவும் சிறப்பாக இடம்பெற்றது.

25,26.12.2021 - மார்கழிப் பெருவிழா

முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக மார்கழிப் பெருவிழா நடைபெற்றது. தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்திய மார்கழிப் பெருவிழா நான்கு அரங்கங்களாக மிகவும் விமரிசையாக நடந்தேறியது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா (யாழ் பலக்லைக்கழக துணைவேந்தர், சிவத்திரு. கணபதிப்பிள்ளை மகேசன் (யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்), சிவத்திரு. இளங்கோவன் இலட்சுமணன் (செயலாளர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்), சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (முதன்மை ஆசிரியர் - வலம்புரி) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் பல சைவ பெருமகனார்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இப்பெருவிழாவில் நால்வர் பெருமக்களின் நால்வகை நெறிகளையும் எடுத்து இயம்புவதற்காக, தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ. சுந்தரம் ஐயா அவர்கள் வருகைதந்திருந்தார். அத்தோடு நால்வர் பெருமக்கள் அருளிச் செய்த திருமுறைகளும் விண்ணப்பம் செய்யப்பட்டன. மேலும் பண்ணார் இசையின் சொல்லால் இறைவனை பாடுகின்ற ஓதுவார் பெருமக்களை கௌரவிக்கின்ற பெரும்பணி, முதன்முதலாக இம்மார்கழிப் பெருவிழாவில் இடம்பெற்றது. சைவக் கொடையாளிகளுக்கான கௌரவிப்பும்



இடம்பெற்றது.

31.12.2021 - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் மங்களநாதர் திருக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டல் வைபவம் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

**2022ம் ஆண்டிற்கான நிகழ்வுகள்**

**தைத் திங்கள் - 2022:**

02.01.2022 - 3ம் கட்டமாக தென்னாட்டில் ஆறு பேருக்கு விசேட தீக்கை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

14.01.2022 - தென்னாட்டில் சைவ மாணவர் சபையினரின் பொங்கல் வழிபாடும் பூசைகளும் இடம்பெற்றன.

17.01.2022 - தைத் திங்கள் 4ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பதினாறாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

18.12.2022 - தைப்பூச சிறப்பு பூசைகளும் இடம்பெற்றது.

**மாசித் திங்கள் - 2022:**

16.02.2022 - மாசித் திங்கள் 4ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றது.

28.02.2022 - மாசித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடும், பதினேழாவது தென்னாடு திங்கள் இதழ் **"பெருஞ்சிவனிரவு சிறப்பிதழ்"** ஆக வெளியிடப்பட்டது.

**பங்குனித் திங்கள் - 2022:**

01.03.2022 - ஐம்பூதநாதப் பெருமானுக்கு இரண்டாவது 'பெருஞ்சிவனிரவு பெருவிழா' வெகு சிறப்பாக நான்கு கால திருமஞ்சனப் பூசைகளுடன் சிறப்பாக அடியார்கள் பலரும் சூழ இடம்பெற்றது. மற்றும் யாழ் இந்து கல்லூரி ஞானலிங்கேச்சரத்திலும், சாவகச்சேரி வாரிவனத்திலும், சங்கானை சங்கை நாதரிடத்திலும் சிவனிரவு வழிபாடுகள் இடம்பெற்றன.

11.03.2022 - திருக்கயிலாய பரம்பரை மெய் கண்ட சந்தானம் பேரூர் ஆதீனம் 25 பட்டம் குருமகாசன்னிதானம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களுக்கு தென்னாடு ஐம்பூதநாதர் திருநீற்றுப்பை கையளிப்பு செய்யப்பட்டது.

14.03.2022 - புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற சிவத்திரு. தமிழ்ச்செல்வன், திருமதி. த.தயாநிதி அவர்களின் புதல்வன் கஜலக்சன் அவர்களை தென்னாடு சிவமடம் சார்பாக வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

18.03.2022 - பங்குனித் திங்கள் 3ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பதினேட்டாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

**சித்திரைத் திங்கள் - 2022:**

11.04.2022 - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை **"மங்களநாதர்"** திருக்கோயில் குடமுழுக்கு

கீழறை (பிலவ) ஆண்டு, மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 28ம் நாள் (11.04.2022) திங்களன்று கட்செவி (ஆயில்யம்) நாண்மீன், வளர்பிறை பதின்மைப் பிறைநாள், யோகர் சுவாமிகளினுடைய குருபூசை நன்னாளில், மாணவச் சிறார்களை சைவத்தமிழ் வழிபாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் மங்களநாதப் பெருமானை திருநிலைப்படுத்தி, திருக்குட நன்னீராட்டுச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளாரும், தருமபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் அவர்களும், தென்கயிலை ஆதீன குருமுதல்வர் அவர்களும், சிவகுரு ஆதீன குருமுதல்வர் அவர்களும் கலந்து கொண்டு ஆசி வழங்கினர். குருமகா சன்னிதானங்கள் ஆசியுடன், தென்னாடு செந்தமிழாகம சிவமட சிவாச்சாரியார் அவர்களும், திருக்குடந்தை தெய்வத்தமிழ் திருக்கூடல் மெய்கண்ட சிவம் இறைநெறி இமையவன் ஐயா அவர்களும் இணைந்து செந்தமிழ் வேள்வி ஆற்ற, வான் முகில் வளாது பெய்ய, மலிவளஞ் சுரக்க, நற்றவம் வேள்வி மல்கக் குடமுழுக்குக் கண்டார் மங்களநாதர்.

**(08ஆம் பக்கம் பார்க்க)**

## தென்னாடு இதழின் இரண்டாம் ஆண்டு நிறைவும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

*11.04.2022* - பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளாரும், தருமபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் அவர்களும் தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் சிறப்பு பூசை வழிபாடுகள் ஆற்றினார்.

*12.04.2022* - தென்னாடு மேலாளர் சிவத்திரு. நிலவனின் அகவைநாள் கொண்டாடப்பட்டது.

*14.04.2022* - சித்திரை வருடப்பிறப்பு சிறப்புப் பூசைகள் இடம்பெற்றது.

*16.04.2022* - சித்திரைத் திங்கள் 3ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, பத்தொன்பதாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் தருமபுர ஆதீன திருநெல்வேலி கட்டளைத் தம்பிரான் திருஞானசம்பந்த சுவாமிகள், தெய்வத்தமிழ் பற்றாளர் சிவத்திரு. இறைநெறி இமையவர் ஐயா, யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர், தென்னாடு செந்தமிழாக சிவமட நிறுவினர் முதலியோர் ஒருங்கே கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

*26.04.2022* - அப்பர் சுவாமிகள் குருபூசை இடம்பெற்றது.

### வைகாசித் திங்கள் - 2022:

*13.05.2022* - தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் தெய்வத்தமிழ் முறையில் இரண்டாவது மங்கள நாண் அணிவிக்கும் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

*15.05.2022* - வைகாசித் திங்கள் 1ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றன.

*18.05.2022* - சம்பந்தர்ப் பெருமான் குருபூசை இடம்பெற்றது.

*27.05.2022* - வைகாசித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்று, இருபதாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டிருந்தது.

### ஆனித் திங்கள் - 2022:

*04.06.2022* - சேக்கிழார் குருபூசை இடம்பெற்றது.

*06.06.2022* - திருக்கேதீச்சர நாதரை போற்றி பாடல்கள் வெளியீடு

*19* ஆண்டுகளிற்குப் பின்னர், ஜூலை *06*ம் திகதி நடைபெற்ற திருக்குடமுழுக்கினை முன்னிட்டு, திருக்கேதீச்சர நாதரைப் போற்றி தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் தீந்தமிழ் பாடல்கள் வெளியிடப்பட்டது.

திருக்கேதீச்சரம் பெருஞ்சாந்தி வெளியீடு "கேதீச்சரம் அமர்ந்தானே" - தென்னாடு காக்கின்ற நாதன் மன்னாரில் (பாடல் வரிகள் - தென்னாடு சஜீவன்,இசை - ஜெகதீஸ் அருணா,பாடியவர் - வி. அருள்ஜோதி,காணொளிப் பதிவு - தென்னாடு நிலவன்)






திருக்கேதீச்சரம் பெருஞ்சாந்தி வெளியீடு "கேதீச்சரம் அமர்ந்தானே" - கேதீச்சரத்தானே தனித்தமிழின் நாயகனே (இசை - ஜெகதீஸ் அருணா,பாடியவர் - ஜெ. மதுஷிகன், வரிகள் - பா. சிவமாதவன்)

திருக்கேதீச்சரம் பெருஞ்சாந்தி வெளியீடு "கேதீச்சரம் அமர்ந்தானே" - பாவங்களைக் கழுவும் பாலாவி (பாடல் வரிகள் - கலாநிதி தமிழ்மணி அகளங்கன்,இசை - ஜெகதீஸ் அருணா,பாடியவர் - திருமதி. ஜெயபாரதி கௌசிகன், காணொளிப் பதிவு - தென்னாடு நிலவன்)

திருக்கேதீச்சரம் பெருஞ்சாந்தி வெளியீடு "கேதீச்சரம் அமர்ந்தானே" - உலகம் முதலாய உயிர்கள் வரையான (பாடல் வரிகள் - சிவத்திரு. யாழவன் தவேதன்,இசை - ஜெகதீஸ் அருணா,பாடியவர் - கலாநிதி தர்சன்)

*11.06.2022* - அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டு, இரண்டு ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், வைகாசித்திங்கள் இருபத்தெட்டாம் நாள் ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு மிகவும் சிறப்பாக நடை பெற்றது.

*15.06.2022* - ஆனித் திங்கள் 1ம் நாள் நிறைமதிப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

*19.06.2022* - செந்தமிழ் அர்ச்சகர்கள் பயிற்சி வழங்கப்பட்டு, நான்காம் கட்டமாக விசேட தீக்கை வழங்கள் இடம்பெற்றது.

*23.06.2022* - தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் தெய்வத்தமிழ் முறையில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது மங்கள நாண் அணிவிக்கும் நிகழ்வு

*26.06.2022* - ஆனித் திங்கள் 12ன் நாள், தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்று, இருபத்தோராவது தென்னாடு திங்கள் இதழ், திருக்கேதீச்சர குடமுழுக்கை முன்னிட்டு "திருக்கேதீச்சர சிறப்பிதழாக" வெளியிடப்பட்டது.

### ஆடித் திங்கள் - 2022:

*03.06.2022*- மாணிக்கவாசகரினுடைய குருபூசை கொண்டாடப்பட்டது.

*06.07.2022* - அருளம்பலம் சுவாமிகளினுடைய குருபூசை கொண்டாடப்பட்டது.

*06.07.2022* - ஆனி உத்தர நன்னாளை முன்னிட்டு, அதிகாலை ஆனித் திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றன.

*13.07.2022* - ஆனித் திங்கள் *29*ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்றது.

*26.07.2022* - ஆடித் திங்கள் 10ம் நாள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்று, இருபத்து இரண்டாவது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டது. இந்த வெளியீட்டு நிகழ்வில், தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகள் கலந்து கொண்டிருந்தமை பெரும் பேறாகும். மேலும் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், வேதாந்தமட வதிவிட ஆச்சாரியார் வேதவித்தியாசாகர் ஐயா அவர்களும் கலந்திருந்தமை சிறப்பாகும்.

*28.08.2022* - ஆடிமறைமதி நாள் வழிபாடு திருமஞ்சனம், வேள்விகள் என பலரும் கலந்து தங்களுடைய முன்னவர்களின் பிதிர் கடன்களை நிவர்த்தி செய்யும் வண்ணம் சிறப்பாக இடம்பெற்றது.

### ஆவணித் திங்கள் - 2022:

*01.08.2022* - ஆடிக் கணை நாண்மீன் (ஆடிப்பூரம்) வழிபாடு பல மங்கையர் கூடி திருவிளக்கு வழிபாடு இயற்றிட, அம்மனுக்கு சிறப்பு திருமஞ்சனங்களுடன் சடங்குகளும் இடம்பெற்றது.

*05.08.2022* - சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை இடம்பெற்றது.

*11.08.2022* - ஆடித் திங்கள் *26*ம் நாள் நிறைமதி வழிபாடுகள் இடம்பெற்று, இருபத்து மூன்றாவது தென்னாடு திங்கள் இதழ் "யாழ் பல்கலைக் கழக பரமேசுவரப் பெருமானின் சிறப்பிதழாக" வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மற்றும் பலக்லைக்கழகத்தை சேர்ந்த பலரும் கலந்திருந்தனர்.

*13.08.2022* - இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தென்னாட்டில் உலர் உணவுப்பொதி வழங்கல்

*19.08.2022* - முழங்காவிலில் சிவன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகளின் திருக்கரங்களினால் அடிக்கல் நாட்டப்பட்டமை சிறப்பாகும்.

*31.08.2022* - விநாயகர் சதுர்த்தி நன்னாளில் விநாகயப்பெருமானுக்கு திருமஞ்சனம் இடம்பெற்று, சிறப்புப் பூசை வழிபாடுகளும் ஆற்றப்பட்டது.

இவ்வாறு, இன்றைய சூழலிலும் ஈரண்டிற்கு மேலாக தொடரும் தென்னாட்டினுடைய சைவத்தமிழ் பணிகள், தன்னிலை மாறாது செவ்வென நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு உந்துதலாக இருப்பது, எங்கள் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனர் சிவத்திரு தென்னவன் பார்த்தீபன் ஐயா அவர்களின் தெய்வத்தமிழ் பற்றும், சற்றும் விலகாத நோக்க முனைப்புமே என்று கூறலாம்.

தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து, இருபத்து நான்காவது தென்னாடு திங்கள் இதழ், அதாவது ஈராண்டுப் பூர்த்தி இதழை இருபது பக்கங்களுடன் வெளியிட திருவருள் கைகூடியுள்ளமை ஐம்பூதநாதர் பெருங்கருணையே ஆகும். மேலும் தென்னாட்டினுடைய இந்த பயணம் இன்னும் பல நூற்றாண்டாய் தொடர, சங்கம் அமைத்த முதல்வன் ஆகிய எங்கள் பரமன் திருவருள் புரிவாராக!

இறைவன் எங்கே உறைகின்றான் என்பதற்கு திருஞான சம்பந்தர், "தமிழின் நீர்வை பேசித் தாளம், வீணை பண்ணி நல்ல, முழவம் மொந்தை மல்கு பாடல் செய்கை இடம் ஓவர்" என்று பதில் தருகின்றார். அதாவது, தமிழ் எங்கு தூய்மையாக உறைகின்றதோ, அங்கு இறைவன் விரும்பி உறைகின்றான் என்றால், பிறமொழிக் கலப்பின்றி தெய்வத் தமிழிலே விளங்குகின்ற, எங்கள் தென்னாடு திங்கள் இதழிலும் இறைவன் உறைகின்றான்! எனவே வாசித்து திருவருள் பெற்று, எம்பெருமானை போற்றி வழிபடுங்கள்.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**மேலாளர் - தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**

## சைவநெறியின் ஆணை நூல்கள் திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் என்று வாழ்ந்த

# இலண்டன் மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் தவத்திரு சிவநந்தி அடிகளார்


## [அளவெட்டியில்: 11-07-1929 சிவபுரத்தில்: 02-04-2003]

**சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்**
**தவலோகம் சேர்ந்துபின் தான்வந்து கூடிச்**
**சிவயோகம் ஞானத்தால் சேர்ந்தவர் நிற்பர்**
**புவலோகம் போற்றுநர் புண்ணியத் தோரே** - திருமந்திரம்

எனயாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், காலஞ்சென்ற திரு. கிருஷ்ணபிள்ளை தம்பதிகளைப் பெற்றோராகக் கொண்டவருமான, இலண்டன் மெய்கண்டார் ஆதீனக் குரு முதல்வரும், உலக சைவப் பேரவையின் நிறுவனரும், உலகெங்கும் பற்பல நாடுகளிலுமாக வாழ்ந்து வரும் சைவ மக்கள் உள்ளங்களில் உலகின் தொன்மையான சமயமான சைவத்தைப் பற்றிய புதிய ஓர் விழிப்புணர்வையும், புத்துணர்ச்சியையும், மறுமலர்ச்சியையும், தனித்துவத்தையும் ஏற்படுத்தியவரும், நல்லறமாம் இல்லற வாழ்வில் இருந்தபடி அறிவியல் துறையில் கற்றுத் தேர்ந்து ஆன்மீக ஞானியாகித் தம் அறுபதாம் அகவையில் முறைப்படி விசேடதீக்கை (சிவதீக்கை) பெற்றுத் துறவு மேற்கொண்டவருமான, தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளார், பங்குனித் திங்கள் 19ஆம் நாள் (02-04-2003) புதன் கிழமையன்று, சிவனாரின் கழலிணைகளைச் சென்றடைந்து மெய்ச் சிவயோக இன்பமுற்றார்.

**“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று”** (குறள் 236)

என்ற தமிழ் மறை வாசகத்துக் கேற்ப நல்லார் பலர் தோன்றிய குடியில், (இவரது தந்தையார் ஒரு சிவ நெறிச் செல்வர். இவரது அண்ணனான வைகுந்த வாசன் ஒரு தமிழ்பற்றாளர்) ஞானதரியன், ஞானசந்திரன் என்ற பெயர் தாங்கிப் பிறந்த இரட்டையருள் மூத்தவராகப் பிறந்த சிவத்திரு. ஞானசூரியன், இளமையில் திறம்படக் கற்று, அறிவியல் நாட்டமுள்ளவராய், இயைபியல் என்னும் இரசாயனத் துறையில் (Chemistry) இளநிலைப் (B.Sc.) பட்டம் பெற்றார். தாம் பிறந்த ஊருக்கும், தமிழர்களுக்கும், பிறந்த நாட்டுக்கும் தொண்டாற்ற விரும்பியவராய், அளவெட்டி - மல்லாகம் பகுதிக்கான உள்ளூராட்சி மன்றத்



தலைவரானார். அக்காலம் தொட்டே மாந்தர்க்குத் தொண்டாற்றி நல்வழிப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை நெஞ்சில் கொண்டவராய், இரசாயனத்துறையில் முது நிலைப் (M.Sc.) படிப்புக்கென இலண்டன் வந்து சேர்ந்தார். படித்துத்தேறிய பின் அறிவியலதிகாரியாய் (Scientific Officer) அரசின் நஞ்சகற்றும் பிரிவில் (Poison Disposal Unit) சேர்ந்து, தலைமை அதிகாரியாய்ப் பொறுப்பேற்றார். சிறிதுகாலம் சட்டக்கல்வியும் பயின்றிருக்கிறார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம் தோற்றுவிக்கப் பெற்ற நாள் முதல் அதன் பிரித்தானியச் செயற்குழு உறுப்பினராகவும், அதன் துணைத் தலைவராகவும் தெரிவுசெய்யப் பெற்றதோடு, கிழக்கு இலண்டனில் தொடக்கப் பெற்ற திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் தோவாளர்களுள் ஒருவராய் ஆண்டுதோறும் தகுதித் திறனறியும் தேர்வுகள் நடத்தியதோடு, அனைத்துலகத் தமிழ் மறுமலர்ச்சி நிறுவனம் (International Institute of Tamil Renaissance) என்ற பெயரில் கல்விக்கழகம் ஒன்றைத் தொடக்கி, அதன் நெறியாளராகத் திகழ்ந்தார்.

கோலாலம்பூரில் 1966 இல் நிகழ்வுற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும், 1980 இல் மதுரையில் இடம்பெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் கலந்துகொண்ட இவர், இலண்டனில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தும் நோக்கோடு தொடக்க நிலைக்கூட்டம் ஒன்றைக் கூட்டினார். பல தமிழார்வலர்கள் ஒத்துழைப்புத் தர முன்வந்தும், பொறுப்பிலுள்ளோர் ஆர்வம் காட்டாததால் எதுவும் செய்ய இயலாது போயிற்று. 1972 ல் இவரால் நிறுவப்பட்ட **“பிரித்தானிய சைவ சித்தாந்த சங்கம்”, 1976** முதல் **“இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்”** என்ற பெயரில் அரிய பணிகள் செய்து வருகின்றது.

தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளார், தமிழகத்தில் உள்ள சைவ ஆதீன முதல்வர்களுடன் சேர்ந்து உலக சைவப் பேரவையை 29-02-1992 இல் சென்னையில் நிறுவினார். இப் பேரவை இலண்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது. உலக சைவப்பேரவை, **“சைவ உலகம்”** என்னும் காலாண்டுச் சஞ்சிகையைத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடுவதற்கு காரணமானவர் சிவநந்தி அடிகளார்.

எட்டு உலக சைவ மாநாடுகளை சிங்கப்பூரில் (Singapore) (1992), பெனாங் (Penang) இல் (1993), பரிஸ் (Paris) இல் (1994), கொழும்பில் (Colombo) (1996), டேர்பனில் (Durban) (1996), தஞ்சாவூரில் (Tanjavur) (1997), ரொறொன்ரோவில் (Toronto) (1999), மொரிசியஸில் (2001) இலும், சிறப்பாக நடத்தி முடித்தார். 2003 செப்ரெம்பரில் ஒன்பதாவது மாநாட்டினை மலேசியாவில் (ஆயடயலளயை) நடத்தவும் ஆயத்தங்கள் செய்து வந்தார். இம் மாநாடுகளால் உலகெங்கும் சைவ மறுமலர்ச்சியையும், சைவசமயத் தனித்துவத்தையும், மேன்மையையும் மக்கள் உள்ளங்களில் உணர வைத்ததோடு சைவ விழிப்புணர்வையும் ஏற்படுத்திய சைவச் செம்மல் ஆவார். சைவத்திற்கு மாறான செயற்பாடுகளைக் கண்டித்து வந்தவர். தமிழகத்தில் தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், பேரூர் மற்றும் மதுரை ஆதீனங்கள் சுவாமி சிவநந்தி அடிகளுக்கு வரவேற்பும் கௌரவமும் அளித்தன.

அடிகளார் “லண்டன் முரசு”, “சைவ உலகம்” என்ற சஞ்சிகைகளில் கௌரவ ஆசிரியராகவும், தென்னிந்தியா விலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதுநிலை கலாநிதிப்பட்டப் படிப்புகளுக்கு வெளிவாரிப் பரீட்சை யாளராகவும் இருந்தவர். அடிகளார் சைவம் பற்றியும் தமிழ்க் கலாசாரம் பற்றியும் பதினைந்திற்கு மேற்பட்ட நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார்.

1. Thiruk-kural (Selected Translation, 1976)
2. Date with Destiny (On Saiva Siddhanta Philosophy, 1980)
3. Introduction to Saivaite Hinduism (A Primer for beginners> 1982)
4. Introduction to Tamil.Culture. (Second Edition. lanuary 1984)
5. MeaningofLife(in SaivaiteHinduism October 1985)
6. What is Saiva Siddhanta? (1986)
7. ‘விடுதலையும் வீடுபேறும்’-திருவாசக ஆராய்ச்சி நூல் (1987)
8. Periya Purana Pushpaanjali (1988)
9. Sarvarm Sivamayam (An Outline of Saivism 1989)
10. Finding Fulfilment (Some insights on Saivism 1989)
11. “அஞ்சாநெஞ்சம்” சைவத்தமிழ் மறுமலர்ச்சிக் கட்டுரைத் தொகுதி
12. Saivaite Hinduism (1994)
13. irt topghL (1995)
14. irt tpdhtpil (தமிழ் / ஆங்கிலம்) (1996)
15. உலக சைவ முரசொலி (1997)

1999ல் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் (Parliment of World Religions) சைவம் ஒரு தனிச் சமயம் என்பதையும், அது இந்து சமயம் அல்ல என்பதையும் நிலைநாட்டினார். இது வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொன்று.

இவர் தமது அறுபதாம் அகவையில் முறையாகச் சிவ தீட்சை பெற்றுச் ‘சிவநந்தி அடிகள்’ எனும் பெயரோடு சைவத் துறவியாகியவர் ஆவார். சிரித்த முகமும், இன்சொல்லும், எவருடனும் அன்பு காட்டிப் பழகி உதவும் இயல்பும் கொண்ட சிவநந்தி அடிகளார் சிவபதமடைந்தது நமக்கெல்லாம் ஓர் பேரிழப்பு. சிவநந்தி அடிகளார் என்றழைக்கப்பட்ட திரு. ஞானசூரியனுக்கு ஒரு மகனும், இரண்டு பெண்களும், பேரக் குழந்தைகளும் உள்ளனர். அவரது மனைவியார் சில ஆண்டுகளுக்கு முன் காலமாகிவிட்டார்.

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”**

**திருச்சிற்றம்பலம்**

**பேராசிரியர் தமிழ்மணி அரங்க முருகையன், தமிழர் தகவல், இதழ் 2 ஆகஸ்ட் 2003 இலண்டன்.**

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
London Meikandaar Aadheenam
(U.K Registered SAIVA(Hindu) Trust Charity No:293007)
LONDON SAIVA SIDDHANTA CENTRE
72 King Edward Road, London E17 6HZ United Kingdom
Tel: 020 8531 6435 Fax: 01268 561 805
(Our activities open to all & equal opportunity policy)

The Cosmic Dance of SIVA - NATARAJA

**சுவாமி சிவநந்தி அடிகளார்**

இலண்டன் மாநகரில் சைவ ஆதீனம் அமைத்து அரும்பெரும் பணிகள் ஆற்றியவர் அண்மையில் அமரரான சுவாமி சிவநந்தி அடிகளார் அவர்கள். மேற்குலகில் முதன் முதல் உருவான இந்தச் சைவ ஆதீனத்தின் பெயர் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்.

அடிகளாரின் இயற்பெயர் ஞானசூரியன் யாழ்ப்பாணத்தில் 11. 07. 1929 ல் பிறந்த தி. ஞானசூரியன் அவர்கள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. இலண்டன் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்துறையில் முதுமாணி(M.Sc) ப் பட்டம் பெற்றவர். விஞ்ஞானியாக உழைத்த ஞானசூரியன் அவர்கள் சிறுவயதிலிருந்தே மெஞ்ஞானத்திலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். சைவம் தமிழ் ஆகிய துறைகளில் பல அரிய கட்டுரைகளும் நூல்களும் எழுதினார் "லண்டன் முரசு" என்ற இதழின் சிறப்பாசிரியராக இருந்து, அதில் அவர் எழுதிய பல கட்டுரைகள் தமிழினத்தின் தன்மான உணர்வைத் தூண்டுவதாக அமைந்தன. சைவத் தமிழ் மக்களின் சமய பாரம்பரியத்தையும் தமிழ்ப்பண்பாட்டையும் பேணுவதற்கு அவரின் எழுத்துக்கள் பயன்பட்டன.

1972 ல் இவரால் நிறுவப்பட்ட "பிரித்தானிய சைவ சித்தாந்த சங்கம்" 1976 முதல் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் என்ற பெயரில் அரிய பணிகள் செய்து வருகின்றது.

பல ஆண்டுகளாகச் சைவ நெறி வழுவாத சாதனையாளராகச் சைவத்தொண்டு செய்து வந்த ஞானசூரியன் அவர்கள் 1989ல் தமிழகத்தில் சந்நியாச தீட்சை பெற்றார். சைவர்களின் உயர் தனிக்கோயிலான சிதம்பரத்தில் தீட்சை பெற்றதோடு, சிவநந்தி அடிகள் என்ற தீட்சா நாமத்துடன், அவர் நிறுவிய இலண்டன் மெய்கண்டார் ஆதீனத்து முதல்வராகவும் விளங்கினார். உலக சைவப் பேரவை 9. 2. 1992 ல் சென்னையில் நிறுவப்பட்டது.

சைவ சமயத்தின் ஆணை நூல்களாக இருப்பவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களும் ஆகும்.சாத்திர நூல்களில் முதன்மை நூலாக அமைந்தது மெய்கண்டார் அருளிச் செய்த சிவஞானபோதம் என்னும் நூல் ஆகும். மெய்கண்டார் வழியில் அமைந்த சைவமே சைவர்களின் சிறப்புமிகு சமயம் என்பதிலும், சைவத் திருமுறை களின் வழியில் இறைவனை வழிபடல் வேண்டுமென்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டு உழைத்தவர் சுவாமி சிவநந்தி அடிகளார் அவர்கள்.

இந்து சமயம் என்பது இந்திய சமயங்கள் பலவற்றைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர். அது ஒரு தனிச் சமயம். அதன் தத்துவம் வேதாந்தம் என்ற தவறான கருத்து சைவ மக்கள் மத்தியில் இன்று பரப்பப்பட்டுள்ளது. வேதாந்தத்திற்கு முற்றிலும் வேறுபட்ட தத்துவம் சைவ சித்தாந்தம். இது உலக அறிஞர்களால் அறிவியல் சார்ந்த தத்துவமாகப் போற்றப்படுகின்றது. இச் சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டது சைவ சமயம். அது ஒரு தனிச் சமயம் என்பதில் அடிகளார் தெளிவாக இருந்தார். இதனை விளக்கி அவர் எழுதியும் பேசியும் வந்தார். 1999ல் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் (Parliment of World Religions) சைவம் ஒரு தனிச் சமயம் என்பதையும், அது இந்து சமயம் அல்ல என்பதையும் நிலைநாட்டினார். இது வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொன்று.

சுவாமி சிவநந்தி அடிகளார் பல நூல்கள் எழுதியுள்ளார். அவரின் நூல்களும் அவர் நிறுவிய ஆதீனத்து அறிஞரின் நூல்களும் சைவ மக்கள் பயன் பெற வேண்டியவை.

உலக சைவப் பேரவை உலகெங்கணும் பல மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றது. உலகத் தமிழர்களிடை, குறிப்பாக புலம்பெயர்ந்த சைவமக்களிடை, சைவத்தில் ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஊட்ட இவை பெரிதும் துணை புரிகின்றன.

இலண்டனிலிருந்து சைவ ஒளி வீசிய இலண்டன் மெய்கண்டார் ஆதீன கர்த்தா சுவாமி அடிகள் 2.4.2003 சிவபதமடைந்தார். சைவத்தின் தனித்தன்மையைப் பேணிச் சைவத்தை வளர்ப்பதில் அவர் காட்டிய ஆர்வமும், ஆற்றிய பணிகளும் சைவத் தமிழ் மக்களை நெறிப்படுத்துவதாக இருக்கும்.

சித்தாந்தரத்தினம்
கலாநிதி க. கணேசலிங்கம்
ஆதீனப்புலவர் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்



# திருநெறிய தமிழாகம திருக்குட நன்னீராட்டு

இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனது அருளைப் பெறத் திருக்கோயில் வழிபாட்டையே அருளாளர்கள் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளனர். மாட்டின் உடல் முழுவதும் பால் நிறைந்திருந்தாலும் அது மடிக்காம்புகள் வழியாகவே வெளிப்படுகிறது. திருக்கோயில்களில் உள்ள இறைவனின் திருமேனிகள் காம்புகளைப் போன்றவை. எனவே அத்திருமேனிகளோடு அவை இருக்குமிடம், அதைச் சூழ்ந்துள்ள நீர்நிலைகள் போன்றனவும் சமய வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன.

**"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"** என்று தாயுமானாரும் அருளியுள்ளார். திருமேனிகளைப் போலவே இவையும் சிவ வடிவங்களாகவே திகழ்கின்றன. திருமுறைகள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**"சாலக்கோயில் உளநின்கோயில் அவைஎன் தலைமேல் கொண்டாடி**
**மாலை தீர்ந்தேன் வினையுந்துறந்தேன் வானோர் அறியா நெறியானே"**
-சுந்தரர்

**"சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே"** -அப்பர்

**"பிறவியால் வருவன கேடுள ஆதலால் பெரியஇன்பத்**
**துறவியார்க்கு அல்லது துன்பம் நீங்காதெனத் தூங்கினாயே**
**மறவல்நீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்த நீர்மல்குசென்னி**
**அறவன் ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டஞ்சல் நெஞ்சே"**
-ஞானசம்பந்தர்

போன்ற திருவாக்குகள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. எனவேதான் அப்பர் பெருமான் திருக்கோயில் இல்லாத ஊரைத் திருமகள் வாழாத ஊர் என்றும், கொடிய காடு என்றும் குறிக்கிறார். உயிர்கள் இம்மை மறுமை பயன்களைப் பெறத் திருக்கோயில்களே உறுதுணையாக உள்ளன.

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்கோயில்களை நம் முன்னோர் பெரிதும் போற்றி வளர்த்து வந்துள்ளனர். நால்வர் பெருமக்களும் கோயில்தொறும் சென்றே சமயத்தையும், தமிழையும் வளர்த்தனர். கோச்செங்கட்சோழ நாயனார் திருக்கோயில் அமைப்பதில் பெரிதும் ஆர்வம் உடையவர். இவர் சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்களை அமைத்தார். இதைத் திருமங்கை ஆழ்வாரும் குறிப்பிட்டுச் சிறப்பிக்கின்றார்.



**"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு**
**எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட**
**திருக்குலத்து வளச்சோழன்"** - பெரிய திருமொழி (6-6-8)

இவரையடுத்துப் பிற்காலத்தில் இராசராசசோழன் மலையை நிகர்த்த திருக்கோயிலைக் கட்டிச் சிறந்த புகழை அடைந்தான். திருக்கோயில்கள் மொழி, சமயம், சிற்பம், ஓவியம், ஆடல், பாடல், கல்வி, பண்பாடு முதலியவற்றுக்கு நிலைக்களமாக இருந்து வந்துள்ளன. இத்திருக்கோயில்கள் தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன.

தமிழ் மன்னர்கள் மட்டுமின்றிப் பொதுமக்களும் ஏராளமான திருக்கோயில்களை அமைத்தனர். தெய்வத் திருவுருவத்தைத் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து, இருந்து அருள் செய்வதற்கான வழிபாட்டு முறைகள் திருக்குட நீராட்டு என வழங்குகிறது. இம்முறை அவ்வப்பகுதிகளின் வழிபாட்டு முறைகட்கு ஏற்ப அமைகின்றன. தமிழகத்தில் திருக்கோயில்கள் பல அமைப்புக்களில் இருக்கின்றன என்பதை அப்பரடிகள் அருளியுள்ளார். ஆங்காங்கே நின்ற இறைவனுக்குக் கோயில் எடுத்துள்ளனர் பத்தினித் தெய்வக் கோயிலைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம். பெருங்கதையில் கட்டடக் கலையின் அமைப்பு முறைகள் கூறப்படுகின்றன. பெரிய புராணத்தில் பூசலார் புராணத்தில் மனக்கோயில் அமைத்த முறையைச் சேக்கிழார் கூறுகிறார். **'உள்ளம் பெருங்கோயில்', 'காயமே கோயிலாக'** என்பன போன்ற அருள்பாடல்களைக் காண்கின்றோம்.

பண்டைய முறையில் பத்தியில் சிறந்தோர் எங்கும் பரந்து, எல்லாமாய் விளங்கும் முழுமுதலைத் தாம் எண்ணிய வடிவத்தில் எழுந்தருளச் செய்தனர் என்பது தலபுராணங்களில் காணப்படுவனவாகும். எழுந்தருளச் செய்யும் முறை காலப்போக்கில் வடமொழியில் மட்டுமே நின்று அயல்நெறி மரபுகளாய் நிலைபெற்றன. பண்டைக்காலம் முதலே கோயில் அமைத்தல், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை விளக்கும் நூல்களும் அவ்வப்பொழுதிருந்தே தோன்றி வளர்ந்து வந்துள்ளன. அவை முதலில் தமிழிலும், பிற்காலத்தில் வடமொழியிலும் ஆக்கப்பட்டன. நாளடைவில் தமிழ் நூல்கள் மறைய வடமொழி நூல்கள் நிலைத்தன. இன்று அவையும் அருகி வருகின்றன.

திருமுறைப் பாடல்கள் இறைவன் அருள் பெற்றவர்களால் வழங்கப்பட்டன. எனதுரை தனதுரையாக ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கித் தெய்வத் திருவருள் வடிவாய் நின்று அருளிய பாடல்களாகும். இறைவன் வான்பழித்து மண்புகுந்து மனிதனை ஆட்கொள்வதற்குத் திருமுறைப்பாடல்கள் துணைபுரிகின்றன. வண்ணம் காட்டி வடிவு காட்டி ஆட்கொண்ட பெருமையைத் திருமுறைப் பாடல்களால் உணர்கிறோம். நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்த நிலையே திருக்கோயில்கள், திருத்தொண்டர் புராண வரலாறுகளாகும். திருக்கோயில்கள் திருவுருவங்கள், வழிபாட்டு முறை ஆகியன பற்றிய செய்திகள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பரவி வளர்ந்திருக்கின்றன. பாரதநாடு இமய மலைக்கும், கன்னியாகுமரிக்கும் இடையில் உள்ள நாடு. இந்நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் தத்தம் மொழியில் இறைவழிபாடு செய்கின்றனர். அவற்றுள் தொன்மை மொழியாகத் திகழ்வது தமிழ். இது உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்படுகிறது. தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுதியாக உள்ளன. ஆகமங்கள் பலமொழிகளில் ஏத்தலாம் எனக் கூறுகின்றன.

**"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்**
**கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்**
**கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்**
**திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்து இறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"** - அப்பர்

அறு சமய வழிபாட்டில் சிவநெறியும், திருமால் நெறியும், பெரிதாக இடம்பெறுவன. சிவநெறியில் விநாயகர், முருகன், சத்தி ஆகியன இணைந்துள்ளன. பருதி (சூரியன்) வழிபாடு இருவகை நெறிக்கும் உரியதாகக் கொள்ளுகின்றனர். இத்தகைய வழிபாட்டுக்குரிய முறைமைகளைக் கூறுவது ஆகமம் எனப்படும். இந்நூல் தமிழ்மொழியில் சிறப்பாக விளங்கி அயல் வழக்குகள் புகுந்த காலத்து வடமொழியாக மாறியிருக்க வேண்டும். சிற்பநூல் தமிழர்களுக்கு முற்றிலும் உரியது என்பதற்குத் தமிழகத்தின் சிற்பக்கலைகள் நிறைந்த கோயில்கள் சான்றாக விளங்குகின்றன.

சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைக்கப்படும் பொழுது அதில் எல்லாத் தெய்வங்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. திருமால், பிள்ளையார், முருகன், அம்பிகை முதலிய தெய்வங்களுக்குத் தனித்தனியாகவும், சேர்த்தும் திருக்கோயில்கள் அமைக்கப்படுகின்றன. திருமால் கோயில்களில் திருமால், திருமகள், நிலமகள் முதலிய தெய்வங்களுக்கு மட்டுமே திருமேனிகள் நிறுவப்படுகின்றன. இவையல்லாமல் ஊர்க்காவல் தெய்வங்களாகச் சில தெய்வங்கள் அமைந்துள்ளன. இவற்றுக்குப் பெரும்பாலும் சிறிய கோயில்கள் அமைப்பது வழக்கம். மேற்குறிப்பிட்ட திருக்கோயில் அமைப்பு முறைகளில் பல விதிமுறைகள் அமைந்துள்ளன. திருக்கோயில் அமைத்தல், அதற்குத் திருக்குட நன்னீராட்டு முறைகள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றைப் பார்ப்போம். இவையனைத்தும் தெய்வத் திருமுறைகளின் அடிப்படையிலும் வேறுசில அருள்நூல்களின் துணையிலும் அமைந்துள்ளன. புதிய திருக்கோயில்கள், புதுப்பித்த திருக்கோயில்கள் ஆகியவற்றிற்கு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக்களை திருநெறிய தமிழ்முறைப்படி நடத்துவதும் அதற்காக வேள்விச்சாலை அமைத்தல், மேடைகள் குண்டங்கள் அமைத்தல், வழிபாட்டு முறைகள் ஆதியன இந்நூலில் காண்போம்.

திருச்சிற்றம்பலம்

சாந்தலிங்கர் அருள்நெறி மன்றம்,
பேரூராதீனம், பேரூர், கோவை-641010.

# சோழமன்னர்கள் செய்ததை இந்த நூற்றண்டில் முன்னெடுக்கும் அரன்பணி அறக்கட்டளை

## இருபதாயிரத்திற்கு மேற்பட்ட அடியார் விழுதுகளைப் பரப்பி நிற்கிறது

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியாக இருக்கும் பெருமான், அடியார்கள் மனதை இடமாக கொண்டுள்ளான், இத்தகைய செம்பொருளான சிவபிரானுக்கும், சிவனடியார்க்கும் தொண்டு செய்து, அவனடி அடைந்தவர்கள் பலர். அத்தகைய சிவனடியார்கள், காலந்தோறும் தோன்றிப் பணிந்தும், பணிகள் பல செய்தும் பேரும் சீரும் பெற்றனர். அச்சிவனடியார் பெருமக்கள் வரலாறு, விரிவாக கிடைத்தது சைவம் பெற்ற பெரும் பேறாகும்.

நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் சிவனுறை பதிதொறும் சென்று, பணிந்து பாடியவையே **“தேவாரம்”**. இத்தேவாரப் பதிகங்கள் அக்கால சூழ்நிலையை, அன்று வாழ்ந்தோரை, இக்காலத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் நாம் அறிய உதவுகிறது. உழவார படையாளியாம் **“நாவரசர்”** தூய்மை தொண்டு செய்த தூய தொண்டர், **“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்அப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி”** எனக்கூறி அன்பின் ஆழம் அறியவொண்ணா நிலையைப் புலப்படுத்தியுள்ளார்.

**முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்**
**மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்**
**கன்னங்களவு மிகுத்திடுங் காசினி**
**என்னரு நந்தி எடுத்துரைத் தானே**

திருமூலர் இப்பாடலில் சிவபெருமானது திருகோயில்களில் பூசைகள் செய்யத் தவறினாலோ, கோயில்களை பராமரிக்க தவறினாலோ, அந்நாட்டு மன்னன் வலிமை குன்றியும், அந்நாட்டு மக்கள் நோய் நொடிகளால் வாடியும், களவும், பிணியும், வறுமையும் உண்டாகும் என்று கூறிப் போகின்றார்.

செம்பொருளின் பெருமையை உணர்ந்த நம் பெரியோர்களும், பேரரசர்களும் **“பூசனைக்கு பொருந்தும் இடம்பல பேச்சில் அத்திசை ஒவ்வா பிறதிசை”** என்ற சேக்கிழார் வாக்கிற்கு இணங்க, பல விண்ணைத்தொடும் கோபுரங்களுடைய கோயில்களை கட்டினார்கள். அத்திருகோயில்களை பராமரிக்க விளைநிலங்களை தானமாக கொடுத்தனர்.

தமிழனின் அடையாளம், பண்பாடு, வாழ்வியல் அனைத்தும் கோயில்களை சார்ந்தே இருந்தது. இவை அனைத்தும் இடைப்பட்ட காலத்தில் மறந்து நிற்பதனால், பல கோயில்கள் இடிபாடுகளுடனும், வெட்ட வெளி, ஏரி ஓரங்களில் சிவலிங்க திருமேனிகள் மழையிலும் வெய்யிலிலும் காய்ந்து கிடக்கின்றது. பல சிவாலயங்கள் பராமரிப்பு இன்றி, சிதைந்து இருக்கின்றது.

இவ்வாறு சிதலமடைந்தும், பூசைகள் இல்லாமல் இருக்கும் திருகோயில்களை சீரமைத்து, ஒரு வேலை பூசை நடைபெற ஏற்பாடு செய்தல் பொருட்டு, பெருமானின் பெருங்கருணையால் தொடங்கப்பட்டதே ‘அரன் பணி அறக்கட்டளை’.

எல்லாம் வல்ல இறைவனின் கருணையினால் நம்தம் பெருமக்களாகிய நாயன்மார்களுடைய குருவருளும் முன்னின்று அருள் செய்ய, **“என் கடன் பணி செய்து கிடப்பதே”** என்ற அப்பர் பெருமானின் வாக்கின்படி, நம்தம் அருட்குருநாதர் சிவ ஒளியரசு ஐயா அவர்களின் தலைமையின் கீழ், பவானி சிவனடியார்கள் திருக்கூட்ட தலைவர் சிவ தியாகராசன் ஐயா அவர்களின் சீரிய சிந்தனையில், தனது அறங்காவலர் குழு அன்பர்களை கொண்டு, **‘அரன் பணி அறக்கட்டளை’** வடிவமைக்கப்பட்டது.

தம்பிரான் தோழர் அவதாரம் புரிந்த திருவிடத்தை கற்றளியாக அமைக்கும் நற்பேறு அரன்பணிக்கு அமையப் பெற்றது. சற்றொப்ப இருபது நூறாயிரத்திலே தொடங்கி நிறைவு செய்ய நினைத்த திருப்பணியினை, இன்று சற்றொப்ப ஏழு கோடியிலே சிறந்தடியார் பங்குடன் கடந்து நடந்து வருகின்றது. பல இன்னல்கள் இடர்பாடுகளை திருவருள் முன்னிற்க வெற்றி கொண்டு, நம்பியாரூரர் திருக்கோயில் குடமுழுக்கு ஒண் தமிழ் மந்திரங்கள் ஓதி, தடை வந்த போதும் முன்னவனே முன் நிற்க, அறங்கூறும் அவையத்து அறவரசர் நீதி விளம்ப, அருட்குருநாதர் சிவத்திரு ஒளியரசு ஐயா அவர்களால், முனைவர் சிவத்திரு. சென்னியப்பனார் போன்ற சைவ சமயச்சான்றோர் பலர் முன்னிலையிலே, பல்லாயிர அடியார் பெருமக்கள் புடைசூழ இனிதே நடைபெற்றது.



ஞானப்பிள்ளையாரும் வாக்கின் மன்னரும் சந்தித்த இடமாகிய, தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், சம்பந்தர் மேடு வரலாற்றுப் பேறினைப் போற்றும் வண்ணம் கற்கோயில் அமைக்கப்பட்டதும் அரன்பணியினாலேயே. நாவலூர் திருப்பணி நடைபெற்று வந்த சூழலில், பவானி சிவ தியாகராசன் ஐயாவிடம் வழுதரெட்டி என்னும் ஊரில் இருந்து பெண்மணி ஒருவர் தான், ஒரு சிவலிங்க திருமேனி சேற்றினுள் புதையுண்ட நிலையில் உள்ள பெருமானுக்கு கோயில் எழுப்ப முயற்சித்தும் முடியாத சூழலில் பாதியில் திருப்பணி நிற்பது குறித்தும், அதை ஐயாவை பணி நிறைவு செய்து தர உதவிகேட்டு, அப்பணியை பார்வையிட அழைத்துள்ளார்.



ஐயாவும், பெண்மணி கோரிக்கையை ஏற்று பார்வையிட சென்ற இடத்தில் கண்டகாட்சி, இதயத்தை தைக்க, நம் பொருட்டு நமக்காக ஒன்றாய், உடனாய் வேறாய் நின்று அருள் செய்துவரும் பெருமான் திருமேனி இன்னும் இதுபோல் எத்துனை கிடக்கின்றதோ என வருந்தும் நிலையில், மற்றொரு அன்பர் சிதலமடைந்த சிவாலயங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டன, தாம் சேகரித்து வைத்திருந்த திருக்கோயில் விபரங்களை அரன்பணி அறக்கட்டளைக்கு அளித்தார்.

திருப்பணிகளுக்கு திரும்ப திரும்ப கொடுத்துக் கொண்டிருப்பதாலும், இச்சிவ புண்ணியத்தில் அனைவரையும் பங்கெடுத்துக்கொள்ளும் வண்ணம், திங்கள்தோறும் ஒரு நபருக்கு 100 ரூபாய் என்ற திட்டம், கால வரையறை இல்லாமல் சிவப்பணிக்கு வழங்கும் திட்டம், முன்னவனே முன்நின்று அருள்செய்ய **‘அரன்பணி அறக்கட்டளை’**, 2020 ம் ஆண்டு எங்கள் மரபுத் திங்களாகிய மார்கழித் திங்களில், அருட்குருநாதர் ஒளியரசு ஐயா அவர்கள் தலைமையில், பவானி சிவனடியார் திருக்கூட்ட தலைவர் சிவ தியாகராசன் ஐயா அவர்கள் அறங்காவலர் குழுவை கொண்டு, தெரிந்த அடியார்களை விழுதுகளாக்கி, இத்திட்டத்தின் வாயிலாக, ஒரு ஆயிரம் நபர் இணைந்தால், திங்கள்தோறும் ஒரு நூறாயிரம் ரூபாய் தொகை பெறுவதை கொண்டு, வெட்டவெளியில் கிடக்கும் சிவலிங்க திருமேனிகளுக்கு மேற்கூரை அமைக்கும் பணியை துவங்க எண்ணினார்.

திருவருட் பெருங்கருனையும், அடியார் பெருமக்கள் பெருமானின் பால் கொண்ட அன்பினாலும், பவானி ஐயாவின் பால் வைத்த பத்தியின் பொருட்டு அகம் மகிழ்ந்து, ‘கன்று ஆவின் பின் தொடர்வது போல்’ அவரைத் தொடர்ந்து, இத்திருப்பணியில் இணைந்து கொண்டவர்கள் ஆறாயிரத்து ஐநூறு பேர். யாரும் எதிர்பாராத அன்பர்களின் எண்ணிக்கை, அறக்கட்டளையின் பணிகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்து சென்று, பொதுமக்களும் இத்திட்டத்தில் எளிமையாக இணைந்து தொகை செலுத்தும் வகையில், கைபேசி செயலி முறைமையை ஒன்றை கொண்டுவந்தனர்.

**அரன்பணி அறக்கட்டளையின் பணிகளாக நான்கு திட்டங்கள் தொடுக்கப்பட்டது.**

1) வெட்ட வெளியில் உள்ள சிவலிங்கத் திருமேனிகளுக்கு தகரகூடம் அமைத்துக் கொடுத்தல்.

2) வழிபாடுகள் நடக்கும் மற்றும் ஊர் மக்களின் ஆர்வத்தைப் பொறுத்து, பெருமான் மற்றும் அம்மைக்கு கருவறை, ஒருநிலை மண்டபம் அமைத்தல்.

3) பழமையான சிவாலயங்களுக்கு அந்த பழமையை மாறாமல் கோயிலை அவ்வாரே புதுப்பித்தல்.

4) (அ) கோயில்களை பராமரிப்பது மற்றும் கோயில்களை சுத்தமாக வைத்திருப்பது.

(ஆ) மின்சார பணிகள் மற்றும் தண்ணீர் வசதி செய்வது.

(இ) மண்டபங்கள் பாழடைந்த நிலையில் தோன்றாமல் இருக்க அதற்கு தேவையான நிறப்பூச்சுக்கள் பூசி பாதுகாத்தல்.

(ஈ) சாமிக்கு ஆடைகள் சாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து தருதல்.

### திட்டம் 1:

53 சிவலிங்க திருமேனிகளுக்கு மேற்கூரை அமைத்து, குடமுழுக்கு செய்து, ஊர்மக்களிடம் ஒப்படைக்கபட்டது.





### திட்டம் 2:

இரண்டாம் திடத்தின் கீழ் 13 திருகோயில்களின் திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் பொன்மான் வேய்ந்த நல்லூர், கோடுகிழி, செருத்துணை நாயனார் ஆலயம் திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டது. மீதமுள்ள திருக்கோயில் பணிகள் நடைபெற்று வருகின்றது.





### திட்டம் 3:

சுமார் 15 வரலாற்று திருகோயில்களில், வீரசோழபுரம், நறுவெளி, பாளையம்கோட்டை காசி விசுவநாதர் கோயில், குரங்கணில் முட்டம், ஆகிய பணிகள் நிறைவு செய்யப்பட்டது.





### திட்டம் 4:

திருவாப்பாடி, புரசகுடி என்ற தலத்தில் நிறப்பூச்சு பூசுதல், விக்ரமங்கலம், சிக்காடு போன்ற பல தலங்களில் பல்வேறு பணிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.






“மண் தோன்றிய போதே மங்கை தோன்றியது” என்ற பழமொழியின் மூலம், இறைவனது ஊரான திருஉத்திர கோசமங்கை திருத்தலத்தின் பழமையை அறியலாம். இத்தல வரலாற்றில் இராவணன் மனைவி மண்டோதரி பெயர் கல் வெட்டு குறிப்பு உள்ளது. இத்தலம் சுமார் 7000 ஆண்டுகளுக்கு மேலான பழமையான தலம், இத்தலத்தினை மணிவாசக பெருமான் தனது திருவாசகத்தில் 38 இடங்களில் கூறியுள்ளார்.

**(12ஆம் பக்கம் பார்க்க)**

# சோழமன்னர்கள் செய்ததை இந்த நூற்றண்டில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு ஆண்டுகள் பழமையான ஆலயத்தை பாண்டிய மன்னர்கள் உட்பட பலர் திருப்பணிகள் செய்துள்ளனர். அந்த வரிசையில் இந்த 21ம் நூற்றாண்டில் வாழும் நமக்கும் மிகப்பெரிய வாய்ப்பாக, அரன் பணி அறக்கட்டளை மூலம் திருப்பணிகள் செய்ய வாய்ப்புகிட்டியுள்ளது.

மணல் பாறைகளினால் கட்டப்பட்ட கோயில் நந்தி மண்டபத் தூண்கள் சிதலமடைந்த நிலையை மாற்ற கடுக்காய், சுண்ணாம்பு, மணல், வெல்லம் சேர்த்து அரவையால் அரைத்து பூச்சு போடும் முறையால், நந்தி மண்டபம் தூண்கள் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு பாதுகாப்பாக்கப்பட்டது. இத்திருப்பணி நடந்து கொண்டு வரும் வேளையில், பவானி தியாகராசன் ஐயா அவர்கள் தலைமையில், அறங்காவலர் குழு விழுதுகளும், பல அடியார் பெருமக்களும் இத்தலத்திற்கு சென்று பார்வையிட்ட போது, அங்கு வந்த சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் அவர்கள், சிவனடியார்கள் பெருமைகளை எடுத்துரைத்து, பவானி தியாகராசன் ஐயா செய்யும் திருப்பணிகளால் நம் வரலாறும், நாகரிகமும் பாதுகாக்கப்படுகின்றது என்று கூறி வாழ்த்தி வணங்கினார். இக்கோயில் நந்தி மண்டபத்தில் உள்ள தூண்கள் பணி நிறைவடையும் தருவாயில், இன்னும் கோயிலில் உள்ள எல்லாத் தூண்களையும் அரன் பணி அறக்கட்டளை சீரமைத்துத் தருவதாக ஐயா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

## செப்பனிடப்படும் உத்தரகோசமங்கை கோயில் தூண்கள்

அத்துடன் திருநாவுக்கரசு நாயனார் கரையேறிய இடமான கரையேற விட்ட குப்பம் மற்றும் மணிவாசக பெருமான் அவதாரம் செய்த இல்லமான திருவாதவூர் இல்லம்


செப்பனிட முன்னர் - உத்தரகோசமங்கைத் தூண்கள்


செப்பனிட முன்னர் - உத்தரகோசமங்கைத் தூண்கள்


செப்பனிட்ட பின்னர் - உத்தரகோசமங்கைத் தூண்கள்


செப்பனிட்ட பின்னர் - உத்தரகோசமங்கைத் தூண்கள்

போன்றவற்றை முழுமையான கற்றளி கோயிலாக அமைக்கவும் திருவருளும் குருவருளும் கூடியுள்ளது. நமது அரன்பணி அறக்கட்டளை மூலமாக 103 திருகோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 78 இடத்தில் திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் திருப்பணிகள் நடைபெற்றும் வருகின்றது.



**“ஆலயம் தொழுவது சாலவும் நன்று”** என்பது ஔவையின் பொன்மொழி, **“தென்னாடுடைய சிவனே போற்றி”** என்பது மாணிக்கவாசகர் வாக்கு, **“மாதவம் செய்த தென்திசை”** என்பது பெரியபுராணத்தில் சேக்கிழார் வாக்கு, தமிழகம் தெய்வத் தன்மையோடு சேர்ந்து இருக்கின்ற பூமி. இங்கு,

**“யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம் பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே.”**



எனும் திருமூலர் வாக்கிக்கிணங்க, உண்ணப்புகும் பொழுது இறைவனுக்கு ஒரு பச்சிலை சூட்டி வணங்குதலும், பசுவிற்கு வாயுறை புல் குடுத்தலும், வறியர்க்குச் சிறிது சோறிடுதலும், மற்றவரிடம் இன்சொல் பகர்தலும் எல்லார்க்கும் இயல்வனவே! இதுவே தமிழரின் பண்பாடு.

தமிழரின், பண்பாடும், மொழியும் ஆலயம் சார்ந்தே இருக்கின்றது. எம் பெருமக்கள் **“ஆலயம் சார்ந்து இரு”** என்றும், **“கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்”** என்றும் கூறியுள்ளனர். திருக்கோயிலை மையமாகக் கொண்டுதான் நமது வாழ்க்கை முறையும், வளமும் சிறக்கும். இவையெல்லாம் இடைப்பட்ட காலத்தில் மறந்து நிற்பதனால், பல கோயில்கள் பேணுவார் இன்றி வெட்ட வெளியிலும், ஏரி ஓரங்களிலும், சிவலிங்கத் திருமேனிகள் மழையிலும் வெயிலிலும் பழுதடைந்து வந்துள்ளன. பழுதடைந்த ஆலயங்களை திருப்பணி செய்து எம் மரபு மாறாமல் காத்து மீண்டும் புதுக்க வேண்டும். இது ஒவ்வொரு சைவத்தவனினதும் கடமை.

**“ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்**
**போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்**
**கூற்றுதைத் தான் திருக் கோயில்க ளானவை**
**சாற்றிய பூசைகள் தப்பில் தானே”**

நாள் பூசைகள், திருவிழாக்கள் முதலியன எந்தவித முட்டுப்பாடுமின்றி தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். எமது திருக்கோயில்களில் பன்னிரு திருமுறைகள் ஓயாது ஒலித்தல் வேண்டும். ஆகவே, எமது கோயில்களை பாதுகாப்பது எம்முடைய கடமை. சைவ சித்தாந்தம் எதை சொல்கிறதென்றால், நீங்கள் எதை செய்கிறீர்களோ, அவையே உங்களை நோக்கி வரும். நேற்று என்ன செய்திறீர்களோ, அது இன்று கிடைத்திருக்கிறது. இன்று செய்வது நாளை நிச்சயம் வரும்.

நமது முன்னோர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே, விண்ணைத்தொடும் அளவிற்கு கோபுரம் அமைத்து, கற்கோயில்கள் அமைத்து, பாதுகாத்து வந்தனர். எமது பண்பாட்டையும் மொழியையும் மீட்டெடுக்கும் பொருட்டு, சிதலமடைந்த திருக்கோயில்களை பழமை மாறாமல் சிவப்பணி செய்து, திருவருள் கூட்ட அரன்பணி அறக்கட்டளை உருவானது. ஊராரையும் ஊக்குவித்து, உடையவர் திருக்கோயில் மேம்பட வழி வகுப்பதே **“அரன்பணி அறக்கட்டளை”**யின் நோக்கமாகும். சிவ பணியில் நாமும் பங்களித்து, பிறவிப்பிணி நீங்கி, திருவடிப்பேறு பெறுவோம்!

சிவாலய திருப்பணி செய்ய விரும்பும் அன்பர்கள், வரலாறு மற்றும் நம் கலாச்சாரத்தை போற்றி பாதுகாக்க நினைக்கும் அனைவரும் “ARANPANI” எனும் கைப்பேசி செயலியை பயன்படுத்தி இணைந்து, திங்கள்தோறும் 100ரூபாய் செலுத்தி அரன் பணியில் தங்களை இணைத்து, நம் வரலாற்றை பாதுகாக்க, பேருதவி புரிய வாய்ப்புகிட்டியுள்ளது.

இதுவரை இந்த அரன்பணியில் இருபத்து ஒன்றாயிரத்துக்கும் மேற்பட்ட அன்பர்கள் இணைந்து கொண்டு, சிவபுண்ணியம் ஈட்டுகின்றனர். இச்செயலியில் உள் நுழைந்தால், அரன்பணி திட்டத்தை பற்றியும், இதுகாறும் செய்த பணி குறித்தும், நீங்கள் செலுத்தும் தொகை சரியாக உள்ளதா? என நேரடியாக கவனித்துக்கொள்ளலாம்.

நம் சிவாலயங்கள் புனரமைக்கும் பணி அதிகமாக உள்ளதால், அன்பர்களே! இணைந்து நம் வரலாற்றையும் மரபையும் பாதுகாத்திட, சிவ புண்ணியத்தை சேர்த்திட வாரீர்.

இத்திருப்பணியில் நீங்களும் இணைத்துகொண்டு ஈசனுக்கு கோயில் அமைக்க விரும்பின், “ARANPANI” செயலியோடு இணையுங்கள். (ஒரு அடியாரிடம் ரூபா 100.00 மட்டுமே)


**“அரன் பணி இணைவீர் பிறவிப்பிணி அறுப்பீர்.”**

திருச்சிற்றம்பலம்

அரன்பணி அறக்கட்டளை
+91- 81 22 33 89 89
aranpanitrust@gmail.com

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:

# எம்பிரான் திருஞானசம்பந்தன்



## சமணம் தழுவிய பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்தல்

திருஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் திருவாய்மூரில் நிலைபெற்று அருளிவரும் இறைவனைப் பாடித் துதித்து, சிறிதுகாலம் தங்கியிருந்து, பின் மீண்டும் அங்கிருந்து மீண்டு, தேடும் மறைகளினால் வணங்கப் பெற்ற இறைவனின் திருமறைக் காட்டை சேர்ந்தனர். இங்ஙனம் இவ்விரு பெருமக்களும் அவ்விடத்தே இருந்து வந்த காலத்தில், கண்ணுதற் பெருங்கடவுளே மன்னனாகவும், கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த புலவர் தலைமகனாகவும் நின்று காத்த பெருமையுடைய பாண்டிய நாட்டில், இதுகாறும் கொண்டொழுகிய நல்லொழுக்க நெறியினின்று தவறி, சமண சமயம் மிகுந்தது. பாண்டிய மன்னனும் முன்செய்த தீவினைப் பயனால், அச்சமண நெறியின் சார்பையே நல்லறம் என எண்ணி அவ்வழியே ஒழுகினான்.

இறைதிருவருளால், பாண்டிய மன்னன் உய்யும் பொருட்டுச் சோழர்பெருமான் மங்கலமாகப் பெற்ற செல்வம் பொருந்திய பாண்டிமாதேவியாரான மங்கையர்கரசியாரும், வீரக்கழலை அணிந்த அமைச்சர் குலச்சிறையார் ஆகிய இருவரும் மட்டுமே சைவநெறியில் நின்று விளங்கினார். அறநெறியோடு, அரன்நெறியையும் காத்துவந்த பாண்டியர் மரபை மீட்கும் பொறுப்பு அரிசியையும், அமைச்சரையுமே சார்ந்திருந்தது. இத்தகைய நேரத்தில், உலகம் உய்ய வந்த ஞானசம்பந்தப் பெருமான் திருமறைக் காட்டில் வீற்றிருந்தருளும் செய்தி, பாண்டிய நாட்டை வந்தடைந்தது.

அங்ஙனம் கேட்டபோதே, குலச்சிறையாரும் மங்கையர் கரசியாரும், உள்ளத்தில் பொங்கி எழுகின்ற மகிழ்ச்சி மீதூர, **“சம்பந்தரின் திருவடிகளை சென்று வணங்குங்கள்”** என்று, ஏவலர்களை திருமறைக் காட்டிற்கு அனுப்பினார்கள். திருமறைக்காட்டை சேர்ந்து, பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் திருமடத்தை அடைந்த ஏவலர்கள், ஞானசம்பந்தரிடம் தங்கள் வருகையின் காரணமான பாண்டிய நாட்டின் நிலையை எடுத்துரைத்தனர். ஞானக்குழந்தையானவர் திருவுள்ளம் கொண்டு மதுரைக்கு புறப்பட்ட வேளையில், அப்பர் பெருமான் **“கோள் நிலைகள் தீயனவாய் உள்ளன் ஆதலினால் அங்கே செல்வதற்கு இசைவளிப்பது தகாது”** என்று உரைத்தருள, புகலி வேந்தரோ, **“நாம் வணங்கிப் போற்றுவது பெருமானின் திருவடிகளை, எனவே எம்மை தீங்கு ஏதும் அணுகா”** என்று கூறி, பெருமானின் திருவடிகளை வணங்கி **“வேயிறுதோளி”** எனத் தொடங்கும் ‘கோளறு பதிகம்’ (கோள், அறு - கோள்களின் தாக்கங்களை அறுக்கின்ற பதிகம்) பாடியருளினார்.

ஞானசம்பந்தர் அருளிய அப்பதிகத்தை கேட்ட நாவுக்கரசரும் திருவுள்ளம் கொண்டு, பாண்டிய நாட்டுக்குச் செல்ல உடன்பட்டு, முன்னாகச் செல்ல ஒருபட்டப்போது, சம்பந்தப் பெருமான் **“அப்பரே! இந்நீர் நாடான சோழநாட்டில் எழுந்தருளியிருப்பீர்!”** எனக் கைமலர்க் கூப்பி வணங்கி, அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, முத்துச் சீவிகையிலேறி பாண்டியநாட்டிற்கு புறப்பட்டார். திருவகத்தியான்பள்ளி, திருக்கடிக்குளம், திருஇடும்பாவனம் ஆகிய தலங்களை முடித்துக் கொண்டு திருவுச்சனத்தை அடைந்து, அங்கு திருமால் வழிபாட்டை போற்றி, **“நீரிடைத் துயின்றவன்”** எனத் தொடங்கும் பதிகம் பாடியருளினார். பின்னர் திருவுச்சனத்திலிருந்து புறப்பட்டு திருக்கொடுங்குன்றத்தை அடைந்து, அத்தல இறைவனையும் வணங்கிக் கொண்டு, மதுரையை வந்தடைந்தார்.

திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டை வந்தடைந்த செய்தியை அறிந்த, மங்கையர்கரசியார் அன்பு வெள்ளமானது பெருகிட, குலச்சிறையாரை நோக்கி, **“இங்குத் தாங்கள் எழுந்தருளியமையால் யாங்கள் உய்வு பெற்றோம்” என்று கூறி வரவேற்பீராக!”** என மொழிந்தார். குலச்சிறையாரும் ‘வெற்றியுடைய மன்னருக்கும் இச்செயல் உறுதியை அளிப்பதே ஆகும்’ என்று பொன் மாடங்களையுடைய திருவீதிகளை உடைய மதுரையின் புறத்தே விரைவாகச் சென்று, இனிய தமிழால் மறைகளை அருளிவரும் சம்பந்தரை வரவேற்க ஏற்பாடுகள் செய்தார்.

சிவபெருமானின் அருட்செல்வம் பொருந்திய அழகிய முத்துச் சிவிகையின் மேலே வணங்கியவாறு வருகின்ற நிலவு பொழியும் மதிபோல் வளரும் ஒளி பொருந்திய முத்து வெண் குடை நிழலைச் செய்யவும், பெருகும் ஒளியுடைய திருநீறணிந்த திருத் தொண்டர்களின் கூட்டம் சூழ்ந்து வரவும், திருவருள் பெருக வந்து தோன்றிய சிவஞானஅமுது உண்ட சம்பந்தர் மதுரையை வந்தடைவாராயினர்.

ஞானக்குழந்தையாரை காணப்பெற்ற நொடியிலேயே, குலச்சிறையார் இரு கை கூப்பி வீழ்ந்து வணங்கினார். சீர்காழிச் செல்வரான பிள்ளையார், குலச்சிறையாரை அடைந்து பற்றி மேலெடுப்ப, அக்குலச்சிறையாரும் கைதொழுது திருமுன்பு நிற்க. **“சோழ மன்னரின் மகளான மங்கையர்கரசி அம்மையாரும், திருந்திய சிந்தையுடைய உமக்கும் சிவபெருமான் திருவருள் பெருகும் நலம்தான் சிறந்துள்ளதே!”** என்று கூறியருளினார். பிள்ளையாரின் ஞானவாக்கால் உளமுருகிய குலச்சிறையார், பாண்டிய நாட்டின் நிலையை எடுத்துரைத்தார். இங்குத் தாங்கள் எழுந்தருளியதைக் கேட்ட உடனே, மங்கையர்க்கரசியாரும் **“‘நம்முடைய வாழ்வு எழுந்தருளி வருகின்றது’ என இயம்பி ‘அங்கு நீவிர் எதிர்சென்று வரவேற்றுத் திருவடிகளைப் பணிவீர்’ என அருள் செய்தார்”** என்று குலச்சிறையார் போற்றினார்.

சம்பந்தரும் குலச்சிறையாரை பார்த்து **“இவ்விடத்து நம் இறைவர் உறையும் திருவாலவாய் ஆனது எம்மருங்கில் உள்ளது”** என வினவினார். குலச்சிறையாரும் கைகளால் சுட்டிக்காட்டி, “மணம் கமழும் சோலைகளால் சூழப்பட்டு, ஒளிவிளங்கும் வானை அளக்கும்படி நீண்ட கொடிகள் சூழ்ந்த பெரிய நெடிய கோபுரங்கள் தோன்றும் இடமே, எலும்பின் அணிகளை அணிந்த இறைவர் இனிதாய் விரும்பி, வீற்றிருக்கும் திருவாலவாய் ஆகும்” என உரைத்தார்.

சம்பந்தப் பெருமானும் குலச்சிறையார் காட்டிய திசையில், தரையின் மீது விழுந்து, பணிந்து, எழுந்து நின்று, **“மங்கையர்கரசி”** எனத் தொடங்கி, எண்திசையில் உள்ளவர்களும் போற்றும் திருஆலவாய் ஆவது இதுவே என்ற நிறைவுடன் கூடிய, அம்மையாரும் அமைச்சருமாகிய இருவரின் தொண்டுகளையும் சிறப்பித்தருளிய திருப்பதிகத்தைப் பாடியருளினார். பின்னர் திருஆலவாயை அடைந்து, திருத்தல இறைவனைப் போற்றி **“நீலமாமிடற்று ஆலவாயிலான்”** எனத் தொடங்கும் **“திரு இருக்குக் குறள்”** திருப்பதிகத்தையும் பாடியருளினார்.

திருஆலவாய் திருக்கோயிலை வழிபட்டு முடித்துவிட்டு, அருகேயுள்ள பிள்ளையார் கோயிலையும் வழிபட சென்றார். அங்கே அவரது வருகைக்காக காத்திருந்த மங்கையர்கரசி அம்மையார், சம்பந்தப் பெருமானைக் கண்டதுமே, **“யானும் எனது பதியும் தாங்கள் இங்கு எழுந்தருளும் இப் பேற்றைப் பெறும் பொருட்டு முன் செய்த பெருந்தவம்தான் என்னோ!?”** எனக் கூறி அவரது திருவடி வீழ்ந்து வணங்கினார். சம்பந்தப் பெருமானும் **“சுற்றிலும் பரவிய பிற சமயச் சூழலிடையே திருத்தொண்டின் நெறியை விடாது பற்றி வாழ்கின்ற தன்மையுடையவர்களே! உங்களைக் காணும் பொருட்டு வந்தோம்!”** என்று அருளிச் செய்தார்.

மங்கையர்கரசியாருக்கு விடைகொடுத்து விட்டு, குலச்சிறையாருடன் திருமடத்தை வந்தடைந்த பிள்ளையார், தனது அடியார் கூட்டத்துடன் அங்கு தங்கி தமிழ் மறைகள் ஓதி வந்தார். இதைக் கண்டு பொறுக்காத கரிய சமண வஞ்சகர்கள், மன்னனிடம் சென்று **“திருநீற்று ஒளிமிளிற சைவ வேதியச் சிறுவன் ஒருவன் பாண்டிய நாட்டை அடைந்துள்ளான். இதனால் பாண்டிய நாட்டிற்கே தீட்டு உருவாகியுள்ளது.”** என்று சூளுரைத்தனர். மன்னரும் சம்பந்தர் மீது கடும் கோபத்திற்கு உள்ளானார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# “கருவாசம் போக்கும் திருவாசகம்”



உலகில் எத்தனையோ ஒப்பற்ற நூல்கள் இருக்கின்றன. அவை வரலாறு, இலக்கியம், இலக்கணம் என பல்வேறு விதமாக மலர்ந்து மனித குலத்திற்கு பயன்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழ்மொழியில் தோன்றிய நூல்கள் தனக்கென ஒரு தனிச்சிறப்பைப் பெற்று தரணி முழுவதும் வாழ்வோரை வாஞ்சையுறச் செய்திருக்கிறது. தமிழ், மொழி என்பதைத் தாண்டி உயிரோடு தொடர்புடையதாகவும், உணர்வுகளில் பதிந்து உருக்கும் தன்மையுடையதாகவும் உள்ளது. அதனால்தான் அயல்நாட்டவர்களும் கூட இதன் சுவையறிந்து பெரும் மதிப்பைத் தமிழுக்கு அளித்தி ருக்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழை தோற்றுவித்தவனே உலக முதலாகிய சிவபெருமான் என்றால், இதன் சிறப்பிற்கு ஈடு இணையேது. அந்த வகையில் தமிழில் எழுத வேண்டுமென்ற எண்ணம் பரம்பொருளுக்கு வந்தது போலும், அதற்காகவே மணிவாசகரைப் படைத்தார் போலும் என்று நாம் எண்ணும் அளவிற்கு திருவாசகம் என்னும் அரியதில் அரிய அற்புதநூல் உருவானது. மணிவாசகப் பெருமானின் காலம் என்ன? ஏன் அவரைப் பெரியபுராணத்தில் குறிப்பிட வில்லை? என பல்வேறு விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

அறிஞர் பெருமக்களும் இரு அணிகளாகப் பிரிந்து, அவற்றிற்கான பதில்களை அளித்திருகின்றனர். எதுவாயினும் சரி, காலகாலனால் எழுதப்பட்ட இந்நூலிற்கான காலத்தை அளவிடுவது சற்று கடினமாகத்தான் இருக்கும். தொண்டரின் அன்பை பருகும் தூய நற்சோதி குருந்த மரத்தடியில் குருபரனாக வீற்றிருந்தார். அருந்தவம் புரிந்த வாதவூரடிகள் பரிகளோடு நேசத்தையும் வாங்க பொருட்செல்வத்துடன், அருட்செல்வத்தையும் ஏந்தி வந்தார். அளவற்ற அன்பினருக்கு தெளிவதனை விரும்பியருளும் வித்தகநாதன் திருப்பெருந் துறையில் திருப்பம் தந்தான். கருத்தறிந்து முடிப்பானாக காத்திருந்த கண்ணுதலோன் வாதவூர் அடிகளை மணி மணிக் கவிகளை உயிர் வருகத் தரும் மாணிக்கவாசராக மாற்றினான். அரசியலும், அமைச்சுமாக இருந்தவரை அன்பும், அருளும் உடையவராக அப்போதே மாற்றினார். இனி, எப்போதும் தப்பாமல் தன்னடியைப் போற்றுகின்ற மெய்ப்போதம் வழங்கினார். இறைவனுக்கும், மணிவாச கருக்கும் இடையில் நடந்த உயிராடலே திருவாசகம். தேடும் பொருள் சிவன் கழலே எனத் தெளிந்த வாதவூரார் நாடும் நகரமும் மெய்யில்லை நாதன் திருவடியே மெய்யென்று நயந்தினிது நாவால் பாடி நலம் பெற்றார்.

நாம் பொதுவாக திருவாசகத்தைப் நோக்குகையில் அது, அன்பின் சாரத்தை நமக்குள் உருவாக்கி உயிரைத் தொட்டு விடும். திருவாசகம் யார் ஒருவரின் உணர்வுகளில் பயணிக்கத் தொடங்கி விட்டதோ, அவரின் சித்தம் முழுவதும் சிவமே பரந்து விரிந்திருக்கும். சித்தத்தில் புதைந்த மலம் சிதைந்து, அவம் அழிந்து சிவம் பெருக வழிகாட்டுவது திரு வாசகம்.



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

உயிரணுவில் சிவத்தை மலரச்செய்யும் திருவாசகத்தில் விழுந்து தன்னை இழந்து அன்பில் தவழ்ந்தத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணிமாலையில் மணிவாசகரை குறிப்பிடுகின்ற இடத்தில் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி**
**நெஞ்சம்நெக்கு உருகி நிற்பவர்க் காண்கிலேம்**
**திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்**
**கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்**
**தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய**
**மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி**
**அன்பர் ஆகுநர் அன்றி**
**மன்பதை உலகில் மற்றையர் இலரே.**

வேதங்களை ஓதினால் கண்களில் நீர்ப்பெருக்கி நெஞ்சம் உருகி நிற்பவர்களை யாம் கண்டதில்லை. ஆனால் திரு வாசகத்தை ஒரு முறையே ஓதினாலும் கல் போன்ற மனமும் கரைந்து கண்கள் மணல் கிணறுபோல் சுரந்து நீர் பொழிய, உடம்பில் உரோமம் சிலிர்ப்பு அடைய நடுக்கம் அடைந்து பத்தர் ஆகின்றவர்கள் தவிர வேறு வகையானவர்கள் இவ் வுலகில் இல்லை. எனவே என்னிலடங்கா சிறப்புகளை தன்னகத்தே கொண்டு, விண்ணுலகம் தாண்டிய பொன்னுலகம் பெறுவதற்கு வழிகாட்டும் நூல் திருவாசகம். இனி வரும் காலங்களில் இன்னூலின் சிறப்பை உரையாடலாக வும், உயிராடலாகவும் சிந்திப்போம். திருவாசகப் பதிகங்களில் தங்களுக்குள்ள சந்தேகங்களையும், பிடித்தமான வாக்கியங் களையும் அனுப்பலாம்.

**“பந்தமறுக்க பரமனால் எழுதப்பட்ட நூல் இது**
**அன்பின் சிறத்தை ஆழமாக அனுபவித்துச் சொல்கிறது.”**

**சிவமாதவன்** +91 80981 69783

**திருச்சிற்றம்பலம்**

---

## அடியார் பெருமையின் ஆவண ஊற்று

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீஞ்செயல் கொண்ட அச்சமணர்கள், ஆதிமந்திரமான திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதுபவர்களை எந்த மந்திர மாயங்களும் தீண்டாது என்பதை அறியாமையினால், மந்திர சூழ்ச்சி செய்து சம்பந்தரை விரட்ட முயன்றனர். அது பயனளிக்காதலால், சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்கு தீ மூட்டினர். சிவக்கன்றான பிள்ளையாரும் **“செய்யேனேதிரு ஆலவாய்”** எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் **“சிவனடியார் வாழும் மடத்தில் சமணர்கள் வைத்த தீ மெல்லச் சென்று பாண்டியனுக்கு ஆகுக”** என்று ஆணையிட்டருளினார். அவ்விடத்தில் மங்கையர்கரசியார் திருமங்கல நாண் பாதுகாக்கப்பட வேண்டியதை கருத்தில் கொண்டு, **“பையவே செல்க”** என்றே பணித்தருளினார். அவரது திருவருள் விரிந்து செலுத்தப்பட்ட செவ்விய தீத்தொழில் முழுவதும் கூடிய வெம்மையின் தொகுதி சென்று, பாண்டியனை அடைந்து, பெரிய தீயின் பொதியான வெப்பு நோயாக உருப் பெற்றது.

மன்னனோ நோயினால் துடிதுடித்தான். சமணர்கள் எவ்வாறு முயன்றும் நோயை தனிக்கமுடியவில்லை. மேலும் வெப்பம் அதிகரித்தே சென்றது. மன்னனின் நிலையறிந்து ஓடி வந்த மங்கையர்கரசியார் மனமுடைந்த நிலையில், சமணர்களின் தீவினைப் பயனாலே இத்துயரம் நிகழ்ந்தது என்பதை மன்னருக்கும் எடுத்துரைத்தார். மன்னரும் தன் அறியாமையை உணர்ந்து, அம்மையாரையும், அமைச்சரையும் பார்த்து **“யான் அடைந்த நோயைப் போக்கி வெற்றி கொள்பவரின் பக்கம் சேர்வேன். என் நோயை தீர்ப்பவரை அழையுங்கள்”** என்று வேண்டினார். மங்கையர்கரசியாரின் வேண்டுதலுக்கிணங்க திருஞானசம்பந்தப் பெருமானும் மன்னன் இருப்பிடத்தை வந்தடைந்தார்.

மன்னனின் கூற்றுக்கிணங்க சமணர்களும், சம்பந்தருமாக மன்னனின் இரு மருங்கிலும் வீற்றிருந்தவேளையில், சமணர்களோ மயிற்பீலிக் கற்றையை வைத்து மந்தரித்து தடவ வெப்பம் மிகுதியாகியே சென்றது. அதை ஆற்படாதவனாகி, மன்னன் சீகாழித் தலைவரைத் தன் பிணியை போக்கவும் என்ற குறிப்போடு நோக்கினார். பாண்டியனின் பார்வையின் கருத்தை உணர்ந்த சீகாழிச் செல்வரான ஞானசம்பந்தர், அவனது வலப்பக்கம் நின்று **“திருவாலவாய் இறைவரின் திருநீறே நிலையான மந்திரமும் மருந்துமாகித் தீர்ப்பதாகும்!”** என்று கூறி கொண்டு மறைகளின் கருத்தைப் போற்றி எடுத்துக் கூறுகின்ற **“மந்திரமாவது நீறு”** எனத் தொடங்கும் ‘திருநீற்றுப் பதிகம்’ பாடியருளினார்.

**திருஆலவாயில் அருளிச்செய்தது**
**இறைவன் திருப்பெயர்: சொக்கநாதர்**
**இறைவியார் திருப்பெயர்: மீனாட்சியம்மை**
**பண்: காந்தாரம் (2-66)**
**இராகம்: நவரோசு**

**திருச்சிற்றம்பலம்**

**மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாய் உமை பங்கன், திரு ஆலவாயான் திருநீறே.**

**வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு**
**போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு**
**ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு**
**சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.**

**முத்தி தருவது நீறு, முனிவர் அணிவது நீறு**
**சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு**
**பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு**
**சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே.**

**காண இனியது நீறு கவினைத் தருவது நீறு**
**பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு**
**மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு**
**சேணம் தருவது நீறு் திரு ஆலவாயான் திருநீறே.**

**பூச இனியது நீறு் புண்ணியம் ஆவது நீறு:**
**பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கு எல்லாம்**
**ஆசை கெடுப்பது நீறு அந்தம்அது ஆவது நீறு:**
**தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே.**

**அருத்தம் அது ஆவது நீறு அவலம் அறுப்பது நீறு**
**வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு**
**பொருத்தம் அது ஆவது நீறு புண்ணியார் பூசும் வெண்ணீறு**
**திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.**

**எயில் அது அட்டது நீறு் இருமைக்கும் உள்ளது நீறு**
**பயிலப் படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு:**
**துயிலைத் தடுப்பது நீறு சுத்தம் அது ஆவது நீறு்**
**அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.**
**இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு**
**பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு**
**தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு**
**அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே.**

**மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு :**
**மேல்உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண் பொடிநீறு்**
**ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு்**
**ஆலம் அது உண்ட மிடற்று, எம் ஆலவாயான் திருநீறே.**

**குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்**
**கண் திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு:**
**எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு**
**அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே.**

**ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்**
**போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்**
**தேற்றித் தென்னன் உடல் உள்ள தீப்பிணி ஆயினதீரச்**
**சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.**

**திருச்சிற்றம்பலம்**

என்று சம்பந்தப் பெருமான் திருவாய் மொழிந்தருளியவுடனே வலப்பக்க வெப்பு தணிந்தது. அவ்வாறே இடபக்கமும் திருநீற்றை தடவி, வெப்பாகிய அத்தீநோயினை முற்றிலும் போக்கினார். பாண்டிய மன்னனோ தன் தீவினை பயனை எண்ணி முற்றிலும் வருந்தி, சிவக்கன்றாகிய எம்பிரான் திருஞானசம்பந்தப் பெருமானை, வீழ்ந்து வணங்கினான். அத்தீஞ்சமணர்கள் வாயடைத்தது நிற்க, மங்கையர்கரசியார், குலச்சிறையார் உட்பட அனைவரும் மனமுருகி எம்பிரானை போற்றி வணங்கினர்.

பாண்டிய மன்னனுக்கு, திருஞானசம்பந்தப்பெருமான் அறவழி காட்டியதை சேக்கிழார் பெருமகனார். பின்வருமாறு கூறிப் போகின்றார்.

**“மீனவன் தன்மேல் உள்ள வெப்பம் எலாம் உடனே மாற**
**ஆன பேரின்பம் எய்தி உச்சி மேலங்கை கூப்பி**
**மானம் ஒன்றில்லார் முன்பு அவன் பிணி நீக்க வந்த**
**ஞானசம்பந்தர் பாதம் நண்ணிநான் உய்ந்தேன் என்றான்.”**

- பெரியபுராணம் (2669)

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - திருஞானசம்பந்தர் புராணம் (597 - 772)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

### இறந்த சித்தானையார் மீண்டும் உயிர்ப்பெறல்

சுவாமிகளுடைய திருவிளையாடல்களைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குச், சுவாமிமேல் ஒரு வெறுப்பு உண்டாகியது. அதனால் சுவாமிகளைக் கொன்று ஒழித்துவிட வேண்டும் என்று கூடச் சிலர் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் நந்தவனம் பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த சிற்றம்பலம் அவர்கள். இவர் சுவாமிகளை நஞ்சு கொடுத்துக் கொல்வதென்றே தீர்மானித்து விட்டார். தீர்மானத்தைச் செயலிலும் காட்டிவிட்டார். சுவாமிகளும் இறந்தது போல் மயங்கி விழுந்தார். வயலுக்கு தூக்கிச் செல்லப்பட்டார். வைக்கோலால் மூடப்பட்டார். நெருப்புக் கொழுத்தப்பட்டது. சித்தானைக்குட்டிச் சுவாமி தொலைந்தான் என்ற மனத்திருப்தியுடன் சிற்றம்பலம் வீடு சென்றார். எனினும் அடுத்தநாள் சுவாமிகள் வீடு திரும்பினார்.

ஆனால், குறிப்பிட்ட சிற்றம்பலத்தாருக்கு ஒரே ஒரு மகன். பெருஞ்செல்வம் படைத்தவன். இருப்பினும் சிற்றம்பலத்தார், கடைசிக்காலத்தில் மனைவியை இழந்து, பொருள் எல்லாம் இழந்து, ஐயம் ஏற்கும் நிலை அடைந்து, துன்பத்தில் அழுந்தி இறந்தார். மகனும் பிற்காலத்தில் இரு கண்ணும் இழந்து இறந்தார். வைக்கோல் சாம்பலானது போலக் குடும்பமே நிலைகுலைந்து போனது. மகான்களுக்கு மனதால் தீமை நினைத்தாலும் அவர்கள் வாழமாட்டார்கள் என்பதற்குச் சிற்றம்பலத்தாருடைய சரித்திரமே ஒரு சான்று.

### கண்ணோய் தீர்த்த கருணையாளன்

பூபாலபிள்ளை எனும் ஆசிரியருக்கு ஒருமுறை கண்நோய் வந்து மிகக் கொடுமைப்படுத்தியது. வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம், ஆங்கில வைத்தியம் எல்லாம் செய்து பார்த்துவிட்டார். நோய் தீரவில்லை. நாட்களும் ஓடிவிட்டன. ஆசிரியர் கொழும்பு வழியாகத் தனது நண்பர்களுடன் கதிர்காமம் செல்லத் திட்டமிட்டார். ஆசிரியர் கொழும்பில் படுத்திருக்கும்போது, "கதிர்காமம் சென்றாலும் கண்நோய் தீராது, சித்தானைக்குட்டியிடம் போனால் தீரும் " என்று ஒருவர் சொல்வது போல் கனவு கண்டார்.

கதிர்காமம் சென்றாலும் சித்தானையைச் சென்றடையும் வரை யாரையும் வணங்குவதில்லை, என்றொரு உறுதி எடுத்துக் கொண்டார் ஆசிரியர். கதிர்காமம் சென்றும் உள்ளத்தில் சித்தானையே தோன்றிக் கொண்டிருந்தார். சனக்கூட்டம் அதிகம், அதனால் கதிர்காமத்தை விட்டு அன்றே திரும்பிவிட்டார்.

ஆசிரியர் கதிர்காமத்திலிருந்து நேராகச் சித்தானைக்குட்டிச் சுவாமிகளிடம் சென்றார். ஆசிரியர் நடந்து செல்லும் சத்தம் கேட்டதும், "கண்ணாடி போடாது கண் வருத்தம் சுகப்படுமா? கதிர்காமம் போனாலும் தீராது, கலிங்கமிட்டாலும் தீராது" என்று கூறினார் சுவாமிகள். சுவாமிகளுடைய பாதங்களில் கண்ணீர் பெருக விழுந்து வணங்கினார் ஆசிரியர். "எல்லாம் நான் வாங்கிக் கொண்டேன். நீ சுகம் அடைவாய்" என்றார் சுவாமிகள்.

அடுத்தநாள் ஆசிரியர் வந்தார். ஆசிரியருடைய கண்ணில் நோய் இருந்த இடமே தெரியவில்லை. சுவாமிகளுடைய கண்ணில் நோய் கண்டிருந்தது. சுவாமிகளே அவருடைய நோயை வாங்கித் தாம் அனுபவித்தார். பெரிய மகான்கள் எவரையும் சீடராக ஏற்றுக் கொள்ளாத இரகசியம் இதுவேயாகும். குரு ஒருவர் ஒருவரைச் சீடராக ஏற்றுக் கொள்ளும்போது, அச்சீடனது வினையையும் ஏற்று அனுபவிக்க வேண்டியவராகிறார்.

### தீவுமுனை வெளியில் மழை பெய்வித்த அதிசயம்

1935ம் ஆண்டில் மழைக்குறைவினால் தீவுமுனை வெளியில் உள்ள கமக்காரருக்குக் களப்பாய்ச்சல் தண்ணீர் கிடைக்கவில்லை. வேளாண்மை கரிந்து சாம்பலாகுந் தறுவாயில் இருந்தது. சுவாமிகளுடைய வரவை எதிர்நோக்கியிருந்தார்கள். சுவாமிகள் வந்ததும் கண்ணீர் விட்டு அழுதார்கள். சுவாமிகள் வயலைப் பார்வையிட வயலுக்குள்ளே இறங்கிச் சென்றார்கள்.

அந்த நேரத்தில் சுவாமிகளைப் பார்த்த ஊரவர்கள் மழைப்பெட்டி கொண்டு போகிறார்கள் என்று கேலி செய்தனர். சுவாமிகள் வயலைச் சுற்றிப் பார்வையிட்டு வெளியேறினதும் எங்கிருந்தோ முகில்கள் ஒன்று கூடிமழை சோனாவாரியாகப் பொழிந்தன. சுவாமியைக் கேலி செய்தவரும் சுவாமிகளின் மகிமையை உணர முடிந்தது.



### சுவாமிகளின் உபதேசம்

சித்தானைக்குட்டிச் சுவாமிகள் பின்வருமாறு உபதேசம் செய்கின்றார்: "சாதுக்கள், சந்நியாசிகள், ஏன் இறைவனே வீட்டிற்கு வந்தால், அவர்களை உபசரித்து, ஒரு நேர உணவு அளி. அன்று தங்கி நிற்க உத்தேசித்தால் மகிழ்வோடு தங்கி நிற்க அனுமதி. அடுத்தநாள் காலை நோக்கத்தைப் பார்த்து வழி அனுப்பு. வீட்டுக்கு வந்த சந்நியாசியின் வயது நிலையைக் கவனித்து பிரயாணத்திற்கு வேண்டிய பண உதவி புரி. உன்னோடுதான் சில நாட்கள் தங்க வேண்டுமென்று, அவர் விரும்பினால் மண்வெட்டி ஒன்றைக் கொடுத்து நிலத்தைக் கொத்திப் பணிபடுத்துமாறு கட்டளையிடு. அல்லது கோடரியைக் கொடுத்து விறகு வெட்டச் சொல். நேரத்திற்குச் சாப்பாடு வழங்கு.

உண்மையான சாதுக்கள், சந்நியாசிகள் ஒரு இடத்தில் மூன்று நேரச் சாப்பாட்டிற்கு மேல் தங்கக் கூடாது என்ற விதியைக் கடைப்பிடிப்பார்கள். அதாவது, அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு முறையே உண்பவர்கள். அதுவும் மதியத்திற்கு முன் பிச்சை எடுத்து உண்டு விடுவார்கள். மதியம் கடந்துவிட்டால், அன்று பட்டினி கிடப்பார்கள். வேண்டிய உணவு ஒரு வீட்டிலேயே கிடைத்து விட்டால் வேறு வீடுகளுக்குப் பிச்சைக்காகச் செல்ல மாட்டார்கள்.

உணவுக்கு ஏழு வீடுகளில் மாத்திரம்தான் பிச்சை எடுக்கலாம். ஒருநேர என்ற நியதி உண்டு. ஏழு வீடுகளிலும் பிச்சை மறுக்கப்பட்டால், அன்று முழுநாளும் பட்டினியே கிடக்க வேண்டும். பிச்சைக்குப் போகும்போது பிச்சை பாத்திரத்தை முன் ஏந்தியராய், நிறை கருப்பிணி எண்ணெய்க் குடத்தைத் தாங்கி நடப்பதுபோல, நடந்து சென்று வீட்டின் முன்னால் தலை நிலத்தையோ பெருவிரலையோ பார்த்த வண்ணம் இறைவன் புகழைப் பாடிய வண்ணம் நிற்க வேண்டும். ஒரு பாக்குக் கடித்து உமிழக்கூடிய நேரம் தாமதித்து நிற்க வேண்டும். அதற்குமேல் தாமதிக்கக் கூடாது. திரும்பிவிட வேண்டும். பிச்சை பாத்திரத்தில் என்ன போடுகிறார்கள் என்று பார்க்கக்கூடாது. பிச்சை போட்டதும் ஏதாவது ஒரு நல் வார்த்தை அருளிச் செய்து திரும்ப வேண்டும். இக்கட்டுப்பாடு சாதக சந்நியாசிகளுக்கு மிகமிக அவசியமானது.

ஒருவன் சந்நியாசியாவதற்கு முன் யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். அதாவது கையில் பணம் இன்றி, எங்கு செல்லுகிறேன் என்ற எண்ணமின்றி, வாய்ப்பேச்சின்றி இறைவன் ஒருவனையே துணையாகக் கொண்டு முன்பின் அறியாத புதிய இடத்திற்குச் செல்ல வேண்டும். உணவு கிடைத்தால், உண்ண வேண்டும். எங்கு படுக்க நேருகின்றதோ அங்கு படுக்க வேண்டும்.

சுவாமிகளின் இந்த உபதேசம் சாதுக்களும் சந்நியாசிகளும் இல்லறத்தார்களும் எவ்வாறு ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

"நக்கிக் கண்ட நாயும் கொத்திக் கண்ட கோழியும் விட்டு நீங்கா" என்பது சுவாமிகள் அடிக்கடி கூறும் பழமொழியாகும்."உன்னையும் அறியாய் என்னையும் நம்பாய்.", "தூசித்தவன் துன்பத்தைக் கொண்டுபோவான். பூசித்தவன் புண்ணியத்தைக் கொண்டுபோவான்." இவை சுவாமிகளின் திருவாக்குகள்.

### மன்னார்க் கடலில் அகப்பட்டவர்களை மீட்ட அதிசயம்

மன்னார்க் கடலில் மீன்பிடிக்க நால்வர் சென்றிருந்தனர். அவர்கள் நால்வரும் நான்கு நாட்களாக கடலிலிருந்து திரும்பவில்லை. எவ்வித செய்தியும் கிடைக்காததால் வீட்டில் உள்ளவர்கள் துக்கம் கொண்டாடினர். வீட்டில் ஒரே அழுகை ஒலியாக இருந்தது. சுவாமிகள் மன்னாருக்குச் சென்றிருந்த சமயம் இந்த வீட்டில் அழுகை ஒலிக்குக் காரணம் என்ன என்று வினவினார். அவர்கள் உள்ளதைக் கூறினார்கள். சிறிது நேரம் கழித்துச் சுவாமிகள் அந்த வீட்டிற்கே சென்றார். அவர்களிடம் உற்றதை வினாவி அறிந்தார். ஒரு தென்னை மட்டையை எடுத்து முற்றம் முழுவதும் **"ஏலேயோ ஏலையிலோ"** என்று கூறிய வண்ணம் தாமே தண்டு வலித்துக் கீறினார். அரைமணித்தியாலமாக இது நிகழ்ந்தது. முற்றம் முழுவதும் புழுதிக்காடாக மாறிவிட்டது.

வீட்டில் உள்ளவர்கள் இது ஏதோ பைத்தியம் என்று நினைத்தனர். சிறிது நேரத்தில் கடலில் காணாமல் போன நால்வரும் வந்தனர். அழுகை ஒலி மகிழ்வொலியாக மாறியது. நால்வரும் சுவாமிகளின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். இந்தச் சுவாமிகள் இல்லாவிட்டால், நாங்கள் கடலில் ஆழ்ந்திருப்போம் என்றனர். சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்து காப்பாற்றினார் என்று கூறியதோடு இவர் எப்படி எங்களை விட்டு, இங்கே வந்து சேர்ந்தார் என்று ஆச்சரியமும் தெரிவித்தனர். இவை சுவாமியின் சித்துக்களில் அற்பமானவை. இந்நிகழ்வு சுந்தரமூர்த்தி நாயனார், வீட்டில் அழுகுரல் கேட்டு, அங்கு சென்று, முதலையுண்ட பாலகனை மீட்ட கதையை போன்றதாகும்.

### சித்தானை குட்டியார் சமாதியாகியமை

இத்தனை திருவிளையாடல்களை செய்த சித்தானைக் குட்டி சுவாமிகள் முத்தியடையும் காலம் வந்தது. சுவாமிகள் இந்நாள், இந்நேரம் சமாதி அடையப் போவதாக முன்னமே அறிந்திருந்தார்கள். இதனால் மூன்று நாட்களுக்கு முன்பே கந்தன் பரியாரியை அழைத்துத் தம்மோடு வைத்துக் கொண்டார்கள். தம்மோடு நெருங்கிய பத்தர்களுக்கெல்லாம் முன்கூட்டியே உணர்த்தியிருந்தார்கள். சுவாமிகள் சமாதி எய்துவதற்குச் சில நாட்களுக்கு முன்பு அன்பர் ஒருவருடைய இல்லத்தில் தங்கி இருந்தபோது, முகத்திலும் தலையிலும் மயிர் நீண்டு வளர்ந்திருந்தபடியினால் அவ்வன்பர் சுவாமிகள் சவரம் செய்விப்பதற்கேற்ற ஒழுங்குகள் செய்திருந்தார். சவரத் தொழிலாளி சோப்புப் பூசி முடிந்ததும், சுவாமிகள் தொழிலாளியின் கத்தியைத் தட்டிவிட்டு சவரம் செய்யாமலே எழுந்து சென்றுவிட்டார்கள். அன்று தொடக்கம் சுவாமிகள் சவரம் செய்விக்கவே இல்லை. சமாதி அடையப் போவதைச் சுவாமிகள் முதன்முதல் அன்பர்களுக்குக் காட்டிய அறிகுறி இதுவாகும்.

சுவாமிகள் தாம் முன்பு குறிப்பிட்டவாறு 10-08-1951ஆம். நாள் வெள்ளிக்கிழமை இறையடி எய்தினார்கள். பத்தர்கள் நாலாதிசைகளிலிருந்தும் வந்து கூடினார்கள். உடனேயே சித்தானைச் சேவா சங்கம் ஒன்று நியமித்து, சிலர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

இச்சங்கத்தினர் சமாதி வைப்பதற்கான ஒழுங்குகள் செய்தனர். நான்கு நாட்களாக கால்களை மடக்கி இருத்தி பூசை முதலியன நடைபெற்றன. ஒரு கன யார்க் கனபரிமாணத்தில் குழி ஒன்று தயாரானது. சாணிச் சாம்பல், உப்பு, செங்கல்மா வேப்பங்கரி, கற்பூரம், சந்தனத்தூள் ஆதியன அந்தர்க்கணக்கில் ஆயத்தமாயின. சமாதி ஆனபின் தமது அடிவயிற்றிலிருந்து இரத்தம் பெருகும் என்றும் அதன்பின்பே சமாதி வைக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார். மூன்றாம் நாள் அடிவயிற்றிலிருந்து இரத்தம் பெருகியது. உடலைவிட்டு உயிர் பிரிந்து உடல் இறந்தால் இரத்த ஓட்டம் எப்படி இருக்கும் என ஒரு சந்தேகம் வைத்தியர்களுக்கே எழுந்தது. நான்காம் நாள்தான் சமாதி வைக்கப்பட்டது என்றாலும், நான்கு நாட்களும் உடலில் எவ்வித மனமோ மாற்றமோ இன்றியேதான் இருந்தது. உடலில் உயிர்கொண்டு உலவியபோது செய்த சித்துக்கள் போலவே சமாதியடைந்த பின்பும் சித்துக்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். மகான்களுடைய சமாதிகளில் எழுந்த கோயில்களின் அற்புதங்களுக்கு மூலகாரணம் இச்சமாதிகளின் மகிமையே தான்.

ஆண்டுதோறும் ஆடித்திங்கள் விளக்கு (சுவாதி) நாண்மீன் நன்னாளில், சுவாமிகளுடைய குருபூசை தினம், காரைதீவிலுள்ள சுவாமிகளுடைய சமாதிக்கோயிலில், இரவும் பகலுமாக ஒரு முழுநாள் கொண்டாட்டமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# ஆனைமுகனின் அருள் பெற்று உய்தியடையச் செய்யும் ஆவணி நான்மைப் பிறைநாள் (சதுர்த்தி) விரதம்






திருமுறிகண்டிப் பிள்ளையார்

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை.**

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஓங்கார வடிவான விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆவணிச் சதுர்த்தி விரதமாகும். இந்த விரதம் ஆவணித் திங்களில் வரும் வளர்பிறை நான்காம் பிறைநன்னாளில் (சதுர்த்தி) நோற்கின்ற ஒரு சிறப்பான விரதமாகும்.

மகிமையும் நல்ல மாண்பும் புனிதமும் மிக்க புண்ணியமும் தரும் இவ்விரதம் சைவசமயிகளால் மிகவும் விரும்பி நோற்கப்படுகின்றது. இதை அனுட்டிக்க விரும்புவோர் அதிகாலையிலே எழுந்து தூய நீரில் நீராடி, முதலில் அனுட்டானம் செய்து, சங்கற்பித்துக் கொள்ளவேண்டும். பின்பு மாவிலை தேங்காய் எடுத்துக் கும்பம் வைத்து, விநாயகப் பெருமானை மனத்திலே தியானித்து, தூபதீபம் காட்டித் தொடங்கலாம். இந்த விரதநாள் முழுவதும் மனம் பொறிவழி போகாது கட்டுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவ்விரதத்திற்குப் பசுவின் சாணத்தை விட, புற்றுமண்ணால் செய்த பிள்ளையாரே பூசைக்கு உகந்தது. இந்த நாளில் காலை உணவை விடுத்து, மதியம் மட்டும் சிறு அமுது உண்டு, இரவு பால் பழத்துடன் நிறைவு செய்தல் சிறப்பாகும்.

இந்த நாளில் இரவு சந்திரனைப் பார்க்கக் கூடாது என்று கூறுவர். பொதுவாக "நான்காம் பிறை கண்டால் நாய்படாப்பாடு" என்று பழமொழி கூறுவர். ஆவணித் திங்களில் வருகின்ற, விநாயகருக்குரிய நான்காம் பிறை நன்னாள் சிறப்புடையது. இந்நாளில் விக்கினங்களை நீக்கியருளும் விக்கினேசுவரப் பெருமானுக்கு விசேட அமுதுகளாக அவல், சுண்டல் கடலை, பருப்பு, சர்க்கரைச்சாதம், மோதகம், வடை, எள்ளுருண்டை, பயறு, பாயாசம் முதலானவற்றை படைத்து வழிபாடியற்றுதல் சிறப்பு.

தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாதவர் விநாயகர். **"வி"** என்றால் மேலானது, **"நாயகன்"** என்றால் தலைவன். ஆகவே **"விநாயகன்"** மேலான தலைவன் எனப் பொருள்படும். இத்தகைய, அனைவருக்கும் மேலான தலைவராகிய, எங்கள் முழுமுதற் கடவுளாக விளங்குகின்ற ஆனைமுகனின் அருள் பெற்று, உய்தி அடைய ஆவணிச் சதுர்த்தி விரதமே சிறந்த நெறியாகும்.

விநாயகப் பெருமான் சிவபெருமானுடைய மூத்த திருக்குமாரர். எங்கள் முழுமுதற் கடவுளாகிய விநாயகப் பெருமான் ஆனைமுகம் கொண்ட அசுரனை வதைத்து, அவனையே ஆகு(எலி) வாகனமாக்கி தேவர்களுக்கும், அடியார்களுக்கும் காரிய சித்தியை அளிக்கும் கருணைக்கடவுளாகத் திகழ்கின்றார்.

**பிடியதன் உருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்**
**கடிகணபதி வர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.**



தெய்வத் தமிழ்ச்சுடர்,
கலாபூசணம்,
சிவத்திரு.
இராசையா ஸ்ரீதரன்

திருவருளே மேனியாக உடைய பிள்ளையாரை தினமும் நினைந்து வழிபடுவதுடன், ஆன்மாவின் அஞ்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானம் வர அருள வேண்டும் என்று இந்த ஆவணிச் சதுர்த்தி நன்னாளில் வேண்டுவது நன்மை பயக்கும். ஆனைமுகமும், பூதவயிறும், தெய்வத் திருமேனியும், ஒற்றைக்கொம்பும், மூன்று திருக்கண்களும், இரண்டு பெரிய செவிகளும், அங்குசம், ஒடித்த கொம்பு என்பவற்றை வலத்திருக்கரங்களிலும், பாசம், மோதகம் என்பவற்றை இடத்திருக்கரங்களிலும் தாங்கியவராய் விளங்குகின்ற இவரின், தும்பிக்கை மீது நம்பிக்கை வைத்து



பிள்ளையார்பட்டிப் பிள்ளையார்

வழிபாடியற்றினால் சகல நலன்களும் கிடைக்கப்பெறலாம்.

**"விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே**
**விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மை இனால்**
**கண்ணில் பணிமின் கனிந்து"**

என்ற பாடலானது விநாயகப் பெருமானின் தனிப் பெருங்கருணைத் திறத்தைக் காட்டுகின்றது.

விநாயகக்கடவுள், ஏக தந்தராயிருப்பது பரஞானபதி என்பதை உணர்த்துவதற்காகும். சூரியன், சந்திரன், தீ எனும் முச்சுடர்களையும் நிலைக்களமாய்க் கொண்டு, அருள் புரிந்து நிற்கும் இவர், **"ஓம்"** எனும் அருள் வடிவக் காட்சி தருகின்றார். ஞான சத்தி, கிரியா சத்தி என்பதைத் திருவடிகளும், எல்லா உயிர்களும் உலகமும் தம்முள் அடக்கம் என்பதை பெருவயிறும் குறிக்கின்றது.

ஆனைமுகம் கொண்ட அசுரனை வதைப்பதற்காக, முறித்த ஒரு கொம்பை ஏந்தியது, ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களையும் நீக்குபவர் தாம் என்பதை விளக்குவதற்காகும். விநாயகக் கடவுள் பாசத்தையும் அங்குசத்தையும் ஏந்தியது, தம்மைக் கட்டுப்படுத்தவோ ஆட்சி செலுத்தவோ பிறிதொருவருமில்லை என்பதை உணர்த்தும் அறிகுறியாகும்.

கண்ணுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான், தான் ஐந்தொழில் தலைவர் என்பதை தம்முடைய திருமுகங்கள் ஐந்தினாலும் உணர்த்துவது போல, விநாயகப் பெருமானும் தமது ஐந்து கரங்களினாலும் உணர்த்தி உலகம் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்கும் தாமே மூலமானவர் என்று உணர்த்தி நிற்கின்றார்.

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்திமகன் தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**

திருக்கோயில்கள் எல்லாவற்றிலும் முதற் பூசை விநாயகப் பெருமானுக்கேயாகும். அதற்குப் பிறகு தான் மூலமூர்த்திக்குப் பூசை நடைபெறும். இதிலிருந்து நாம் என்ன அறிகின்றோம்? எதற்கும் விநாயகரே முழுமுதற் கடவுளாவார். அவரின்றி எதுவுமே நடைபெறாது. எந்தக் காரியம் தொடங்கினாலும் முதலில் விநாயகரை வணங்கியே தொடங்கப்படுகின்றது.

தேவர்களின் தலைவன் தேவேந்திரன், சீர்காழியில் சிவபூசை செய்வதற்குப் பூக்கள் இல்லாமல் வருந்தியபோது, தனது குறையைப் போக்குமாறு விநாயகரை வேண்டவே, அவர் திருவருளால், காகமாக அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்ந்து, திருவிளையாடல் செய்து, காவிரி நதியைத் தோற்றுவித்ததாகவும், காகத்தை துரத்திய அகத்தியர், பிள்ளையாரின் அருட்காட்சி கண்டு, தலையில் குற்றி வழிபட்டதாகவும் காணப்படும் கதைகள் யாவரும் அறிந்ததே. இப்படி கணபதிநாதனின் அருமையும், பெருமையும் சொல்லி அடங்காது.

மூன்று முறை குட்டுவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மல நீக்கத்தின் பொருட்டாகும். தோப்புக் கரணமிடுவது **"நான், எனது"** என்ற அகங்கார வினையை நீக்கி, திருவருள் வசப்படுவதைக் குறிக்கின்றது. இவ்வாறு சிந்திக்குமிடத்து, விநாயகப் பெருமானே சகல வல்லமையும் படைத்த முழுமுதற்கடவுள் என்பது புலப்படுகின்றது.

ஆதலால், தினமும் பூவும் நீரும் கொண்டு, வணங்கி விநாயகப் பெருமானுடைய திருவருளைப் பெற்று, முத்தமிழும் கைவரப்பெற்று, சகல வளங்களும் பெற்று, உலகில் சுகவாழ்வு வாழ ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுட்டித்து உய்தி பெறுவோமாக.

**"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து உனக்கு**
**நான் தருவேன் கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே!**
**நீஎனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா" - நல்வழி**

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு திருநிலைநாயகி உடனுறை தோணியப்பர் திருக்கோயில் - சீர்காழி

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 14 ஆவது திருக்கோயில் - சீர்காழி)



ஊழிக்காலத்தில் உலகம் அழிந்த பின், கண்ணுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான் அறுபத்து நான்கு கலைகளையும் உடையாக உடுத்தி, “ஓம்” எனும் பிரணவ மந்திரத்தை தோணியாக்கி, உமையொருபாகனாராக வருகையில், ஊழிக்காலத்திலும் அழியாக் காட்சிதரும், இந்த சீர்காழி தலத்தை கண்டு, இதுவே அனைத்துக்கும் மூலமான திருக்கோயில் என்று தோணியுடன், தோணியப்பராக உறையும் அற்புதத் திருத்தலமே, திருநிலைநாயகி உடனுறை தோணியப்பர் திருக்கோயிலாகும். இத்திருத்தலம் திருஞானசம்பந்தரின் அவதாரப்பதியாகவும், அவர் ஞானப்பால் உண்டு அற்புதங்கள் நிகழ்த்திய ‘திருவாசகத் திருத்தலம்’ ஆகவும் விளங்குகின்றது.

**அமைவிடம்:** மயிலாடுதுறை மாவட்டம், தமிழ்நாடு

மக்கள் சீர்காழி என்றே இவ்வூரை வழங்குவார்கள். சிதம்பரம் முதலிய பல ஊர்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சிதம்பரத்தை அடுத்துள்ள தலம். அதிகளவானோர் விரும்பி வருகை தரும் தலம். சிதம்பரத்தை அடுத்து தொடர் வண்டி நிலையமும் உண்டு.

**இறைவர் திருப்பெயர்:** தோணியப்பர், சட்டை நாதர், திருப்பிரமபுரீசுவரர்.

**இறைவியார் திருப்பெயர்:** திருநிலைநாயகி, பெரியநாயகி.

**கோயில் மரம்:** பவள மல்லி (பாரிசாதம்)

**தீர்த்தம்:** பிரம தீர்த்தம் முதலாகவுள்ள 22 தீர்த்தங்கள்.

**வழிபட்டோர்:** முருகன், காளி, பிரமன், திருமால், குரு, இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, ஆதி சேடன், இராகு, கேது, வியாசர் முதலியோர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

**பாமாலை:** திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பூந்துருத்தி காடநம்பி, பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பிகள், அருணகிரிநாதர் முதலியோரும் பாடியுள்ளனர்.

### தேவார முதலிகளால் அருளிச் செய்யப்பட திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்தது

தோடுடைய செவியன் விடையேறிஓர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளம்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே

- சம்பந்தர் 1-1-1

### அப்பர் சுவாமிகள் அருளிச் செய்தது

சிந்தித்து எழுமனமே, நினையா முன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்கவல் லானை, பசுபதியை,
சந்தித்த காலம் மறுத்தும் என்று எண்ணி இருந்தவர்க்கு
முந்தித் தொழுகழல் நாள்தொறும் நம்தமை ஆள்வனவே

- அப்பர் 4-82-5

### சுந்தரர் அருளிச் செய்தது

மற்றொரு துணைஇனி மறுமைக்கும் காணேன்
வருந்தல் உற்றேன் மறவவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டஒண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே

- சுந்தரர் 7-58-2

### திருத்தலச் சிறப்பு

சோழநாட்டு வடகரைத் தலங்களுள் 14வது தலம். திருவாசகத் தலமான இக்கோயில் தருமை ஆதீனத்திற்கு உரித்துடைய கோயிலாகும். சம்பந்தப் பெருமான் ஞானப்பால் உண்டு பல அற்புதங்களை நிகழ்த்திய சிறப்புத்தலமாகும். இத்திருத்தலம் மீது நால்வர் பெருமக்களை விட பலரும் பாமாலைகள் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தப் பெருமான் மூன்று திருமுறைகளிலும், 67 பதிகங்கள் பாடியருளியுள்ளார்.


### இத்தல இறைவனுக்கு பன்னிரண்டு பெயர்கள் உண்டு

1. பிரமன் வழிபட்டதால் - பிரமபுரம்
2. இறைவன் மூங்கில் வடிவாகத் தோன்றியதால் - வேணுபுரம்
3. சூரனுக்குப் பயந்த தேவர்களுக்குப் புகலிடமாக விளங்கிய தல மாதலின் - புகலி.
4. குருவான வியாழன் வழிபட்டு, குருத்துவம் பெற்றமையால் - வெங்குரு
5. ஊழிக்காலத்தில் இறைவன் உமையோடு சுத்த மாயையைத் தோணியாகக் கொண்டு வந்து தங்கியிருந்ததால் - தோணிபுரம்.
6. பூமியைப் பிளந்து சென்ற இரணியாக்கனைக் கொன்றவராக மூர்த்தி வழிபட்டதால் - பூந்தராய்
7. தலைக்கூறாகிய இராகு பூசித்ததால் - சிரபுரம்.
8. புறா வடிவில் வந்த அக்கினியால் சிபி மன்னன் நற்கதியடைந்தமையால் - புறவம்.
9. சண்பைப் புல்லால் மாய்ந்த தம் குலத்தோரால் வந்த பழி தன்னைப் பற்றாதிருக்க, கண்ணபிரான் (திரு மால்) வழிபட்டதால் - சண்பை.
10. தில்லைப் பெருமானுடன் வாதாடிய குற்றம் போக, காளி இங்கு வந்து வழிபட்டதால் - சீர்(ஸ்ரீ)காளி (சீகாழி)
11. மச்சகந்தியைக் கூடிய கொச்சையாம் பழிச் சொல் நீங்கப் பராசரர் பூசித்ததால் - கொச்சை வயம்.
12. மலத்தொகுதி நீங்குமாறு உரோமச முனிவர் வழிபட்டதால் -கழுமலம் எனவும் பெயர் பெற்றது.

இத்திருக்கோயில் ஊர் நடுவே நான்கு கோபுர வாயில்களுடன் அழகுற விளங்குகிறது. கணநாத நாயனார் தொண்டு செய்து வாழ்ந்த தலம். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரின் நட்பைப் பெற்று, அவரால் அப்பர் எனப் பெயர்கொண்டு அழைக்கப் பெற்றப் பதி. சுந்தரர் இங்கு வந்தபோது, இஃது, சம்பந்தப்பெருமான் அவதரித்த பதி என்று மிதிப்பதற்கு அஞ்சி, நகர்புறத்து நின்று பாட, இறைவர் காட்சி தந்த பதி. திருநீலகண்ட யாழ்ப்பாணர், சம்பந்தரை வணங்கி, அவருடைய பதிகங்களை யாழிலிட்டு வாசித்து, சம்பந்தருடன் இருக்கும் பெருமைப் பெற்ற பதி. சீர்காழி அருணாச்சலக்கவிராயர் இத்திருக்கோயிலுக்கு தலபுராணம் பாடியுள்ள சிறப்புப் பெற்றப் பதியாகும்.

இங்குள்ள பிரமதீர்த்தமே பிறவற்றினும் மேலானது. இக்கரையில் தான் ஞானசம்பந்தர், ஞானப்பாலையுண்டார். **‘திருமுலைப் பால் உற்சவம்’** இன்றும் சித்திரைப் பெருவிழாவில் இரண்டாம் நாள் விழாவாக நடைபெறுகின்றது. ‘திருமுலைப் பால் உண்டார் மறுமுலைப்பால் உண்ணார்’ என்பது இப்பகுதியில் சொல்லப்படும் மொழியாகும்.

இத்தல இறைவன் திருமேனிகளுள், 1. அடிப்பாகத்திலுள்ள



பிரமபுரீசுவரர் பிரமன் பூசித்தது - இலிங்க வடிவம், 2. இடைப் பகுதியிலுள்ள தோணியப்பர் (ஞானப்பால் தந்தவர்) - குரு வடிவம், 3. சட்டை நாதர் - சங்கம வடிவம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

### திருத்தல வரலாறு

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர், சீர்காழியில் வசித்த சிவபாதவிருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் தவக்குழந்தையாக பிறந்தார். இவரை முருகனின் அம்சம் என்றும், இளைய பிள்ளையார் என்றும் வழங்குவர்.

இவர் தனது மூன்றாவது வயதில் தந்தையுடன் இத்தலத்திலுள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராட வந்தார். தந்தை இவரை குளக்கரையில் உட்காரவைத்து விட்டு, தான் மட்டும் நீராடச் சென்றார். அப்போது சம்பந்தருக்கு பசி ஏற்பட, **‘அம்மா! அப்பா!’** என அழுதார். இவரது அழுகுரல் கேட்ட சீர்காழிப்பதி உறையும் தோணியப்பநாதர், அம்மையாரை நோக்கி குழந்தையின் பசிக்கு பால் கொடுக்குமாறு பணித்தார். அதன்படி சம்பந்தருக்கு, அம்மையப்பர் திருக்காட்சி தந்து, மெய்ஞானம் கலந்த ஞானப்பாலை புகட்டினாள் அம்மை. சிவக்கன்றான சம்பந்தர், பசி தீர்ந்த வாயில் பால் வழிய அமர்ந்து விட்டார். குளித்து விட்டு வந்த தந்தை, **“பால் கொடுத்தது யார்?”** என்று வினவினார்.

எம்பெருமான் சம்பந்தர், மேலே அம்மையப்பர் காட்சி தந்த திசையை காட்டி, **“தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன் ஏடுடைய மலரான் உனை நாட்பணிந்தேத்த அருள்செய்த பீடுடைய பிரம்மாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே”** என்று பாடியருளினார்.

அன்று முதல் ஞானக்குழந்தையான சம்பந்தப்பெருமான், சீர்காழிப் பதியில் பல அற்புதங்களை அடியார்களிற்கு அருளிவந்தார்.

### திருக்கோயில் அமைப்பு

கிழக்கு இராச கோபுரம் பிரதான வாயில். வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் நேரே மூலவர் தோணியப்பர். பக்கத்தில் திருஞானசம்பந்தர் சந்நிதி உற்சவத்திருமேனியுடன் (கையில் பாற்கிண்ணம் ஏந்தி நின்ற நிலையில்) உள்ளது.



வீதியில் அறுபத்து மூவர் சந்நிதி உள்ளது. சோமாசுகந்தர் சந்நிதியும் வீதியில் அழகாகவுள்ளது. மலைப்படிகளேறிக் கட்டு மலையின்மீது சென்றால், ஞானப்பாலைத் தந்தருளிய தோணியப்பர் சந்நிதி. இச்சந்நிதி கயிலாய அமைப்பிலுள்ளது. அதற்கும் மேலேறிச் சென்றால் சட்டையப்பர் சந்நிதி. இச் சந்நிதி உயரத்தில் உள்ளது. குறுகலான வழியே நுழைந்து, மரப்படிகளேறிச் சென்று வணங்க வேண்டும்.

இப்பெருமானுக்குச் சட்டையப்பர், சட்டைநாதர், வடுக நாதர் எனப் பல பெயர்களுண்டு. கீழிறங்கி வலமாக வரும் போது மூங்கில் கன்றும், அதன் பக்கத்தில் பாரிசாதமும் உள்ளதைக் காணலாம். அடுத்துத் தேவேந்திரலிங்கம், ஒன்பான் கோள்கள் (நவகிரகம்), பிரமபுரீசுவரலிங்கம் என்பன உள்ளன.

இங்குள்ள 22 தீர்த்தங்களில் பிரமதீர்த்தக்குளம் முதன்மை வாய்ந்த தீர்த்தமாகும். முன்னால் வளைவு போடப்பட்டு, அதன் இரு புறங்களிலும், பிரமன் வழிபடுவது, தந்தையாகிய சிவபாதவிருதயருக்கு ஞானசம்பந்தர், தோணியப்பரைச் சுட்டிக் காட்டுவது, அம்பிகை பொற் கிண்ணத்தில் ஞானசம்பந்தருக்கு, ஞானப்பால் அளிப்பது முதலியவை சுதையால் அமைக்கப் பட்டுள்ளன. வீதியில் திருஞானசம்பந்தர் மூலச்சந்நிதி உள்ளது. அம்பாள் சந்நிதயும் நின்ற திருக்கோலத்தில் உள்ளது.

இத்திருக்கோயிலில் திருஞான சம்பந்தருக்கு நித்திய வழிபாடும், தைத்திங்கள் மறைமதி, வைகாசி மூலம், ஐப்பசி சதயம் ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடுகளும், மலைமேல் உள்ள பெரிய நாயகருக்கு நாடொறும் நான்கு கால பூசைகளும் நடைபெறுகின்றன. திருநிலைநாயகிக்கு ஆடிப்பூரம், ஒன்பானிரவு காலங்களில் சிறப்பு வழிபாடுகளும் உண்டு.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர் மேய
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மான் இவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல் எளிதாமே.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஈழத்துக் காசி என்று சிறப்பிக்கப்படும் மட்டுநகர் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்



கிழக்கிலங்கையில் புகழ்பூத்த சிவன் கோயில்களுள் பழமையும், பாரம்பரியச் சிறப்புக்களையும், தேசத்து வட்டாரச் சட்டதிட்டங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரமாகும்.

**"மோட்டெருமை வெண்டயிரும் முப்பழமுங் கற்கண்டும் போட்டினிய சீனி தேன் பொருந்து செந்நெல் வெண் சோற்றைக் கூட்டி யொன்றாய்க் குழைத்து"**

என்று புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை பாடுமாற் போல் பாலும் தயிரும், தேனும், மும்பழமும், காடும், வயலும் செழித்த வளங்களோடு விளங்கும் மட்டுநகருக்கு தெற்கே அமைந்துள்ள மண்முனைப் பிரதேசத்தில் வளம் பெற்ற பழம்பதியான கொக்கட்டிச் சோலைதனில் சிவனார் தான்தோன்றி இலிங்கமாக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகின்றார்.

### திருத்தல வரலாறு

இத் திருத்தலத்தின் தோற்றம் தொடர்பாக பல செவிவழி மரபுக் கதைகளும், மகாவம்சம், மட்டக்களப்பு மான்மியம் போன்ற சரித்திர புத்தகங்களும், கல்வெட்டுப் பாடல்களும் ஆதாரங்கள் பல செப்புகின்றன.

**அ. திருவேட்டைக் காவியம் கூறும் வரலாறு**

இக்கோயிலில் படிக்கப்படும் திருவேட்டைக் காவியத்தில் இக்கோயில் வரலாறு, கொக்கட்டியார் மரபோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. அதில் "கதிரமலையைத் தரிசிக்க இந்தியாவில் இருந்து வருகை தந்த முத்துலிங்கர், கொக்கட்டியர் எனும் இரு தபோதனரில், கொக்கட்டியர் தற்போது கோயில் இருக்கும் இடத்தில் சமாதியடைய, முத்துலிங்கர் அவரை சமாதியிருத்தி, கதிரமலையை வணங்கச் சென்றதாகவும், பின்பு அச்சமாதியிலிருந்து ஒரு இலிங்கம் உண்டாகி, கொக்கு நெட்டி மரமொன்றினால் மறைக்கப்பட்டிருந்ததாகவும், பின்பு தேன் தேடச் சென்ற வேடன் அம்மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்ததாகவும், இக்காட்சியை சொப்பனத்தில் காட்சி பெற்ற செட்டியார் எனும் கதிர்காம யாத்திரிகரால் கோயில் திருப்பணிகள் புரிந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் என்று அழைத்ததாகவும் கூறப்படுகின்றது.

**ஆ. உலகநாச்சி எனும் கலிங்க அரசியால் அமைத்த கோயில்**

மகாவம்சம், மட்டக்களப்பு மான்மியம் போன்ற சரித்திர நூல்களின் தகவல்களின்படி உலகநாச்சி என்னும் அரசியால் அமைக்கப்பட்ட திருக்கோயிலே கொக்கட்டிச் சோலைப்பதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"கலி பிறந்து 3500ம் வருடம் மட்டக்களப்பில் ஆட்சிக்கு வந்த குணசிங்கன் காலத்தில், கலிங்க ஓரிஷா தேசத்திலிருந்து உலகநாச்சி என்பவள் புத்தரின் சின்னத்தையும், முன்னோர்கள் கைலாயத்தில் போற்றிப் பேணிய சிவலிங்கத்தையும் கொண்டு, தன் சகோதரன் உலகநாதனுடன் இலங்கை வந்தாள். பின் மேகவர்ணனிடம் புத்த சின்னத்தைக் கொடுத்து, தனக்கு குடிகளற்ற காட்டுப் பிரதேச மொன்றை அன்பளிப்பாகக் கேட்க, அதற்கு மேகவர்ணன் மட்டக்களப்பு அதிபதியாகிய குணசிங்கனுக்கு திருமுகம் எழுதிக் கொடுத்து அனுப்பி வைத்தான். அதன்படி குணசிங்கனும் மண்முனையை நிவந்தமாகக் கொடுத்து, அங்கு குடிகளையும் இருத்தி, அரசி உறைவதற்கு மாளிகை ஒன்றையும் உருவாக்கிக் கொடுத்தான்.

பின் உலகநாச்சி இந்தியாவிலிருந்து 106 குகக் குடும்பங்களையும், 30 சிறைக்குடும்பங்களையும் வரவழைத்து குடியமர்த்தினாள். இவ் வேளையில் திகடன் என்னும் வேடர் தலைவன், களப்பு முனைக்காட்டில் தென்புறத்தில் காடுவெட்டும் போது, கொக்கு நெட்டி மரத்தினை வெட்ட, அம்மரத்திலிருந்து உதிரம் பெருகியது. அதனைக் கண்ணுற்ற வேடன் மரவெட்டுவாயை துணியால் கட்டிய பின் இச்செய்தியை உலகநாச்சிக்குத் தெரிவித்தான். உலகநாச்சியும் விரைந்து சென்று பார்த்த போது, அம்மரத்தில் சிவலிங்கம் ஒன்று உறைந்திருப்பது கண்டு ஆச்சரியமுற்று, அவ்விடத்தில் காடகற்றி துப்பரவு செய்து கோயில் கட்டினாள்" இச்செய்தி மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது.

இச்செய்தி ஆதியில் மரங்களை வழிபட்ட மக்கள் பின்னர், மரத்தின் அடியில் தெய்வம் உறைவதாக நினைத்து, அம்மர அடிப்பகுதியை வழிபட்டனர். இதுவே கொடிநிலை, கந்தளி, வள்ளி என்ற மூன்று வகை வழிபாடு என்று பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் பறைசாற்றும். கொக்கட்டி மரத்தின் அடியில் தோன்றிய சிவலிங்கமும் ஆதிவணக்க முறையின் எச்சமாக உணர்ந்தால், இக் கோயிலின் பழமையும், தொன்மையும் எமக்கு புலப்படும்.

**இ. மட்டக்களப்பின் நிதியதிபனுமாகிய தருமசிங்கனாலேயே இத்திருக்கோயில் கட்டப்பட்டது.**

பொலநறுவையில் அரசனாக இருந்த சேனன் என்பவனால், பாண்டிய நாட்டிற்கு அனுப்பப்பட்ட படையின் தளபதியும், மட்டக்களப்பின் நிதியதிபனுமாகிய தருமசிங்கனாலேயே இத்திருக்கோயில் கட்டப்பட்டது என்ற செய்தி மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குத் தகுந்தால் போல் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சர ஆரம்பக் கோயில் கட்டட அமைப்பான கருவறை, இடைகழி (கருவறைக்கும் மற்றும் பெரு மண்டபத்திற்கும் இடையே அமைந்த முன்கூடம் அல்லது முற்றம்), கருவறை மண்டபம் (அர்த்த மண்டபம்) என்னும் பகுதிகள் பாண்டியர் காலத்திற்குரியது என பேராசிரியர் கா. இந்திரபாலா என்பவர் இனங்கண்டுள்ளார்.

**ஈ. சோழர்காலத்தில் ஆதிக்கம் பெற்றமை.**

கிழக்கிலங்கையில் சோழர்களின் ஆதிக்கம் பரவிய காலத்திலும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரக் கோயில் செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. கி.பி 1223 இல் ஈழத்திற்கு வந்த சோழகங்கனே, கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக்கோட்டன் என்று ஐயுறும் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள், குளக்கோட்டனது திருச்சேவையைப் பெற்ற ஏழு தேசத்துக் கோயில்களில் திருக்கோணேசுவரத்திற்கு அடுத்து, சிறப்புப் பெற்ற சிவன் கோயில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீசுவரம் என்று ஒரு கல்வெட்டுப் பாடல் மூலமாகத் தெரிவிக்கின்றார்.

**"சீர் மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு**
**செல்வமும் சிவநேச இரு சமயமும்**
**செப்புதற் கரிதான மாணிக்க கெங்கையும்**
**செக மேவு கதிரமலையும்**
**ஏர் பெறும் தென் கயிலை வாழ் கோணலிங்கம்**
**மேன்மை தான் தோன்றுலிங்கம்.**
**வெற்றி புனை மயூர சித்திர சங்கார வேல்**
**வெள்ளை நாவற் பதிய தாம்**
**பேர் பெறும் தென் திருக்கோயில்**
**சிவாலயம் சிவபூசை தேவாரமும்**
**செய்முறைகள் என்றென்றும் நீடூழி காலமும்**
**தேசம் தளம்பாமலும்..."**



### தான்தோன்றி இலிங்கத்தின் சிறப்பு



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இத்திருக்கோயிலின் மூலவர், தானாகத் தோன்றி சுயம்பு வடிவில் கோயில் கொண்டு, அடியவர்களுக்கு அருள் சொரிந்து வருகின்றார். பொதுவாக இலிங்க வகைகளுக்குள்ளே தனிச்சிறப்பும் மகிமையும் கொண்டது தான்தோன்றி இலிங்கமாகும். இது யாராலும் உருவாக்கப்படாமல் தானாகவே ஒப்பற்ற கருணைவடிவமாக, அவ்வப்போது தோன்றும் இலிங்கமாகும்.

இச் சிவலிங்கம் சிதைவுறுகினும் கூட கிரியைகளிற்கு உட்படுத்தாமல் மீண்டும் வழிபடத்தக்க பெருமை பெற்றது. இத்திருக்கோயிலை, இத்தான்தோன்றி இலிங்கத்தின் ஆதி மூலம், சைவர்களின் புண்ணியத் தலமான காசி என்றும் கூறுவர். அந்த வகையில் ஈழத்தின் காசிநாதராகவும், சுயம்புவடிவினராகவும், தான் தோன்றுமப்பராகவும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம், மட்டு தேசத்தில் அருள் புரிந்து வருகின்றார். இத் தான்தோன்றீச்சரின் அற்புதத்தால், போர்த்துக்கீச படைத் தளபதியின் முன்னிலையில், குருக்கள் கொடுத்த புல்லை கல் நந்தி உயிர் கொண்டெழுந்து, உண்டு சாணம் போட்டு, மீண்டு கல் நந்தியான அற்புதத்தால், கோயிலை இடித்தழியாது தன்குதிரைப் படைகளுடன் வடக்குவாசலால் தப்பியோடியதும், வடக்கு மதில் சுவர் இடிந்து வீழ்ந்த சம்பவமும், இத்தல இறைவனின் திருவருளைப் பறை சாற்றுகின்றது.

இத் தலத்தில் கருவறை இலிங்கம் வெளியே தென்படாதபடி, பீடத்தின் மேலே உமைபங்கர் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. தீர்த்தம் கோயிலின் அருகாமையிலுள்ள திருக்கேணியும், தலமரம் கொக்கு நெட்டியும் ஆகும்.

மண்டூர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் பாடிய தான்தோன்றுமீசர் திருப்பதிகம் என்னும் பாடல்களில், ஒரு பதிகத்தில் இம் மூர்த்தியின் சிறப்புக்களை சிறப்பாக எடுத்தோதியுள்ளார்.

**"திருவருள் நிலையென நாத்திகரும்**
**தெளிந்துண்மை கண்டுனைத் தொழுதெழவே**
**திரு முன்னர் நின்ற கல் ஆனேறும்**
**தின்று புல் அசை போடச் செம்பரனே**
**ஒரு முதலே எல்லா மதங்களுக்கும்**
**ஒளி தரும் எங்கள் தான்தோன்றியப்பா**
**திரு நிறை தேவியும் நீயுமெங்கள்**
**சிறு குடில் தொறு மெழுந்தாண்டருளே."**

### அரசர்களின் ஆதரவுகள்

இக் கோயிலுக்கு குளக்கோட்டன், கலிங்க மாகன், விமல தர்மசூரியன், விக்கிரமசிங்கன் என்னும் மன்னர்கள் மானியங்கள் வழங்கினார்கள் என்ற செய்திகள் மரபு வழியாகக் கூறப்பட்டு வருகின்றன. இம்மன்னர்களால் வயல் நிலங்கள் வழங்கப்பட்டதாகவும், கோயிலின் பூசைக்குரிய திட்டங்களை வகுத்தளித்ததாகவும் கூறப்படுகின்றது. இன்றுவரை இம்மன்னர்கள் வழங்கிய நிலமானியம் நடை முறையில் இருந்து வருகின்றது. இதற்கு குருக்கள் பரம்பரைக்கு கொடுக்கப்பட்ட தேவிலாமுனை பள்ளி கொண்டான் வெளியும், வேளாளருக்கு கொடுக்கப்பட்ட அத்தியாமுன்மாரி வெளியும் சான்றாகும்.

குறிப்பாக கலிங்கமாகோனின் ஆட்சிக் காலத்தில் கிழக்கிலங்கையில் திருக்கோணேசுவரம், திருக்கேதீசுவரம், தான் தோன்றீசுவரம் போன்ற கோயில்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அங்கு வீரசைவ மரபுகளும் செழித்திருந்தன. மட்டக்களப்பு மான்மியம் (பக் -79) எனும் நூலில் கலிங்க மாகோன் கொக்கட்டிச் சோலை தான் தோன்றீசுவரத்திற்கு செய்த பணிகள் குறிப்பிட்டுள்ளது.

**"தேரோடு கோபுரம் தீர்த்தக் குளமும்**
**படிக் கெதிர் வாவி பத்ததி முறையால்**
**வையகம் புகழ் மட்டக் களப்பில்**
**செய்தனன் மூன்று திருச் சந்நிதிதான்"**

மட்டக்களப்பு மான்மியத்தில் இடம் பெறும் **"பங்கு கூறும் கல்வெட்டு"**, **"சாதித் தெய்வக் கல்வெட்டு"**, **"தாதன் கல்வெட்டு"**, **"போடி கல்வெட்டு"**, **"முக்குகர் வன்னிமை"** முதலியவை கொக்கட்டிச் சோலையோடு தொடர்புடைய கல்வெட்டுப் பாடல்களாகும். இவற்றில் **"பங்கு கூறும் கல்வெட்டு"** மற்றும் **"பங்கு தடுக்கும் முறை கல்வெட்டு"** என்பன மாகோன் இக்கோயிலுக்கு வகுத்துக் கொடுத்த விதிமுறைகளைக் கூறுகின்றது. இவர் வகுத்த கல்வெட்டுப்பாடல்கள் இன்றும் இக்கோயிலில் சுவாமி சூகர வேட்டைக்குப் போகும் போதும், கஞ்சிமுட்டி கூறும் போதும் (குடுக்கை கூறல்) படிக்கப்பட்டு, அதன்படி சட்டதிட்டங்கள் செய்யப்பட்டு வருவதும் கணக்கூடியதாக உள்ளது. **"பங்கு கூறும் கல்வெட்டு"** பாடல்களில் மாகோன் வகுத்த கோயில் கடமைகளும், யார், யார் முன்னுரிமை அடிப்படையில் **"வரிசை"** வாங்குவோர் பற்றிய விபரம் கூறப்பட்டுள்ளது.

**(19ஆம் பக்கம் பார்க்க)**

# சிவபூமியில் சிவனைத் தேடி...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

**"குருவளர் கலிங்கன் செகதலம் புகழ**
**மரு மலர் தேவ தொண்டரை வகுத்து**
**ஆலய மியற்றி அணிமணி அமைத்துச்**
**சீலமோ டானுரு செய்தாங் கிருத்தி**
**மறையோன் றன்னை வாவென வழைத்து**
**முறையாய்ப் பூசை மூன்றிரு நேரம்**
**உறுமன் குலத்தாய் மேவி ஆலயத்தில்**
**அறகொடு தற்பை ஆவின் பால் கனி**
**நற் நெய் பொங்கல் நல்லின நீரொடு**
**சிறு தேன் சருக்கரை தேங்காய் கரும்பு**
**மற்பொரு மாங்கனி வருக்கன் தேங்காய்**
**அற்புத முடனே, அநேக வர்க்கமும்**
**சேர்த்து நீ படைத்துச் சிவனார்க் கூட்டச்**
**சூத்திரர் சாதி தொழுது உன்னூழியம் புரிய**
**வகுப்பொடு வகுப்பாய் வாழுமைகளறிந்து**
**செகத்தோர் துதிக்கத் திருவேட்டை சென்று**
**ஆடிப் பாடி ஆறி அங்கிருந்து."**

**"ஆரார்க்கு முன்பின் அளிப்பது என்ன**
**திறலோன் கலிங்கன் செம்பினன்**
**பெரிய திருப்பதி வாசல்**
**அறமுயர் வேதம் நம்பியரி திருப்பாட்டுச்**
**சரிகை சன்னாசம் தார் வளர்."** இவ்வாறான கல்வெட்டுப் பாடல்கள் மூலம் இக்கோயிலுக்கு கலிங்க மாகோன் புரிந்த திருப்பணிகள் நன்கு புலப்படுகின்றது.

### திருக்கோயில் நிர்வாக அமைப்பு

இத்திருக்கோயிலின் நிர்வாக அமைப்பானது பழமை வாய்ந்தது. இக்கோயிலின் தலைவர்களாக, மூன்று வண்ணக்குமார் தனித்தனியாகவும் கூட்டாகவும் இயங்குவர். இவர்கள் **"முற்குகர்"** என்னும் குடியைச் சார்ந்தவர்கள். காலிங்காகுடி, உலகிப் போடிகுடி, படையாண்ட குடி என்னும் மூன்று குடிகளிலிருந்தே வண்ணக்குமார் பதவி வகிப்பர். இவர்களுள் காலிங்காகுடி தலைமைப் பதவிக்கும், உலகிப் போடி குடி பொருளாதார விடயங்களுக்கும், படையாண்டகுடி நிருவாக நடைமுறைகளுக்கும் பொறுப்புடையவர்களாக விளங்குவர்.

இங்கு பூசனைகள் புரியும் பூசகர், வீரசைவ மரபைச் சார்ந்தவர் ஆவார். இங்கும் பூசகர் தாய்வழி உரிமையாக, மருமக்கள் வழியில் பூசைகள் புரியப்பட்டு வருகின்றனர். கலிங்க மாகோன் இக்கோயிலுக்கு வகுத்த **"பங்கு கூறும் கல்வெட்டு"**, திருக்கோயில் தொண்டினை மக்கள் உட்கடமை, வெளிக்கடமை எனப் பிரித்து மிகக் கட்டுக் கோப்புடன் புரிந்து வந்துள்ளனர் என்பதனைப் பறை சாற்றுகின்றது.

**"கலிங்கனே உனது கட்டளைப்படியே**
**இலங்கை மாநகரில் ஈசராலயத்தில்**
**வீதி துலக்கும் வேளார்க் கடிமைகள் மாதுலர் கோயிலார்**
**வரிசைப் பண்டாரம்**
**குசவர் கொல்லர் கோனார் தொழுவர்**
**திசை புகழ் முதலி செக்கன் சாணான்**
**யீரங் கொல்லி மீட்டியன் பள்ளு**
**வாரந்தட்டி மாலை தொடுப்போன்**
**கடையன் துரும்பர்க்குக் காராளனீந்து"**

இதே போல், மக்களை ஏழு குடிகளாய் பிரித்து, அவர்கள் கோயிலுக்குள் விளக்கேற்றல், பூவெடுத்தல், தூசு அகற்றல், சாணம் இட்டு மெழுகல், பூமாலை கட்டுதல், மேளம் அடித்தல், சந்தணம் அரைத்தல், நெல்லுக் குற்றுதல், சுவாமி காவுதல், அமுதுவைத்தல் போன்ற திருத்தொண்டுகளைப் புரிய வேண்டும். என்றும் மாகோன் வகுத்த அரன் ஊழியம் குறிப்பிடுகின்றது.

**"கண்டனோடு சருகு பில்லி கட்டப்பத்தன்**
**கருதரிய கவுத் தனுமத்தியாயன்**
**மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று**
**கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்**
**பண்டு முறை தவறாமல் ஏழ குடியாய்ப்**
**பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்**
**அண்டர் தமைச் சாட்சி வைத்துத் தத்தம் வாங்கி**
**அரனகத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்."**

இவர்கள் செய்யும் சிறப்பான கோயிற் கடமைகள் கருதி அவர்களை **"கோயிலார்"** என்ற சிறப்புப் பெயராலும் அழைப்பர். தற்காலத்தில் இக்குடிகளில் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இவ்வாறு இக்கோயிலின் ஒரு திருவிழாச் சேவைக்கு எழுபது மரக்கால் நெல் படியாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நெல்லானது கோயில் தொண்டர்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டும் வருகின்றது.

இக் கோயிலின் நிர்வாக வேலைகளைக் கவனிக்க ஒன்றுகூடுகின்ற பொதுமக்களை **'தேசம்'** என்றும், தேசத்துக் கூட்டம், தேசமகாசவை என்றும் இன்றளவும் வழங்கி வருகின்றது. தேசத்துக் கூட்டம் நடைபெறும் போது தேசத்து வன்னிமையின் தலைமையிலேயே நடைபெற்று வந்துள்ளது. காலப்போக்கில் இவை மாற்றம் அடைந்து, காலிங்க, உலகப்போடி, படையாட்சி போன்ற குடியினர் தலைமையில் இந்நேசத்துக் கூட்டம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### பூசைகளும் விழாக்களும்

ஆரம்பத்தில் வீரசைவ மரபுகளுக்கும், வீராகம விதிமுறைகள் சார்ந்த வண்ணமே, இங்கு பூசகர்கள் பூசைகளையும் திருவிழாக்களையும் நடாத்தி வந்ததாகக் கூறப்படுகின்றது. தற்காலத்தில் அந்தணர்களும் பூசைகள் ஆற்றிவருவதை அவதானிக்க முடிகின்றது. நாள்தோறும் காலை, மாலை, உச்சி ஆகிய முக்காலத்திலும் பூசை தவறாது இடம்பெற்று வருகின்றது. இங்கு ஆற்றப்படும் பூசனைகள் களுவாஞ்சிக்குடி, வந்தாறுமூலை என இரு ஊரவர்களால் சுழற்சி முறையில் செய்து வருகின்றனர்.

இக்கோயிலின் வருடாந்த பெருந்திருவிழாவானது ஆவணித்திங்கள் உத்தர நாண்மீன் நன்னாளில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நிறைமதியை அடுத்துவரும் நாளில் தேரோட்டமும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் உள்ளடக்கியதாக பதினாறு நாட்கள் திருவிழா நிகழ்ந்து வருகின்றன. பதினாறு நாட்களும் உபாயகர்களுடன் சிறப்பாக திருவிழா இடம்பெறும்.

இத் திருவிழாக்களில் தேர்த்திருவிழாவானது, இக்கோயிலுக்கு மட்டுமன்றி மட்டக்களப்பு நகர் எங்கிலும் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தது. மதிய பூசையுடன் 2 மணியளவில் ஆரம்பமாகும், தேரோட்டம் மாலை 6 மணி வரையும் பெருந்திரளான பத்த அடியார்களின் **"அரோகரா"** ஒலியுடனும், மாலைக் காட்சியுடனும் நிறைவுபெறும்.

தேரோட்டத்தில் இரண்டு தேர்கள் வலம் வரும். அதிலொன்று சித்திரத் தேர் ஆறடி விட்டங் கொண்ட ஆறு சில்லுகளையும் 16×16 நீள அகலங்களையும், 60 அடி உயரமும் 5 அடுக்குகளையும் கொண்ட மிகப் பெரிய தேராகும். ஆயிரத்திற்கு மேற்பட்ட மரச்சிற்பங்கள், அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. இத்தேர் இலுப்பை மரத்தால் ஆனது. சோழ நாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட பழந்தேராக இன்றும் ஓடக் கூடியவகையில் இருப்பது, தான்தோன்றியப்பனின் அற்புதம் என்றே கூறவேண்டும். இத்தேரில் சோமசுகந்தர் வலம் வருவார். மற்றைய பிள்ளையார் தேரில் பிள்ளையாரும், முருகனும் வலம் வருவார்கள்.

தேரோட்டம் நிறைவு பெற்றதன் பின்பு இரவு நேரத்தில், ஆணவமலத்திற்கு ஒப்பான பன்றியை வேட்டையாடி ஆன்ம ஈடேற்றம் நல்குவர் என்ற பாவனையில், இவ் வேட்டைத் திருவிழா நடைபெறும். இதனை **"சூரகவேட்டை"** (சூரகம்-பன்றி) எனவும், **"பன்றி தின்றவன் பரமஞானி"** என்றும் இப்பிரதேச மக்கள் அழைப்பதுண்டு. இத்திருவேட்டையின் போது பாடல்கள் ஒவ்வொரு பாவணையில் பாடப்படும். இதனை அடுத்து **"குடுக்கை கூறல்"** என்னும் நிகழ்வு, அனைவரும் சூழ்ந்திருக்க நடைபெறும். கோயிலுக்கு தொண்டாற்றிய அனைவருக்கும் முட்டி கூறும் கல்வெட்டு படிக்கப்பட்டு, அவர்களுக்கு உரித்தான பங்கு சீர்வரிசையாக



வழங்கப்படும். இவை மட்டக்களப்பு பிரதேசத்தின் திருப்படைக் கோயிலாக நீண்ட காலமாக திகழ்ந்துவரும் தான்தோன்றீச்சரப் பெருமான் கோயிலின் பெருமையையும் திருப்படைப் பத்ததியின் சிறப்பினையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இவை தவிர தைத் திருநாள், தைப்பூசம், மாசிமகம், சிவனிரவு, பங்குனி உத்தரம், சித்திரை வருடம், சித்திரக்கதை, ஆனி உத்தரம், ஆடி மறைமதி, திருக்கார்த்திகை, பெருங்கதைப் பூசை, திருவாதிரை முதலிய விசேட தினங்களிலும் பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. மற்றும் நெற்பயிர்ச் செய்கைகளோடு தொடர்புடைய தனித்துவமான பூசைகளும்



இக்கோயிலில் நடைபெற்று வருகின்றன. புதிர் எடுத்தல், புதிர் கொடுத்தல், புதிர்உண்ணல், கறியமுது படைத்தல் என்பனவே அத்தனித்துவமான வழிபாடுகளாகும்.

### திருத்தலச் சிறப்புக்கள்

பண்டைக்கால அரசர்களது மதிப்பும் மானியங்களும், சீர்வரிசைகளும் பெற்று, தேசம் முழுவதற்கும், எல்லா மக்களுக்கும் உரித்துடைய கோயிலாகையால் **'தேசத்துக் கோயில்'** என்றும் **'திருப்படைக் கோயில்'** என்றும் சிறப்பிற்கப்படுகின்றது. எல்லா தான்தோன்றி இலிங்கங்களுக்கெல்லாம் ஆதி மூலமாய் விளங்குவது காசியில் உள்ள இலிங்கமேயாகும். அத்தகைய தான்தோன்றி இலிங்கம் கொக்கட்டிச் சோலையில் எழுந்தருளி அருளாட்சி புரிவதனால் ஈழத்தின் காசிலிங்கேசுவரராகவும் போற்றப்படுகின்றார்.

மட்டக்களப்பில் அன்று தொன்று இன்று வரை வீரசைவ வழிபாட்டின் சிறப்பிற்கும், வீராகம முறைப்படி பூசைகள் நடை பெற்று வரும் ஒரே ஒரு சிவன் கோயில் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. கொக்கட்டி மரத்தில் தானாக எழுந்தருளி இருக்கும் தான்தோன்றி இலிங்கேசுவரரின் அருள் அற்புத சத்தி வாய்க்கப் பெற்றது. போர்த்துக்கேய தளபதி கொடுத்த புல்லை கல் மாட்டிற்கு கொடுக்க அது உயிர் பெற்று, எழந்து நின்று, புல் உண்ட அதியத்தால், மட்டக்களப்பு சைவக் கோயில்களெல்லாம் இடித்தழிக் கப்படாமல் பாதுகாத்தமைக்கு தான்தோன்றியப்பரின் அருளற்புதமே காரணம். மட்டக்களப்பில் தேரோடும் ஒரே ஒரு சிவன் கோயில் என்ற பெருமையைப் பெற்றது.

### கோயில் இலக்கியங்கள்

கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலின் வரலாற்றை மட்டக்களப்பு மான்மியமே முதல் முதலில் செப்புகின்றது. குறிப்பாக பெரிய கல்வெட்டுப் பாடலில் வரும் சரித்திரம், தல வரலாற்றுடன் தொடர்புபட்டவை. மற்றும் திருப்படைப் பத்ததியில் வரும் திருவேட்டைக் கவி, திருப்படைத்தர்க்கம் ஆகிய பாடல்கள் தலத்தில் இடம்பெறும் வழிபாடுகளையும் மக்களின் தொண்டுகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் ஆடப்படும் நாட்டுக்கூத்துக்களிலும், மற்றும் பல கிராமிய இலக்கியங்களிலும் இவ்வீசன் மீது பல காப்புப் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன.

இவற்றை விட வெற்றிலைக்காரப்புலவர் என்று சொல்லப்படும் சின்னப்புலவரும், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களும் தான்தோன்றீச்சரர் மேல் தலா ஒரு, ஒரு பதிகங்கள் பாடியுள்ளனர். மகிழை, மகேசன், பண்டிதர் செ. சிவப்பிரகாசம் ஆகியோர் இச்சிவன் மீது திருவூஞ்சல் பாடியுள்ளனர். அம்பிளாந்துறையூர் அரியரன் தான்தோன்றீச்சரர் மீது காவடிச்சிந்து பாடியுள்ளார். திமிலைத் துமிலன் இவ் ஈசன் மீது அந்தாதி பாடியுள்ளார்.

இலங்கையில் தான்தோன்றி இலிங்கக் கோயில்கள் இரண்டே உள்ளன. ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஓட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் மற்றையது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம். இதில் மட்டு தேசத்தில் ஒட்டு மொத்த சைவப்பண்பாடுகளையும், சமூகப் பண்பாட்டு பாரம்பரியங்களையும் கட்டிக் காக்கின்ற பிரதேசத்துக் கோயிலாகவும், மண்முனைப் பிரதேசத்தின் மிகப் பெரிய சைவக் கோயிலாகவும் விளங்குகின்றது.

**தான் தோன்று மீச்சரத் தனிப்பெருமை வாழி**
**தக்கபடி தொண்டு செயும் தக்கோர்கள் வாழி**
**வானுயரும் ஈசனது வளர்கோட்டம் வாழி**
**வந்துவழி படுபவர்கள் சந்ததமும் வழி**
**ஊனுருகி நின்று தமிழ் உரைப்பவர்கள் வாழி**
**உள்ளன்பு மிக்கவர்கள் ஊழி தொறும் வாழி**
**தேன் மருவு கொக்கொட்டிச் சோலை யுகந்துறையும்**
**சிவன் ஈழத் தமிழ்த் தெய்வம் சிறந்து வாழியவே.**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆடி நிறைமதியும் தென்னாடு இதழ் வெளியீடும் (11.08.2022)



ஆடித்திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடு (09.08.2022)



ஆவணித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடு (24.08.2022)



தென்னாட்டில் உலர் உணவுப்பொதி வழங்கல் (13.08.2022)



முழங்காவிலில் சிவன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டல் (19.08.2022)



விநாயகர் சதுர்த்தி (31.08.2022)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து நான்காவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 25ம் நாள் நிறைமதி அன்று (10-09-2022 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org